நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

PUTHIYA POOMI

புதிய பூமி

சுற்று 06 ஏப்ரல்/மே 1999 பக்கம் 12 விலை ரூபா 10/= சுழற்சி 28


## விரைவில் ?

- விரைவில் யுத்தம் முடிவுக்கு வந்து விடும்.
- விரைவில் சமாதானம் நாட்டில் ஏற்படும்.
- விரைவில் பாதை திறக்கப்படும்.
- விரைவில் பயணிகள் கப்பல் சேவைக்கு வரும்.
- விரைவில் வன்னிக்கு உணவு மருந்து அனுப்பப்படும்.
- விரைவில் தோட்டத் தொழிலாளர்கள் முதலாளிகள் ஆவர்.
- விரைவில் தோட்டங்கள் கிராமங்கள் ஆகும்.
- விரைவில் முஸ்லீம்கள் யாழ்ப்பாணம் திரும்புவர்.
- விரைவில் தீர்வுப் பொதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.
- விரைவில் ஜனாதிபதித் தேர்தல் வரும்.
- விரைவில் அமெரிக்கா வரும்!
- விரைவில் முழு நாடும் மக்களும்?

# அடுத்த ஆட்சிக் காலத்திலும் யுத்தம் தொடரும்!

இன்றைய பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியில் யுத்தம் முடிவுக்கு வரும் என்னும் நம்பிக்கை பொய்த்து பழம்கதையாகிக் கொண்டிருக்கிறது. அடுத்து யார் ஆட்சிக்கு வந்தாலும் கூட யுத்தம் நிறுத்தப்படாது தொடரப்படுவதற்கான சூழல்களே வலுப்படுத்தப்படுகின்றன. மக்கள் யுத்தத்திற்கு எதிராக கிளர்ந்து எழாத வரை







மேலும் பல வருடங்களுக்கு யுத்தம் நீடிக்கப்படுவதுடன் மற்றொரு கோசாவோவாக நாடு மாறி விடவே செய்யும்.

யுத்தத்தை நிறுத்து, பேச்சுவார்த்தையை நடாத்து, நியாயமான அரசியல் தீர்வு காண். அரசாங்கத்தை நோக்கி உரத்துக் குரல் கொடுக்கப்படுகிறது. நேர்மையான இடதுசாரி சக்திகள், நாட்டில் சமாதானத்தையும் இயல்பு வாழ்வையும் விரும்பும் மனிதர்கள், மத–சமூகப் பிரமுகர்கள், யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வரும் அனைத்து மக்கள் பல்வேறு நிலைகளிலும் வழிகளிலும் யுத்த எதிர்ப்புக் குரல்களைப் பிரதிபலிக்கின்றனர். ஆனால் அரசாங்கம் இவை எவற்றையும் செவிகளில் போட்டுக்கொள்ளத் தயாராக இல்லை. அண்மையில் ஜனாதிபதியை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்த இரத்தினபுரி திருச்சபை ஆயரிடம் யுத்தத்தை எவ் வகையிலும் நிறுத்த முடியாது என திருமதி சந்திரிகா கூறி விட்டார்.

யுத்தத்தை எதிர்த்து சமாதான முழக்கங்களோடு பதவிக்கு வந்த இந்த அம்மையார் ஒரு சில மாதங்களுக்குள் யுத்தப் பேரிகை முழங்கியதன் பின்னணிதான் என்ன? விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சு வார்த்தையை முறித்து தாக்குதல் தொடுத்த கதையைத் தான் மீண்டும் மீண்டும் கீறல் வீழ்ந்த பாடல் போல் ஒலிக்கிறார்கள். அவ்வாறு சமாதானப் பேச்சுவார்த்தை முறிந்து போவதற்கான சூழலை ஏற்படுத்தியதில் அரசாங்கத்தின் அணுகுமுறையும் எதிர்மறைப் பங்களிப்பும் எந்தளவுக்கு இருந்தது என்பதையிட்டு அரசாங்கமும் அவர்களது எடுபிடிகளும் பேசுவதில்லை. புலிகள் தவறு இழைத் திருந்தாலும் சமாதானத்திற்கான ஆணைபெற்று ஆட்சிக்கு வந்தவர்களின் பொறுப்பும் கடமையும் எத்தகையது என்பதைக் காண மறுப்பது கண்மூடித்தனமான புலி எதிர்ப்பு வாதமேயாகும். இது பேரினவாத ஒடுக்குமுறையின் ஒவ்வொரு கொடுரத்தையும் நியாயப் படுத்துவதாகும்.

திருமதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரணதுங்கா பதவிஏற்றுக் கொண்டபின் மூன்று சக்திகள் சூழ்ந்து கொண்டன. ஒன்று சிங்கள பௌத்த பேரினவாதிகள். இரண்டு ராணுவ யுத்தவாதிகள் – மூன்று அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள். இவர்களது ஆலோசனை வழி நடத்தலில் வழிநடக்க இணங்கிக் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா யுத்தத்தை உக்கிரப் படுத்திக் கொள்ளும் ஒருவராகத் தன்னை மாற்றிக் கொண்டார். அவருக்கு கிடைத்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் வெளிவிவகார அமைச்சரும் வீடு எரிக்கும் ராசாவிற்கு நெருப்பு எடுத்துக் கொடுக்கும் மந்திரிகள் போல் ஆனார்கள். அமைச்சர் ரத்வத்தை அமெரிக்காவின் பயங்கர ஆயுதங்களை கொண்டு வந்து குவிக்கிறார். அமைச்சர் கதிர்காமர் அமெரிக்காவின் ஆலோசனைகளை ராஜதந்திரப் பேச்சுவார்த்தை என்ற பெயரில் பெற்று வந்து கொடுக்கிறார்.

யுத்தம் வெற்றி பெறுவதற்கு இதுவரை வருடாவருடம் கொடுக்கப்பட்டு வந்த காலக் கெடுக்கள்

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

# தொண்டமானின் அடுத்த குண்டு!

'சிங்கள வீரவிதான' என்ற இனவாத இயக்கத்திற்கு ஆதரவளிப்பவர்களை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திலிருந்து ஓரம்கட்டா விட்டால் மத்தியமாகாண சபையில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்க்த்திற்கு இந்திய வம்சாவளி பேரணி ஆதரவு கொடுக்கப் போவதில்லை என்று இ.தொ.கா. தலைவர் தொண்டமான் கூறியுள்ளார்.

தேர்தலுக்கு முதல் தமிழ்நாட்டு அரசாங்கம் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களுக்கு பாரிய உதவிகளை செய்யவிருப்பதாக தேர்தல் குண்டை போட்டார் என்பது நினைவிருக்கலாம். இப்போது அவர் போடும் குண்டு மத்திய மாகாணசபையில் அமைச்சர் பதவிகளை பெறுவதற்கான குண்டு என்பது தெளிவாகிறது. மாகாண சபையில் அமோக வெற்றியை பெற்றிருந்தால் அமைச்சர் பதவிகளை பெற வலுவுடன் பேரம் பேசி இருக்கலாம். பெரும் எண்ணிக்கையில் வாக்குகள் கிடைத்காதபடியால் ஒரு சலசலப்பை ஏற்படுத்தவே இக்குண்டை போடுகிறார்.



அத்துடன் சிங்கள வீரவிதான அமைப்புக்கு ஏதிராக பேசுவதன் மூலம் மலையக தமிழ் மக்களிடம் தனது சரிந்துபோன செல்வாக்கை நிமிர்த்த முயற்சிக்கிறார். சிங்கள விரவிதான அமைப்பு பற்றி தற்போதுதான் தெரிந்து கொண்டது போல் கதைக்கிறார். இந்த இயக்கமும் பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணியும் கொழும்பிலுள்ள அவரது வீட்டிற்கு ஊர்வலமாக சென்று அவரின் வீட்டு மதிலில் தொண்டமான் புலிகளை ஆதரிப்ப தாக நிந்தித்து கடந்த வருடம் போஸ்டர் ஒட்டியபோது அதற்கு அவர் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. மாறாக அச்செயல்களின் மூலம் அவ்வியக்கங்கள் அவற்றின் ஜனநாயக உரிமைகளை வெளிக் காட்டியுள்ளதாகவே கூறியிருந்தார்.

சிங்கள வீரவிதான இயக்கம், பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணி போன்ற அமைப்புக்கள் மலையக தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பற்றியும், இனப்பகையை கூர்மையடையச் செய்ய மலையகத்தில் இனவாத பிரசாரங்களை முன்னெடுத்து வருவதாகவும் புதிய பூமி எழுதி வந்துள்ளது. அவ்வியக்கங்களில் அழுத்தத்தினாலேயே மலையக தமிழ் கிராம சேவகர் நியமனங்களும், மலையகத் தமிழ் அரசாங்க லிகிதர்கள் நியமனங்களும் இடைநிறுத்தப்பட்டன சீத்தா எலியவில் சீதையம்மன் கோவில் கட்டுவதும் இடைநிறுத்தப் பட்டது. இவற்றை எதிர்த்து அட்டன் நகரில் பெப்ரவரி 14ம் திகதி புதிய இடதுசாரி முன்னணி ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையும், கூட்டத்தையும் நடத்தியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அப்போதெல்லாம் மௌனமாக இருந்துவிட்ட தொண்டமான் கடந்த மே தினத்தனது சிங்கள வீரவிதான இயக்கத்தினருக்கும் இ.தொ.கா. வினருக்கும் இடையே ஏற்பட்ட தகராற்றிற்கு பிறகு மௌனம் கலைத்திருக்கிறார்.

அவ்வாறான இனவாத இயக்கத்தை தடை செய்யுமாறு கோரிக்கை விடவும் அவருக்கு துணிவு இல்லை. அதற்கு எதிராக மலையக மக்களையோ சிங்கள மக்களையோ போராடும்படி அறைகூவல் விடுக்கவும் இல்லை.

# இலங்கையில் நேட்டோ தலையீடு? கொழும்பில் குண்டு போட வேண்டுமாம்!

யூகோஸ்லாவியாவிலுள்ள கொசோவோ முஸ்லீம் மக்களின் உரிமைகளை பாதுகாக்கவென காட்டிக் கொண்டு அமெரிக்காவின் தலைமையில் நேட்டோ படைகள் யூகோஸ்லாவியாவை தாக்கி வருகின்றன. இந்த தாக்குதலினால் யூகோஸ்லாவியாவின் முக்கிய பல பொருளாதாரத் தலங்கள் தகர்க்கப்பட்டுள்ளன. அத்துடன் எந்த கொசோவோ மக்களுக்காக யுத்தம் செய்வதாக நேட்டோ கூறுகிறதோ அம்மக்கள் நேட்டோ படையினரால் கொசோவோ விலிருந்து வெளியேற்றப் பட்டுள்ளனர். கோசோவோ தேசிய விடுதலை முன்னணியில் பிளவு ஏற்பட்டுள்ளது. நேட்டோ படைகள் தாக்கத் தொடங்கிய பிறகு கொசோவோவை தனிநாடாக பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்துடைய பிரிவினர் நேட்டோவின் தாக்குதலை ஆதரித்து அமெரிக்க ஆதரவாளர்களாகியுள்ளனர். அத்தாக்குதல்களைத் தொடர்ந்து ஒரு பிரிவினர் யூகோஸ்லாவியா இனவாத ஜனாதிபதி சிலோபோடான் மிலேசெவிக்கு ஆதரவு தெரிவித்து அதிகாரங்கள் கூடிய கொசோவோ சமஷ்டியை பெற்றுவிட வேண்டும் என்றும் நேட்டோ தாக்குதலை எதிர்க்கின்றனர். நேட்டோ தாக்குதலினால் யூகோஸ்லாவிய அழிக்கப்படுவது மட்டுமின்றி கோசோவோ விடுதலைப் போராட்டத்தின் ஒரு முகப்பட்ட தன்மையும் சிதைக்கப்பட்டுவிட்டது.

இது இவ்வாறிருக்க இலங்கை தமிழர்கள் சார்பாக நேட்டோவோ அமெரிக்காவோ தலையிட வேண்டும் என்று சில தமிழர் அமைப்புகளும், பிரமுகர்களும் கேள்வி எழுப்பியுள்ளனர். கோசோவோவிற்கு ஆதரவாக பெல்கிரேட்டின் மீது குண்டுபோட முடியுமானால் தமிழீழத்திற்கு சார்பாக கொழுப்பின் மீது நேட்டோ குண்டு போடாதது ஏன் என்று முன்னாள் அமெரிக்கா வெளிவிவகார அமைச்சர் ஹென்றி கிசிங்ஹர் எழுப்பியுள்ள கேள்வி சில தமிழ் அமைப்புக்களையும், பிரமுகர்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இதனால் இலங்கையின் பௌத்த, சிங்கள பேரினவாத அமைப்புகளில் சிலவும், அதிர்ச்சியடைந்துள்ளன. அவை அமெரிக்கா கொசோவோ பிரச்சினையிலிருந்து 'இலங்கை தமிழீழ' பிரச்சினையை வித்தியாசப்படுத்திப் பார்க்க வேண்டும் என்று கூக்குரலிடுகின்றன.

இனப்பிரச்சினையில் மூன்றாவது தரப்பினரின் மத்தியஸ்துவம் என்பதனையும் நேட்டோவின் தாக்குதலையும் வித்தியாசப்படுத்திப் பார்க்காதபடியால்தான் சில தமிழ் அமைப்புக்களுக்கும், தமிழ் பிரமுகர்களுக்கும் ஒரு விதமாகவும்; பேரினவாதிகள் இன்னொரு விதமாகவும் அர்த்தப்படுத்த முனைகின்றனர்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கும்

(தொடர்ச்சி 11ம் பக்கம்.)

நன்றி - நூலகத்திட்டம்



# கொழுந்து நிறுப்பதில் கொள்ளை! தட்டிக் கேட்பது யார்?

1823ம் ஆண்டில் இருந்து மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு வகையான அடக்கு முறைகளுக்கும், சுரண்டல்களுக்கும் உட்படுத்தப்பட்டனர். இதை யாவரும் அறிவோம். ஆனால் இன்றைய நிலையில், நிகழ் காலத்தில் இவ் விடயத்தினை நாம் கவனித்து பார்ப்போமானால் இந்திய மண்ணில் இருந்து இம்மக்களை இங்கு கொண்டுவரப்பட்ட நேரத்தில் இருந்த பித்தலாட்டங்களை விடவும் மிகவும் மோசமான வகையில் சுரண்டல் களுக்கு உட்படுத்தப் படுகின்றனர். அவற்றை இன்றைய திறந்த பொருளாதா நிலை நியாயப்படுத்தி சுரண்டுவோரை உயர்த்திப் பிடித்தும் காட்டுகின்றது.

இப்படியான சுரண்டல்களை பட்டியலிட்டு அலம்புவதைவிட மிகச் சுருக்கமாக மலையக மக்களின் வாழ்க்கையே சுரண்டல்காரர்களின் தங்கச் சுரங்கம் என்று கூறலாம். காரணம் இவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் மிக நுணுக்கமாக, நவீனமாக சுரண்டப் படுவதாலாகும்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் இன்றைய நவீனமான சுரண்டல் களுக்கு மத்தியிலும் பழங்கால கண்மூடித்தனமாக சுரண்டல் களுக்கும் நேரடியாக உட்படு கின்றனர். காலையில் இருந்து மாலை வரை வெயில், மழை, காற்று என்றும் பாராமல் ஒவ்வொருநாளும் பல மைல்கள் நடந்து அட்டைகள் இரத்தத்தை உறிஞ்சி, தேயிலை கட்டைகள் காயப்படுத்த கொழுந்த பறிக்கின்றனர். ஆனால் இவர்களுக்காக 'ஓவர் ரைம்' ஒன்றும் கிடையாது. இத்தொழிலாளர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டது ஒன்று தான். இது பறிக்கப்பட்ட கொழுந்து நிறையை விட மேலதிகமாக பறிக்கப்படும் ஒவ்வொரு கிலோவுக்கும் 3ரூபா 50சதம் தரப்படும். இவ் விடயமும் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் எவ்வளவு இழிவாக சுரண்டப்படு கின்றார்கள் என்பதற்கும், உழைக்கும் மிருகங்களாக கணிப்பிடப் படுகிறார்கள் என்பதற்கும் சிறந்த ஆதாரமாகும்.

விடயம் இவ்வாறு இருக்க, நிறுக்கும் போது நடைபெறும் பம்மாத்து வேலையே மிகவும் கடுமையாக தொழிலாளர்களில் வயிற்றில் அடிப்பதாகும். கொழுந்து பறித்து வந்தப் பின்னர் ஒவ்வொரு தொழிலாளியும் பறித்த கொழுந்து நிறுக்கப்படும். அதற்காக ஒரு பெரிய கூடை பயன்படுத்தப்படும். இதில் கூடைக்கான நிறை 3.5கிலோ ஆகும். ஆனால் பல்வேறு தோட்டங்களில் இக் கூடை பயன்படுத்தப்படாமல் 'யூரியா பேக்' பயன்படுத்தப்படுகின்றது. இந்த யூரிய பையின் நிறை 50கிராம் மாத்திரமே. இருந்தும் இதற்காக கழிக்கப்படும் நிறை 3.5கிலோ ஆகும்.

ஒரு தொழிலாளி சாதாரணமாகவே 3.5 கிலோவுக்கும், கிலோ 3ரூபா 50 சதப்படி 12 ரூபா 25சதம் விட்டுக் கொடுக்கின்றார். ஒரு நேரத்துக்கு இது, ஒரு நாளைக்கு 3முறை நிறுவை நடைபெறுகின்றது.

12.25 x 3 = 36.75

மாதம் 20 நாட்கள் வேலை எனின்
36.25 x 20 = 735.00 ரூபாவும்
வருடத்திற்கு
735.00 x 12 = 8820.00 ஆகும்.

ஆக சுருக்கமாக குறிப்பிட்டால் ஒரு தொழிலாளியின் கொழுந்து நிறுவையில் இருந்து வருடத்துக்கு தோட்டம் 8820.00 ரூபாவை நேரடியாகவே கொள்ளை அடிக்கின்றது. இப்பணம் உண்மையாகவே கஷ்டப்பட்டு உழைத்த நேர்மையான தொழிலாளர்களின் உழைப்புக்குச் சேரவேண்டியப் பணம் ஆகும்.

ஒரு வகையில் இச் சுரண்டல் முறை ஆரம்பகால பண்ணை அடிமைகளை சுரண்டியது போல் இருக்கின்றது. நவீனமாக சிந்தனைகள் வளர்ந்து மனிதன் வேறு கிரகத்துக்கு காலடி வைத்த காலத்தில் இப்படியும் ஒரு சுரண்டலா?

ஆகவே தொழிலாளர்களே!, இது வரையிலும் பொறுத்தது போதும். நமது உண்மையான உழைப்பே கொடுக்க மறுக்கப்படுகின்றது. நமக்காக தொழிலாளர் போராட்ட வழி இருக்கின்றது. தொழிலாளர்களின் சக்திக்கு முன்னால் அனைத்துமே தலைவணங்கும். இப்படியாக அபார சக்தி படைத்த வர்க்கம் முடங்கிக் கிடந்தது போதும். எழுந்து நிற்போம்! உரிமைகளை வென்றெடுக்க!

**இராகலை மார்க்ஸ்**

# காசுக்காக தாயைக் கூட விற்பார்கள்

ஒடுக்கப்பட்ட சிறுபான்மைத் தேசிய இன மக்களைப் பிளவு படுத்துவதில் ஒடுக்குமுறையாளர்கள் மும்முரமாக நிற்பதில் அதிசயம் இல்லை. சிறுபான்மைத் தேசிய இனத்தினுள் உட் பகைமையை விதைக்கிற பிழைப்புவாதிகள் இருப்பதிலும் அதிசயமில்லை. இன்று மட்டக்களப்பு – யாழ்ப்பாணம் என்ற பேதத்தைப் பேசுவதில் மும்முரமாக நிற்கிற சிலரைக் கவனித்தால் அவர்களது இலக்கு பதவி அல்லது பணம் என்று நாங்கள் காணலாம். இந்த வரிசையில் ஒரு 'போர்ச்செய்தி நிபுணரும்' சமீபத்தில் சேர்ந்துள்ளார்.

சிங்களப் பேரினவாத யூ.என்.பியின் ஒரு குழுவினரின் பிரசாரச் செய்தி பத்திரிகையான சண்டே ரைம்ஸில் போர் பற்றிய கட்டுரைகளை இவர் தராகி என்ற பேரில் எழுதுகிறார். வெகு காலமாகவே விடுதலைப் புலிகட்குச் சாதகமான அம்சங்களை வலியுறுத்தி எழுதி வந்தவர் இவர். இவருடைய பழைய அரசியல் இயக்கம் இன்று அரசாங்கத்துடன் சல்லாபம் செய்கிறது. சென்ற பத்து. வருடங்களாக போர்ச் செய்தி நிபுணராகத் தன்னை உருமாற்றிப் போர்ச்செய்தி மூலம் நிறையச் சம்பாதிக்கிற இவர் திடீரென்று மட்டக்களப்புப் பிரதேசவாதத்தின் குரலாகிவிட்டார். இந்த அதிசயத்திற்கான காரணம் என்ன? இவரை ஆசிரியராக வைத்து ஒரு புதிய ஆங்கில ஏட்டை நடத்தும் முயற்சியில் ஏற்பட்ட சிக்கல்களால் இந்த மட்டக்களப்புத் தேசியவாதம் உருவானதா?

யாழ்ப்பாணத்தில் காணாமற் போனோர் பற்றி யாழ்ப்பாணிகள் உலகெங்கும் உரத்துப் பேசுவதாகவும் மட்டக்களப்பு விடயம் பற்றி எதுவுமே பேசப்படுவதில்லை என்றும் முறைப்படுகிற இவர் கோணேஸ்வரி விடயத்தையும் கிருஷாந்தி விஷயத்தையும் ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

கிருஷாந்தி விடயத்தில் சாட்சிகள் இருந்ததாலேயே வழக்கு விசாரணையும் தீர்ப்பும் செம்மணி புதை குழிகள் வரை இட்டுச் சென்றன. இதை எல்லாரும் அறிவார்கள். மட்டக்களப்புப் படுகொலைகள் பல யூ.என்.பி. ஆட்சிக்காலத்திலேயே மூடிமறைக்கப் பட்டன. கோணேஸ்வரி விடயத்தில் சாட்சியங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. இது பற்றி விசாரணை நடத்தும்படி விடுக்கப்பட்ட கோரிக்கைகள் யாழ்ப்பாணம் – மட்டக்களப்பு முரண்பாடு காரணமாகத்தான் தோல்வி அடைந்தனவா?

இன்னமும் செம்மணி பற்றி எதுவும் செய்யப்படவில்லை. அதற்குள் துரையப்பா விளையாட்டரங்கு அயலில் எலும்புக் கூடுகள் அகப்பட்டுள்ளன. இதுவும் 'யாழ்ப்பாணிகளின்' சாதனை என்று தான் தராகி சொல்கிறாரா?

யாழ்ப்பாணமாயினும் மட்டக்களப் பாயினும் வன்னியாயினும் மலையகமாயினும் இலங்கையின் எந்தப் பகுதியாயினும் ஏழைகளுக்குச் செய்யப்படும் கொடுமைகளை எதிர்த்து தேசிய வாதிகள் குரல் கொடுப்பதில்லை. தப்பித் தவறியே பல உண்மைகள் வெளி வருகின்றன. தயக்கத்துடனேயே அரசின் கொலைக் கரங்கட்கு எதிரான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பெரும்பாலான கொலையாளிகள் தப்பி விடுகிறார்கள்.

மக்களுக்கு எதிரான அரச வன்முறையும் மனித உரிமை மீறல்களும் பற்றிய ஒற்றுமையான வெகுஜன முயற்சிகள் மிகவும் தேவையான இவ்வேளையில் சிங்களத் தாய்மார் செம்மணி பற்றிக் குரல் கொடுக்கின்றனர். இது நல்ல அடையாளம். இதே நேரத்தில் போரை வைத்துப் பிழைப்பு நடத்துகிற இந்தப் பேர்வழி யாழ்ப்பாணிகளுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருப்பது ஏன்?

எந்த மனித உரிமை மீறலும் பிரதேசவாத நோக்கிலோ வேறு குறுகிய நோக்கிலோ அலட்சியம் செய்யப்பட்டால் அதைக் கண்டிக்கிற கடமை உண்டு. இப்பிரச்சினையில் லாபம் தேடும் நோக்கில் பிரதேச வாதத்தைப் பாவித்து மக்களைப் பிளவு படுத்துவது மிகவும் கீழ்த்தரமான பிழைப்பு வாதமாகும்.

பிரதேச வேறுபாடின்றி மனித உரிமை மீறல்களையும் படுகொலைகளையும் கண்டிக்கிற ஒவ்வொருவர் மீதும் தொடுக்கப்பட்ட தாக்குதலாகவே இந்தப் பிழைப்புவாதப் பொறுக்கித்தனம் கருதப்பட வேண்டும்.

மட்டக்களப்பு, மலையக, வன்னித் தமிழ் மக்கள் எளிதாகவே இந்தக் கயமையை அடையாளங் கண்டு கொள்வார்கள் என்பதில் நமக்குச் சந்தேகம் இல்லை.

குறுகிய தேசியவாதத்தில் இறங்கியவர்கள் விரக்தியின் விளைவாக தங்கள் சொந்த நலன்கட்காக மக்களைப் பிளவு படுத்தும் காரியங்ககளில் இறங்குவார்கள். அவற்றில் ஒன்று இந்தப் பிரதேசவாதப் பொறுக்கித்தனம்.

**வன்னியர் கோன்**

# நாலும் நடக்கும் உலகிலே

## போன ஜூலை திரும்பி வராது!

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவாதம் தந்திருக்கிறார். ஜூலை கலவரம் நாட்டில் இன்னொருமுறை நிகழாது என்பது அவரது உறுதிமொழி. வருடத்தில் வேறு பதினொரு மாதங்கள் உள்ளன. எனவே ஜனவரி கலவரம் வரலாம், ஜூன் கலவரம் வரலாம், ஒகஸ்ற் நொவேம்பர் கலவரங்களும் வரலாம். எது வந்தாலும் ஒன்று மட்டும் உறுதி. ஜூலை கலவரம் மட்டும் வராது. அதைவிட உறுதி 1983ம் ஜூலை கலவரம் இன்னொருமுறை வரவே வராது. ஏனென்றால் 1983ம் ஆண்டு எப்படியும் திரும்பி வராது என்று கடவுளிடம் அவர் வரம் வாங்கி வந்திருக்கிறார். வடக்கிலும் கிழக்கிலும் மக்கள் படையினரால் இம்சிக்கப்படலாம், பட்டினியிடப் படலாம், மலத்தினும் இழிவாக நிந்திக்கப்படலாம், கொழும்பிலும் தெற்கிலும் அவர்கள் தினமும் அஞ்சி நடுங்கிக் கொண்டு இருக்கலாம். 1983ம் ஆண்டு திரும்பி வராது. எனவே 1983ஜூலை பற்றி அஞ்ச வேண்டாம். அரசாங்கம் அதை விடச் சிறப்பான தேசிய ஐக்கிய வன்முறைகளைக் கைவசம் வைத்துள்ளது.

## தொண்டா தன் பெருமை!

பேரன் ஆறுமுகம் சாமியை அரியாசனம் ஏத்துகிற திட்டத்துக்கு உருவாக்கப்பட்டது மயில் சின்னம். மயில் சின்னத்துக்கு வாக்களிக்காத கொழும்பு வாழ் தமிழர்களை சுயநலமிகள் என்று திட்டியிருக்கிறார் தன்நலம் கருதாத தொண்டருத் தொண்டரான தொண்டமான் நாயனார். சிவபதவிக்காகப் பிள்ளைக் கறி சமைத்த ஒரு நாயனார் இருக்கிறார். தன் கண்ணைப் பறிந்த நாயனார் இருக்கிறார். வெறும் அரசாங்க மந்திரிப் பதவிக்காக மலையக மக்கள் எல்லாரையும் குருடர்களாக்கவும் துணிந்த தொண்டமானுடைய தொண்டுக்கு முன்னால் அவர்கள் எம் மாத்திரம்.

தொண்டமானடிப்பொடிகளின் அரசியல் வலிமை மலையகத்திலும் தேய்ந்து வருகிறது. ஆனாலும் அவரிடமிருந்து விலகி ஓடுகிறவர்கள் எங்கே ஓடுகிறார்கள்? யூ.என்.பியின் பக்கம் இல்லையா ஓடுகிறார்கள். அது ஏன்? பேரம் பேசியே எல்லாவற்றையும் பெறுவதுதான் இ.தொ.கா. அரசியல் என்று பெருமை பேசிய தரகரின் உதவி இல்லாமலே யூ.என்.பியுடன் பேரம் பேசுகிற வியாபாரக் கூட்டம் ஒன்று 1977க்குப் பிறகு உண்டாகி விட்டது. இப்போது ஸ்ரீ.ல.சு.கட்சிக்குப் பின்னால் போகிற ஒரு சிறய கூட்டமும் உண்டாகி இருக்கிறது. முன்னம் தொண்டமானை நம்பி ஏமாந்த பேர்கள் பின்னம் மலையக மக்கள் முன்னணிக்குப் பின்னாலே போய் ஏமாந்தார்கள். இப்போது அவர்களும் சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவது மேல் என்று யூ.என்.பியிடம் போய்ச் சேர்ந்திருக்கிறார்கள் இவர்களெல்லாம் தொண்டமான் வளர்த்த சந்தர்ப்பவாதக் குஞ்சுகள். குருநாதர் கற்றுக் கொடுத்ததை அவருக்கே திருப்பிக் கற்றுக் தருகிறார்கள். மெச்ச வேண்டியவர்கள் மேல் ஏன் குருவானவர் கோபப்படவேண்டும்?

## வர வர . . .

ஜே.வி.பி. தனது அயல் முதலீட்டுக் கொள்கையை சமகால உலக நிலையைக் கணிப்பிலெடுத்து மாற்றிக் கொள்ளப் போவதாகவும் சீனாவும் கியூபாவும் கடைப்பிடிப்பது போன்ற திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்க இருப்பதாகவும் அதன் தலைவர்களுள் ஒருவர் அறிவித்துள்ளார். இங்கு கேள்விக்குரியது என்னவென்றால் வலிமையான ஒரு சுதேசிய, அரச பொருளாதாரத் தளம் உள்ள இரு நாடுகள் தங்களது குறிப்பான நிலைமைகளில் கடைப்பிடிக்கும் கொள்கையை நவகொலனிய இரும்புப் பிடியிலிருந்து விடுபடத் திணறுகிற ஒரு நாட்டுக்கு ஏற்ப நாம் எவ்வாறு அமைப்பது என்பதே. ஜே.வி.பி. அந்நிய முதலீடு பற்றிய ஒரு தெளிவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும், அதே வேளை அந்நிய முதலீடு பற்றி மக்களுக்குத் தனது நிலைப்பாட்டை ஐயத்துக்கு இடம் இல்லாமல் முன்வைக்க வேண்டும்.

## ஐந்தில் வளையாதது?

தேசிய இனப்பிரச்சினையில் ஜே.வி.பியின் நிலைப்பாடு ஸ்ரீ.ல.சு.க. யூ.என்.பி. இரண்டினதையும் விடவும் தமிழ் மக்களது சுயாட்சிக்குப் பாதகமானது. சுயநிர்ணயம் பற்றி அதற்கு இன்றளவும் மிகுந்த தயக்கம் உள்ளது. அதன் வளர்ச்சி பெருமளவும் மஹஜன எக்சத் பெரமுன (எம்.ஈ.பி.) என்ற சிங்கள இனவாத 'இடதுசாரி' கட்சியின் சரிவுடன் ஓட்டி நிகழ்ந்துள்ளது பற்றி நாம் மகிழ்ச்சியடைய இடமுண்ட. ஆயினும் தேசிய இனப்பிரச்சினையில் ஜே.வி.பி. நியாயமான ஒரு நிலைப்பாட்டையும் சுயநிர்ணயத்திற்குத் தெளிவான ஆதரவையும் தெரிவிக்காத அளவில் எம்.ஈ.பிக்கும் ஜே.வி.பிக்கும் வேறுபாடு இல்லாமலே போய் விடும். இந்த விதமான அச்சத்தை நியாயப்படுத்தும் விதமாகவே ஜே.வி.பியின் ஏடொன்று இரண்டு மாதங்கள் முன்பு மலையக மக்களை மிகவும் இழிவுசெய்து எழுதியிருந்தது. 5% வாக்குக்கள் பெற்றுள்ள நிலையில் ஜே.வி.பி. இனவாத அரசியலைக் கைவிடத் தவறுமென்றால் தேர்தலில் இதிலும் பெரிய வாக்கு விகிதத்தைப் பெறுகிற போது அதைத் திருத்துவது இன்னும் கஷ்டமாகி விடும்.

## தமிழை வாழ வைத்தவர்

தமிழன் எக்ஸ்பிரஸ் என்கிற வலதுசாரி பார்ப்பனிய ஏட்டில் சுஜாதா என்கிற இலக்கிய வியாபாரி எழுதியிருந்ததை வாசித்தேன். இவ்வளவு காலமும் தாங்கள் தமிழை வாழ வைத்தார்களாம். இனி இன்றா்நெற்றில் தமிழ் வந்து விடுமாம். அதன் பிறகு தமிழ் தங்கள் எல்லாரையும் வாழ வைக்குமாம்.

இந்தக் கும்பல் தமிழை வைத்துத் தான் அன்றும் பிழைப்பு நடத்தியது. இனியும் பிழைப்பு நடத்த இருக்கிறது. தமிழ் வாழ்ந்து வருகிறது என்றால் அது இந்த வியாபாரிகளது சீரழிவு வேலைகளை எல்லாம் மீறி வாழும் வலிமை தமிழுக்கும் தமிழிலேயே செயற்படும் சாதாரணத் தமிழ் மக்களுக்கும் உண்டு என்பதாலே தான்.

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

**PUTHIYA POOMI** පුදිය පූමි

S-47, 3வது மாடி, கொழும்பு மத்திய சந்தைக்கட்டிடத் தொகுதி, கொழும்பு 11, இலங்கை. தொலைபேசி இல. 435117, 335844


## ஆட்சியும் வேலைநிறுத்தமும்

''அரசாங்க திணைக்களங்களிலும், நாட்டின் ஏனைய துறைகளிலும் வேலைநிறுத்தம், சட்டப்படிவேலை, மறியல் இயக்கம், பகிஷ்கரிப்பு போராட்டங்கள் என்பனவற்றை அரசாங்க எதிர்ப்பு சக்திகள் தூண்டிவிட்டு வருகின்றன. இச் சக்திகள் அரசாங்கத்திற்கு நெருக்கடிகளைக் கொடுத்து அரச நிர்வாகங்களைச் சீர்குலைக்கும் தீய எண்ணத்துடன் செயல்படுகிறார்கள். தொழிலாளர்களும் தவறான வழிநடத்தல்களுக்குப் பின்னால் போகிறார்கள். அனைத்துத் தொழிற்சங்கங்களும் மிக விழிப்புடன் இருக்க வேண்டும்.'' மேற்கண்டவாறு அமைச்சர் அலவிமௌலானா தெரிவித்துள்ளார். அலவி மௌலானா அமைச்சர் மட்டுமின்றி நீண்டகால சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கங்களின் தலைவருமாவார்.

அமைச்சரின் கூற்று எதை உணர்த்துகிறது என்றால் தொழிலாளர்களோ, ஊழியர்களோ, உத்தியோகத்தர்களோ எவ்வித கோரிக்கைகளையும் முன்வைத்து வேலைநிறுத்தம், பகிஷ்கரிப்பு, சட்டப்படி வேலை, மறியல் போன்றவற்றில் ஈடுபடக் கூடாது என்பதாகும். அப்படி ஈடுபட்டால் அது அரசாங்க எதிர்ப்பு சக்திகளால் வழிநடாத்தப்படுகின்றது என்பதாகவே அர்த்தப்படும் என்பதாகும். அதாவது தாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கும் போது யாவற்றையும் செய்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது சரியானது. ஆனால் தாங்கள் ஆட்சியதிகாரத்திற்கு வந்த பின் ஏனையயோர் கோரிக்கை வைப்பது தவறானதாகும் என்னும் நிலைப்பாடு தான்.

அமைச்சரின் கூற்றுப்படி பார்த்தால் இந்த அரசாங்கத்தின் கீழ் தொழிலாளர்கள் ஊழியர்கள் உத்தியோகத்தர்கள் எவருக்குமே எவ்வித பிரச்சினையும் இல்லை. வேண்டும் என்றே அரசாங்கத்தை எதிர்த்து நிர்வாகத்தை சீர்குலைக்க முற்படுகிறார்கள் என்று குற்றம் சாட்டுவதாகும். ஆனால் உண்மை நிலை எதிர் மாறானதாகும். இன்று ஏகப் பெரும் பான்மையான தொழிலாளர்கள் ஊழியர்கள் உத்தியோகத்தர்கள் யாவரும் உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவினால் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் நாளாந்தம் ஏறிக் கொண்டே இருக்கின்றன. அரிசி முதல் மரக்கறி வரை தேங்காய் தொட்டு மீன் வகை ஈறாக விலையேற்றம் மக்களைத் தடுமாற வைத்துள்ளது. இவற்றுடன் வேலை உத்தரவாதம், தனியார் மயத்தின் மூலம் ஏற்பட்டு வரும் நாசங்கள் போன்றன தொழிலாளர்களை அச்சமடையச் செய்துள்ளது. யுத்தத்திற்காக அறவிடப்படும், பாதுகாப்பு வரி, பொருட்கள் சேவைகள் வரி போன்றனவற்றாலும் மக்கள் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளனர். இவற்றுடன் யுத்தம் மேலதிகச் சுமையாகி நிற்கிறது.

இவற்றை எல்லாம் பொறுத்துக் கொண்டு, வயிற்றை வாயைக் இறுக்கிக் கட்டிக் கொண்டு இருக்குமாறே அரசாங்கம் அமைச்சர் அலவி மௌலான மூலம் வேண்டுகோள் விடுகிறதா? அரசாங்க எதிர்ப்பாளர்கள் என அமைச்சர் சுட்டிக் காட்டுவது யூ.என்.பியையேயாகும். அவர்களுக்கு வேலைநிறுத்தம் செய்வோர் சட்டப்படி வேலை செய்வோர் மறியல் நடத்துவோர் உதவுவதாகவே அமைச்சரின் அறிக்கை சுட்டுகிறது. ஆனால் யூ.என்.பியை மீண்டும் அதிகாரத்திற் வரும் தாராள வழிவகைகளைச் செய்பவர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியினரேயாவர். ஏனெனில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் எதனையாவது உறுதியாக நிறைவேற்றியதாக இவர்களால் கூற முடியுமா? யுத்தம் நிறுத்தப்பட்டதா? அரசியல் தீர்வு காணப்பட்டதா? ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டதா? மனித முகம் கொண்ட பொருளாதாரம் நிறைவேற்றப்பட்டதா? தொழிலாளர் சாசனம் நிறைவேற்றப்பட்டதா? யூ.என்.பியால் பழிவாங்கப்பட்ட 1980 யூலை வேலை நிறுத்தக்காரர்கள் மீண்டும் வேலையில் சேர்க்கப்பட்டார்களா? ஒவ்வொரு துறையிலும் உள்ள தொழிலாளர்கள் ஊழியர்கள் உத்தியோகத்தர் உரிமைகள் வழங்கப்பட்டதா? நான்கரை வருட ஆட்சியில் மேற்கூறியவற்றில் ஏதாவது ஒன்றினைத்தானும் உருப்படியாக ஆட்சியினரால் நிறைவேற்ற முடியவில்லை என்றால் வேலை நிறுத்தம் செய்வோரில், சட்டப்படி இயக்கத்தை நடத்துவோரில், பகிஷ்கரிப்பு மறியலில் ஈடுபடுவோரில் எவ்வாறு தவறு காணமுடியும். தமது நியாயமான எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாத சூழலில் அவர்களுக்கு உரிய உரிமைகளைப் பெறும் வழிமுறை அதுவாகவே இருக்கும். அமைச்சர் ஒரு நீண்ட தொழிற்சங்கவாதி என்ற வகையில் தனது நெஞ்சைத் தொட்டு பதில் கூறட்டும். எனவே யூ.என்.பியை வளர்ப்பதும் பொதுசன ஐக்கிய முன்னணியின் நடைமுறைகளிலேயே தங்கியுள்ளது. வீணாக தொழிலாளர்கள் ஊழியர்கள் மீது கோபம் கொள்வது அர்த்தமற்றதாகும்.

-ஆசிரியர் குழு-

## மாகாணசபைத் தேர்தலில்

# மலையக மக்களின் நிலைப்பாடு

1. சொத்துடையவர்களிடம் மட்டுமே குவிந்திருக்கும் அரசியல் அதிகாரத்தை மக்களிடம் கையளித்தல் வேண்டும். அல்லது மக்களை அதிகாரமுடையவர்களாக்க வேண்டும். இது அதிகாரம் பற்றிய மாக்சிசம் போதித்துள்ள உண்மையாகும். அந்த தொலை நோக்குடனேயே புதிய – ஜனநாயக கட்சி இன்று செயற்பட்டுவருகிறது. புதிய இடதுசாரி முன்னணி என்ற இடதுசாரி முன்னணியில் அங்கம் வகித்தபோதும், தேர்தல்களில் போட்டியிட்டபோதும் மக்களின் கைகளுக்கு அரசியல் அதிகாரம் வென்றெடுக்கப்படல் வேண்டும் என்ற புரட்சிகர நிலைப்பாட்டை புதிய – ஜன்நாயக கட்சி கைவிட முடியாது.

### முதலாளித்துவ தேர்தல் முறைமையின் கீழ் மக்களின் உண்மையான விருப்பு வெறுப்புகளை அறிந்து கொள்ள இயலாது.

2. நுவரெலியா, இரட்னபுர, மொனராகலை கொழும்பு களுத்துறை போன்ற மாவட்டங்களில் தேர்தல் வேலைகளை முன்னெடுத்த போதும் மக்களின் இரட்சகர்களாக வன்றி மக்களுடன் மக்களாக நின்று அரசியல் அதிகாரத்தை மக்களின் கைகளுக்கு மாற்றுவதற்கான நீண்ட போராட்டப் பயணத்திற்கு மக்களை அணிதிரட்டும் பணிகளையே புதிய ஜனநாயக கட்சி தோழர்கள் செய்துள்ளனர். வாக்குறுதிகளை வழங்கும் முதலாளித்துவ பிரசாரங்களை முற்றாகவே நிராகரித்திருந்தனர். தேர்தல் பற்றிய மதிப்பீட்டை செய்தபோது தேர்தலில் கிடைத்தவாக்குகளைவிட மக்களை ஸ்தாபனப்படுத்துவதில் செய்யப்பட்ட பங்களிப்பு பற்றியே அதிகம் கவனம் செலுத்தப்பட்டது.

3. மலையக மக்களுக்கென புதிய அரசியல் தலைமைத்துவத்தை கட்டிவளர்ப்பது என்பது மக்களை 'இரட்சிக்க' இன்னொரு தனிநபரை நிலைநாட்டுவதோ அல்ல என்பதனை பற்றிய புதிய ஜனநாயக கட்சியின் நடவடிக்கையாளர்கள் நிறையவே விளங்கிக் கொண்டுள்ளனர். தனிநபர் ஒருவரை வழிபாட்டிற்குரிய தலைவராக ஆக்கும் பொறிமுறையும் பு.ஜ.கட்சியிடம் இல்லை. மலையக மக்களை மேய்க்கும் தலைமைகளை நிராகரித்து விட்டு மக்களை போராட்டபாதையில் அணிதிரட்டும் பணியின்றி வாக்குகளை கொள்ளையடித்து வாக்குப் பெட்டிகளை நிரப்புவதிலேயே கவனம் செலுத்த முடியாது.

4. தேர்தல்களில் பங்கெடுப்பது நடைமுறையில் இருக்கும் ஏற்றத்தாழ்வுள்ள சமூக அமைப்பை மாற்றுவதற்கான வழிமுறைகளை வலுப்படுத்தவேயன்றி இவ்வமைப்பை பாதுகாப்பதற்கல்ல.

மேற்படி அடிப்படையான விடயங்களை கொண்டே புதிய ஜனநாயகக் கட்சி மாகாணசபை தேர்தலில் பங்கெடுத்தது பற்றியும் அதில் கிடைத்த அனுபவங்கள் பற்றியும் ஏப்ரல் மாதம் 8ம் திகதி தலவாக்கொல்லையில் கலந்துரையாடப்பட்டுள்ளது. 250க்கும் மேற்பட்ட புதிய ஜனநாயக கட்சியின் நடவடிக்கையாளர்கள் கலந்து கொண்ட மேற்படி கலந்துரையாடலில் ஆழமாக பலவிடயங்கள் மதிப்பிடப்பட்டன.

மக்களை போராட்டப்பாதையில் அணிதிரட்டும் நோக்கத்தை கொண்ட புதிய ஜனநாயக கட்சி மலையகமக்கள் மத்தியில் வேலை செய்யும் போது முகம் கொடுக்க வேண்டிய சவால்கள் பற்றி கவனம் செலுத்தப்பட்டது.

1. மலையக மக்கள் அவர்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு மட்டும் தீர்வு காண்பதற்காகவே ஓடித்திரிய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். நாளாந்த பிரச்சினைகளை அரசியல் கோரிக்கைகளாக்கி அவற்றை வென்றெடுக்க போராட்டங்களை செய்வதுடன் நீண்டகால தீர்வுக்கான அணுகுமுறைகளையும் மலையக மக்கள் மத்தியில் வளர்த்தெடுக்க வேண்டும்.

**நிலவுடமை – முதலாளித்துவ சிந்தனைகளால் சிறைப்படுத்தப்பட்ட மலையக மக்கள் மத்தியில் ஆழமான அரசியல் வேலைகள் செய்யப்படல் வேண்டும்.**

2. தொழிற்சங்கங்களையும், அரசியல் கட்சிகளையும் நிவாரண கேந்திரமாக கொண்டு தமது தேவைகளை நேரடியாக பூர்த்தி செய்துகொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பில் பெரும்பாலான மலையக மக்கள் அரசியல் கட்சிகளையும், தொழிற்சங்கங்களையும் சூழ்ந்திருக்கின்றனர். இந்நிலைமையை மாற்ற நீண்டதொரு வேலைத்திட்டத்துடனும் வழிமுறைகளுடனும் மக்களை அணிதிரட்ட வேண்டும்.

3. வழிபாட்டிற்குரிய தனிநபர்களை சுற்றி மலையக மக்கள் சூழ்ந்துள்ள நிலைமை போராட்ட அரசியலுக்கு பெரியதொரு சவாலாகிறது. சாதாரணமான ஜனநாயக ரீதியாக தலைவர்களையும், கட்சிகளையும் அணுகுகின்ற, பின்பற்றுகின்ற போக்கு மலையகத்தில் இல்லை எனலாம். மிகவும் பின்தங்கிய நிலையிலிருக்கும் மலையக மக்களிடத்திலுள்ள முன்னேறியவர்கள் கூட பணம்படைத்தவர்களினதும், அந்தஸ்து படைத்தவர்களினதும் அங்கீகாரத்துக்காக அலையும்போது நிலப்பிரபுத்துவத்திற்கும், முதலாளித்துவத்திற்குமேயுடைய வழிபாட்டிற்குரிய தலைமைகளே வலுவடையும்.

4. 1977இற்கு பிறகு ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்களினால் மலையக தோட்டத் தொழிலாளர்களின் தொழிலாளர் வர்க்க உணர்வு மழுங்கடிக்கப்பட்டுள்ளது. இதனால் போராட்டப்பாதையைவிட தனிநபர்களின் சாதனைகளை நம்பிக்கொண்டிருக்கும் நிலைமை வளர்ச்சி அடைந்துள்ளது.

மலையகத்தில் ஐ.தே.கட்சி பெரும்பான்மை வாக்குகளை பெற்றமைக்கும், பல்வேறு துரோகம் இழைத்த இ.தொ.கா. ம.ம.மு தலைமைகள் முற்றதாகவே நிராகரிக்கப்படாமைக்கும் மேல் கூறப்பட்ட நான்கு காரணங்களையும் வலுவான நியாயங்களாக கொள்ளமுடியும். அந்த காரணங்களை நீக்குவதற்கான வேலைத்திட்டமொன்றையும் கொண்டு அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகிறது.

முதலாளித்துவ தேர்தல் முறைமையின் கீழ் வெளிவருகின்ற முடிவுகளிலிருந்து மக்களின் விருப்பு வெறுப்புகளை முற்றாக அறிந்து கொள்ள முடியாது. எனினும் நடந்து முடிந்த தேர்தலிருந்து பெற்ற பட்டறிவை நேர்மையாக பரிசீலித்து முன்னேற வேண்டியது மாக்சிஸ்ட் – லெனினிஸ்ட்டுகளின் பொறுப்பாகிறது.

அந்தவகையில் மலையக மக்கள் மத்தியில் வேலைசெய்யும் மாக்சிஸ்ட்டு – லெனினிஸ்ட்கள் மிகவும் பாரிய பொறுப்புக்களை சுமக்க வேண்டியுள்ளனர் என்பது உணரப்பட வேண்டும்.

### அடுத்த ஆட்சி.......

1ம் பக்க தொடர்ச்சி....

பலபத்து கழிந்து போய்விட்டன. ஆனால் யுத்தம் தொடர்கிறது. இன்னும் வன்னியில் எஞ்சியுள்ள நிலப்பரப்பு இராணுவத்தால் பிடிக்கப் பட்டதும் யுத்தம் முடிவடைந்து விடும் என்று கூறியே ராணுவத்திற்கு தற்போது ஆள் திரட்டல் நடைபெறுகிறது. ஆனால் யுத்தத்தின் மூலம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர முடியாது என்பதே நேர்மையான அரசியல்–ராணுவ–சமூக ஆய்வாளர்கள் அனைவரினதும் கருத்தாகும்.

பேரினவாதிகளின் அகங்காரத்திமிரும், ராணுவ யுத்தவாதிகளினது யுத்த வெறியும், அமெரிக்காவின் உலக மேலாதிக்க நோக்கும் யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப் படுவதைத் தடுக்கிறது. சகல வித ஏமாற்றுக்கள், பொய்கள், மாயைகள், தவறான அணுகு முறைகள் என்பனவற்றை தூக்கி வீசி விட்டு யுத்தத்திற்கு எதிராகவும் நியாயமான அரசியல் தீர்வுக்காகவும் மக்கள் வீதியில் இறங்கினால் மட்டுமே யுத்தத்திற்கு முடிவு ஏற்படும். இல்லாது விடின் அடுத்து ஆட்சிக் காலத்திலும் அல்லது அதற்கு அப்பாலும் யுத்தம் நாட்டை சின்னா பின்னப்படுத்தி அழிக்கவே செய்யும்.

நன்றி - நூலகத்திட்டம்



# தொண்டா குடும்ப வம்சாவளி பேரணி

தொண்டமான் தன்னை ஏமாற்றி விட்டதாக அலறுகிற அய்யாத் துரைக்கு தொண்டமான் யாருடன் கூட்டணி வைக்க முன்னுக்கு வந்தாலும் அவருடைய நோக்கம் சுயலாபம் மட்டும் தான் என்று அவருக்குத் தெரியாதா, என்ன, தெரிந்து கொண்டு கூட்டணிக்குள் போனார். தேசிய தொழிலாளர் சங்கம் என்ற பேரில் தேர்தலில் போட்டியிட்டதால் தன் ஆட்களுக்கு வோட்டுக் கிடைக்கும் என்று நம்பியிருந்த அய்யாத்துரை தலையில் தொண்டமானின் ஆட்கள் அரை அரையென்று மிளகாய் அரைத்துவிட்டார்கள். அய்யாத்துரை ஏன் அலற வேண்டும். அவரும் தொண்டமான் போன பாதையிலேயே போனவர் தானே. அவரும் யூ.என்.பியுடன் குலாவியவர்தானே. வி.கே. வெள்ளையன் தலைமையில் வளர்ந்த ஒரு அமைப்பை வைத்து வியாபாரம் நடத்திய ஒருவர் பழந்தின்று கொட்டை போட்ட இன்னொரு வியாபாரியிடம் கெட்ட பிறகுதானா ஞானியாகி விட்டார்.

சந்தர்ப்பவாதக் கூட்டுச் சேருகிற அய்யாத்துரையும் ராமையாத் துரையும் சரி மறக்கத் கூடாத பாடம் ஒன்று அவர்களை வென்ற எம்டன்களுடன் கூட்டுச் சேர்ந்தால் கவிழ்த்து விடுவார்கள் என்பது தான். ஆனாலும் பொறுத்துப் பாருங்கள், அடுத்த தேர்தல் வ்ந்தவுடன் என்ன நடக்கிறது என்று. தொண்டமானின் இந்திய வம்சாவளி அரசியல் என்பது தொண்டமான் குடும்ப வம்சாவளி அரசியல் என்பதை இந்தக் கும்பல்கள் எல்லாம் மறந்தே போய் விடுமா இல்லையா என்று. ●

# ஜே.வி.பி.யும் யுத்த எதிர்ப்பும்

அண்மையில் கொழும்பு நகரத்தில் இரண்டு ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன. ஒன்று ஜே.வி.பி நடாத்தியது. மற்றையது புதிய இடதுசாரி முன்னணி நடாத்தியது. இதில் அமெரிக்க தூதுவராலயத் திற்கு முன்பு ஆர்ப்பாட்டம் நடாத்தி அமெரிக்க தூதுவருக்கு மனுவும் கொடுத்தது ஜே.வி.பி. அதாவது யூ கோஸ்லாவியா மீது நடத்தப்படும் குண்டு வீச்சு யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்பதே கோரிக்கையாகும். அமெரிக்கா தலைமையில் நேட்டோ நடாத்தும் குண்டு வீச்சை நிறுத்தக் கோரும் அதேவேளை கோசோவா அல்பேனிய இனமக்களது பிரச்சினைக்கு என்ன தீர்வு என்பதைக் கூற ஜே.வி.பி. யினால் முடியவில்லை. காரணம் கோசோவோ பிரதேச மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தால் இலங்கையிலும் வடக்கு கிழக்கு மக்களினது சுயநிர்ணய உரிமையினை அங்கீகரிக்க வேண்டி ஏற்பட்டுவிடும் என்பதே பிரச்சினையாகும். எனவே நேட்டோ மீது கண்டனமும் எதிர்ப்பும் தெரிவித்து அமெரிக்கத் தலையீட்டை மறுப்பது கோசோவோ பிரச்சினையின் அரைப் பகுதியாகும். மிகுதிப் பகுதி கோசோவா மக்களின் பிரச்சினைக்கு தீர்வு முன்வைக்கப் படுவதாகும். ஆனால் ஜே.வி.பியின் நிலை அரை நிர்வாண நிலையேயாகும். மேலும் ஜே.வி.பியின் யுத்த எதிர்ப்பின் வேடிக்கை என்ன வெனில் இலங்கையில் இடம் பெற்று வரும் யுத்தத்தை நிறுத்துமாறு இதுவரை எந்த ஒரு எதிர்ப்பு இயக்கத்தை நடாத்தும் கொள்கையை அது கொண்டிராமையாகும். அதே போன்று இன்று எரியும் பிரச்சினையான தேசிய இனப் பிரச்சினையின் தீர்வு சோஷலிசம் வரும் போது தீர்ந்து விடும் எனக் கூறி சுயநிர்ணய உரிமையை மறுப்பதாகவும் உள்ளது.

இன்று இலங்கையின் அரசியல் சூழலில் ஒரு நேர்மையான இடதுசாரிக் கட்சிக்கு உரிய அடிப்படை நிலைப்பாடு யுத்தம் தேசிய இனப்பிரச்சினை தனியார்மயம் என்பனவற்றில் எத்தகைய கொள்கையை அது உறுதியாகக் கொண்டிருக்கின்றது என்பதேயாகும். அந்த வகையில் நோக்கினால் ஜே.வி.பியின் இடதுசாரி நிலைப்பாடு நேர்மையானது உறுதியானது என்று கூறி விட முடியாது. ஊசலாட்டமும் சந்தர்ப்பவாத அம்சங்களும் நிறைந்துள்ளதுடன் பேரினவாத சக்திகளையும் ஆளும் வர்க்க சக்திகளையும் பகைக்காத நிலைப்பாட்டையே கொண்டிருக் கின்றமை தெளிவாகிறது. அதனையே நேட்டோ தாக்குதலைக் கண்டித்த நிலைப்பாடு எடுத்துக் காட்டுகிறது.

அதே வேளை இவ்விடயத்தில் இரண்டு கோஷங்களை முன்வைத்து புதிய இடதுசாரி முன்னணி தனது ஆர்ப்பாட்டத்தை கோட்டை புகையிரத நிலையத்தின் முன்னால் நடாத்தியது. ஒன்று நேட்டோ குண்டு வீச்சு யுத்தத்தை நிறுத்து இரண்டாவது கோசோவோ அல்பானிய இன மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கு என்பதாகும். இவ்விரு கோரிக்கைகளும் முற்றிலும் நியாயமானவை மட்டுமின்றி அக் கோரிக்கைகள் இலங்கையின் இன்றைய நிலைமைக்கு முற்றிலும் பொருந்தக் கூடியதாகும். இவ்விரு கோரிக்கைகளும் பரந்த அளவில் முன்னெடுக்கப்படுவதினாலேயே அமெரிக்காவின் இலங்கை மீதான தலையீட்டை தடுத்து நிறுத்த முடியும்.

ஜே.வி.பி. உண்மையாகவும் நேர்மையாகவும் இடதுசாரி சக்தியாக செயல்படுவதாகில் தனது யுத்தக் கொள்கையையும் தேசிய இனப்பிரச்சினை பற்றிய நிலைப்பாட்டையும் மாற்றிக் கொண்டே ஆக வேண்டும். அவ்வாறு ஜே.வி.பி. செயல்படுமா? என்பதே பலரது கேள்வியாகும்.

–தனயன்–

# பரந்தாமன் திருவிளையாடல்

எஸ்.ரி. நாகரத்தினம் அவர்களது நினைவாக பரந்தாமன் என்றவர் சரிநிகரில் இரண்டு இதழ்களில் வரும் அளவு நீளமாக ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதில் உள்ள சகல தகவல்களும் சாதியமும் அதற்கு எதிரான போராட்டமும் என்ற நூலிலிருந்து பெறப்பட்டவை. புதிய பூமி வெளியீடான இந்த நூலுக்கு நன்றி கூறி ஒரு சொல்லாவது கட்டுரையில் எழுதப் படவில்லை. அதை விட முக்கியமாக எஸ்.ரி.என். நாகரத்தினம் பற்றியோ அவரது பங்களிப்புப் பற்றியோ கட்டுரையில் சொல்லக் கூடியதாக எதுவும் இல்லை.

கட்டுரை முடிவில் தேசிய இனப்பிரச்சினையைச் சரியாகக் கவனிக்காததால் இடதுசாரிகள் தமிழ் மக்களிடமிருந்தும் தாழ்த்தப்பட்ட சாதியினரிடமிருந்தும் ஒதுக்கப்பட்டு விட்டனர் என்று பிரகடனம் ஒன்று செய்யப்பட்டுள்ளது. எந்த ஆதாரத்தின் அடிப்படையில் இது கூறப்பட்டுள்ளது என்றோ எந்த இடது சாரிகளைப் பற்றி எழுதப்பட் டுள்ளது என்றோ தெளிவில்லை. ஆக்கமாக, ஒரு கருத்தையும் கூற முடியாமல் உருப்படியாக செயற்படுகிறவர்களை திட்டுவது தான் பத்திரிகைத் தொழில் என்று நினைக்கிறவர்கள் பேனா பிடித்தால் வேறென்ன கிடைக்கும்?

இவர்கட்டுப் புதிய ஜனநாயகக் கட்சியையோ பிற இடதுசாரி களையோ மாக்சியத்தையோ பிடிக்காவிட்டால் போகட்டும். பரந்தாம னாருடைய மனக் குழப்பத்தை மாற்ற நம்மால் முடியாது. எஸ்.ரி.என். அவர்கள் போன்ற ஒரு உன்னதமான போராட்ட வீரரையும் உன்னதமான மனிதரையும் அவமதிப்பதற்கு என்ன தேவை என்று தான் விளங்க வில்லை. ●

# சி.ஐ.ஏ. கைவரிசை

1959ல் திபெத்திய நிலக்கிழார்களின் நலன்களைப் பேண நடைபெற்ற கிளர்ச்சி 1956க்கு முன்பிருந்தே சி.ஐ.ஏ. செய்த ஒரு சதியின் ஒரு பகுதி என்ற உண்மை மெல்ல மெல்ல வெளியாகியுள்ளது. சீன எதிர்ப்புக் கிளர்ச்சியாளர்கட்கு ஆயுதம் வழங்கி நிதி உதவி செய்து வந்த சி.ஐ.ஏ. 1959ல் தலாய் லாமா இந்தியாவுக்குத் தப்பி ஓடித் தஞ்சம் பெறவும் உதவியது. இந்திய அரச நிர்வாகம் இவ்விஷயத்தை இழுத்தடிக்கும் என்பதால் சி.ஐ.ஏ. நேரடியாகவே நேருவை ஆணுகி அவரது சம்மதத்தைப் பெற்ற தாகவும் தெரிகிறது. நேரு 1959ல் சீனாவின் நண்பனா சி.ஐ.ஏயின் நண்பனா என்ற கேள்விக்கு கிடைக்கும் பதில் என்ன? சீனா துரோகம் செய்ததாகக் குற்றஞ் சாட்டுகிறவர்களுக்குத் துரோகி யார் என்று இனியாவது விளங்குமா?

1960முதலாக அமெரிக்காவின் ராணுவப் பயிற்சி முகாம்களில் தலாய்லாமாவின் ஆத்ரவாளர்கட்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இது பற்றிய செய்திகள் வெளிவராமல் அமெரிக்க ஆட்சியாளர்களால் அமுக்கப்பட்டன. அமெரிக்காவால் திபெத்தினுள் விமான மூலம் பரசூட் வழியே இறங்கிய கெரில்லாக்கள் சீனப் படைகளிடம் சிக்கினர். திபெத்தில் இருந்த சீன எதிர்ப்பாளர்கட்கு பொதிகள் 1956முதல் 1960 வரை விமானங்கள் மூலம் வீசப்பட்டன. கென்னடி ஆட்சியிலும் இது தொடர்ந்தது. பின்பு நேபாளத்தைத் தளமாகப் பாவித்து தலாய்லாமாவின் கையாட்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டது இவர்கள் அமெரிக்கா வுக்காக சீனாவில் உளவு பார்க்கவும் பயன்படுத்தப்பட்டனர்.

சீன–இந்திய எல்லைப் போரின் பின்பு இந்திய அரசு அமெரிக்காவின் திபெத்திய நடவடிக்கைகட்குப் பூரண ஆதரவு வழங்கியது சி.ஐ.ஏயின் குழிபறிப்பு வேலை சீன ராணுவத்தால் முறியடிக்கப்பட்ட பின்பு சி.ஐ.ஏ. படிப்படியாக தன் திபெத்திய சதியிலிருந்து ஒதுங்கியது. நேபாளமும் சீன வேண்டுகோளை ஏற்று தலாய்லாமாவின் ஆட்களுக் கான பயிற்சி முகாம்களை மூடியது.

இன்னமும் அமெரிக்காவின் உதவியுடன் திபெத்தில் தமது அதிகாரத்தை நிலை நாட்டலாம் என்ற கனவுடன் தலாய்லாமாவின் ஆதரவாளர்கள் சிலர் உள்ளனர்.

மேற்கூறிய தகவல்கள் அமெரிக்க நியூஸ்வீக் சஞ்சிகை (19–4–99) இதழில் வந்தது.

இப்போது தலாய்லாமாவுக்குக் கிடைத்துள்ள சர்வதேச அங்கீகாரமும் விளம்பரமும் பலவேறு என்.ஜி.ஓக்களது ஆதரவும் திபெத்தின் 'விடுதலைக்கான' ஐரோப்பிய மனித உரிமையாளர் குழுக்கள் சிலவற்றின் ஆர்வமும் பற்றிய இரகசியங்களை நாம் எப்போது அறிவோம்? ●

# யாழ்ப்பாணத்து மணற்பரப்பில்!

*அழாதே அழாதே*
*கிருஷாந்தி - நீ*
*அனாதை அல்ல*
*கிருஷாந்தி.*

*பள்ளிக்குப் போன*
*வேளையிலே - ஒரு*
*பாதகம் நடந்தது*
*கிருஷாந்தி*

*கொடுங்கோலனது*
*ஆட்சியிலே - ஒரு*
*கொடுமை நிகழ்ந்தது*
*கிருஷாந்தி*

*துப்பாக்கி முனையில்*
*துகிலுரிந்தான் - நீ*
*துப்பாக்கி முனை கண்டு*
*துணிவிழந்தாய்*

*இரு விழி பிதுங்க*
*அழுதாயா - இல்லை*
*இறைவனை நினைந்து*
*தொழுதாயா.*

*ஓங்கிய பனைகள்*
*பார்த்தனவாம் - உன்*
*ஓலங் கேட்டவை*
*அழுதனவாம்.*

*கோணேஸ்வரியும்*
*மனம்பேரியும் - உன்*
*கோலத்தில் மாண்டவர்*
*கிருஷாந்தி.*

*யாழ்ப்பாணத்து*
*மணற்பரப்பில் - அடி*
*ஞானக்கிளியே*
*மீள்வருவாய்.*

*அகிலம் அதிர*
*அடி வைப்பாய் - உனை*
*அழித்தவரை அழித்து*
*அகமகிழ்வாய்.*

- இறாகலை பன்னீர் -

# யுத்தத்தை நிறுத்து - சமாதானத்தை கொண்டு வா! நமது பிள்ளைகளை திருப்பித் தந்துவிடு!

ய்த்ததிற்கு எதிராகவும் பேச்சுவார்த் தைக்கு ஆதரவாகவும் உறுதியான குரலை இரண்டு ஆண்டுகளாக முன்னநிறுத்தி வருபவர்கள் புதிய இடதுசாரி முன்னணியும் அதில் அங்கம் பெறும் கட்சிகளுமேயாகும். மேற்படி கோரிக்கை இன்று மக்கள் மத்தியில் வளர்ச்சி பெற்று பல்வேறு அமைப்புகள் அதனை வலியுறுத்த ஆரம்பித்து விட்டன.

கடந்த மாதம் சமாதானத்திற்கான பெற்றோர்கள் அமைப்பு கோட்டை புகையிரத நிலையத்தின் முன்னால் ஒரு நாள் உண்ணாவிரதம் நடாத்தி தமது உண்ர்வுகளை ஆட்சியினரு க்கு வெளிப்படுத்தினர். பெரும் தொகையான பெண்கள் ஆண்கள் சிறுவர்கள் கலந்து கொண்டனர். இந்த உண்ணாவிரதத்தில் காணாமல் போனோரின் தமிழ்ப் பெற்றோர், மனைவிமார் உறவினர்கள் கலந்து கொண்டு தமது ஒருமைப்பாட்டைத் தெரிவித் திருந்தனர். அழுதழுதே கண்ணீர் வற்றி விட்ட நிலையில் கவலையால் தமது வாழ்வையே இழந்து நிற்கும் அவலக் காட்சியினை அங்கு கூடிநின்ற சிங்கள தமிழ்த் தாய்மாரிடத்திலும் மளைவிமார் மத்தியிலும் காணமுடிந்தது. ஏக்கத்துடன் கவலையே உருவான சிறுவர்கள் குழந்தைகளைக் கண்ணுற்றபோது கல்நெஞ்சுக்காரர் கூட கண்ணீர் விடக்கூடிய சூழலே காணப்பட்டது. யுத்தத்திற்குச் சென்ற எமது பிள்ளைகள் எங்கே? எமது கணவன்மார் எங்கே? எங்களது தந்தைமார் எங்கே? என்ற கேள்விகளே அங்கு ஒலித்தன. அதே போன்று யுத்தத்தால் காணாமல் போன பிள்ளைகள் கணவன்மார் தந்தைமார் எப்போது வருவார்கள் என தமிழ்ப் பெண்கள் அழுது புலம்பிக் குரல் கொடுத்தனர். ஒரு லட்சம் கையெழுத்துப் பெற்று ஜனாதிபதிக்கு அனுப்பி யுத்தத்தை நிறுத்தி சமாதானத்திற்கான கோரிக்கைக்கு கையெழுத்து இயக்கமும் அங்கு ஆரம்பிக்கப் பட்டது.

இதே போன்று இம் மாதத்தில் காணாமல் போன படையினரின் உறவினர்களது சங்கம் என்னும் அமைப்பு யுத்தத்தை நிறுத்தக் கோரி ஊர்வலம் சென்று ஜனாதிபதி செயலகத்தில் மனுக்கொடுத் துள்ளார்கள். வெள்ளை உடை அணிந்து காணாமல் போன தமது பிள்ளைகள் கணவன்மாரின் படங்களைத் தாங்கி அழுதமுகங் களுடன் ஊர்வலம் சென்ற காட்சி மனதை உருக்கியது. அவர்கள் ஏன் இந்தக் கொடிய யுத்தம் எனக் குரல் எழுப்பினர். இதிலும் தமிழ்ப் பெண்கள் ஆண்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு யுத்தத்திற்கு எதிரானதும் சமாதானத்திற்கு ஆதரவானதுமான இயக்கங்கள் பல்வேறு நிலைகளிலும் வளர்ச்சி பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது. இவை போன்று தொழிற்சங்கங்கள் விவசாய அமைப்புகள், புத்திஜுவிகளது, சங்கங்கள், மாணவர் அமைப்புகளிலும் யுத்த எதிர்ப்பு இயக்கம் பரவி வலுப் பெறுவது அவசியமாகும். அவ்வறான ஒரு பரந்த வெகஜன இயக்கம் தமிழ் சிங்கள முஸ்லீம் மலையக மக்களால் வலிமையுடன் முன்னெடுக்கப்படும் போது ஆட்சியினர் படி இறங்கி வந்து யுத்த நிறுத்தத்திற்கும் பேச்சு வார்த்தைக்கும் இணங்கவே செய்வர். எனவே யுத்தத்திற்கு எதிரான பரந்த வெகுஜன இயக்கங்களைப் பல்வேறு தளங்களில் முன்னெடுப்பதற்கு சகலரும் உழைத்தல் வேண்டும் என்பதையே மேற்படி நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன. ●

நன்றி - நூலகத்திட்டம்



வடக்கு கிழக்கில்

# ராணுவ விஸ்தரிப்பும் புதைகுழிகளின் பெருக்கமும்

வெகுஜனன்

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்கள் வடக்கும் கிழக்கும். இப் பிரதேசங்கள் காலத்திற்குக் காலம் வெவ்வேறு சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டு வந்துள்ளதை அறிவோம். வடக்கை வரண்ட பிரதேசம், கற்பகதருவான பனைகளின் வனப்பகுதி, கல்வியும் அரசாங்க உத்தியோகமும் நிறைந்தவர்களின் பூமி, கடுமையான உழைப்பைத் தரும் விவசாயிகள் நிறைந்த பிரதேசம், உப உணவு உற்பத்திக்குப் பெயர் பெற்ற மாகாணம் என்றெல்லாம் புகழ்மாலை சூட்டக் கேட்டுள்ளோம். அதே போன்று இலங்கையின் நெற்களஞ்சியம் கிழக்குப் பிரதேசம், தயிரும் தேனும் தாராளமாகக் கிடைக்கும் ஆநிரைக் கூட்டங்களைப் பெரும் செல்வமாகக் கொண்ட பகுதி. மீன்பாடும் தேன் நாட்டைத் தலை நகராகக் கொன்டது கிழக்கு. உலகின் முதல் தர இயற்கைத் துறைமுகத்தைப் பெற்றுள்ளது கிழக்குப் பிரதேசம், உல்லாசப் பயணிகளுக்கான இயற்கை வளம் மிக்க கடற் பிரதேசம் கிழக்கில் உள்ளன. தமிழ் முஸ்லீம் ஒற்றுமைக்கு ஒரு எடுத்துக்காட்டு கிழக்கே என்றெல்லாம் கேட்டிருக்கிறோம்.

ஆனால் இன்று அவை அனைத்தும் பொய்யாய் கனவாய் பழங்கதையாகி விட்டன. பழைய சிறப்புப் பெயர்களைக் கொண்டு பூரிப்பும் பெருமிதமும் கொண்ட நிலை மாறி விட்டது. இன்று புதிய பெயர்களால் வடக்கு கிழக்கு சுட்டப்படுகிறது. போராட்டங்களின் பூமி எனத்தொடங்கிய புதுப் பெயர்களின் வரிசை வளர்ந்து கொண்டது. யுத்த பூமி, மரணங்களின் இருப்பிடம், அகதி வாழ்வின் உறைவிடம். நிவாரணத்திற்கு கையேந்தும் மக்களின் இருப்பிடம். ராணுவம் தர்பார் நடாத்தும் மாகாணங்கள். ஜனநாயக – மனித உரிமை மீறல்களின் உறைவிடம், பாலியல் வல்லுறவுக் களஞ்சியம். கண்ணீரும் இரத்தமும் வழிந்தோடிக் கொண்டிருக்கும் பிரதேசம்.

இவை தான் இன்றைய வடக்கு கிழக்கின் சிறப்பும் பெயர்கள். இவற்றுக்கும் மேலால் தற்போது ஒரு சிறப்புப் பெயர் கிடைத்திருக்கிறது. அது தான் புதை குழிகளின் பூமி என்பதாகும். செம்மணிப் பகுதியில் அறுநூறுக்கு மேற்பட்ட மனித சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கும் தகவலை கொழும்பு மேல்நீதிமன்றத்தில் முன்னாள் இராணுவவீரரான ஒரு தீர்ப்பு வழங்கப்பட்ட குற்றவாளி கூறிய போதே முழு நாடும், மனச்சாட்சி படைத்த நாகீக உலகத்தைச் சேர்ந்த ஒவ்வொருமே அதிர்ச்சியடைந்தனர். இலங்கை அரசாங்கத்திடம் குறைந்த



வடக்கில் காணாமல் போனோரின் தாய் மாரும் மனைவிமாரும் கதறி அழும் காட்சி.

பட்சமாவது நேர்மை இருந்திருப்பின் செம்மணிப் புதை குழி விவகாரத்தில் உறுதியான நடுநிலை விசாரணையை நடாத்தி உரிய தீர்ப்பை வழங்கி இருக்க முடியும். ஆனால் அரசாங்கம் தயக்கத்தின் மேல் தயக்கத்துடனேயே செம் மணியில் கால் வைக்க அஞ்சுகிறது. அதுவே அங்குள்ள புதைகளின் மனிதச் சடலங்கள் இருக்கலாம் என்னும் ஊகத்தை உறுதிப் படுத்துவதாக அமை கின்றது.

இந்தப் புதைகுழி அவலத்திற்கு உரிய விசாரணையும் முடிவும் ஏற்படாத சூழலில் தான் தற்போது துரையப்பா விளையாட்டரங்கில் இருபத்தி நான்கு எலும்புக் கூடுகளும் மண்டை ஓடுகளும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. மேலும் எத்தனை எலும்புக் கூடுகள் இருக்குமோ என அஞ்சப்படுகிறது. அதேவேளை கிளிநொச்சியில் எலும்புக் கூடுகள் மண்டை ஓடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

வடக்கின் புதைகுழிகள் ஒன்றன் பின் ஒன்றாக வரிசைப்படுத்தப்படும் இவ்வேளை கிழக்கில் உள்ள புதைகுழிகள் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன. 1990ம் ஆண்டு வந்தாறு மூலை பல்கலைக்கழக அகதி முகாமில் இருந்து 148 பேரும், சத்துருக்கொண்டான் பன்னிச்சையடி பிள்ளையாரடி ஆகிய கிராமங்களில் இருந்து 181 பேரும் காணாமல் போகினர். இவர்கள் எங்கு புதைக்கப்பட்டிருக்கிறார்கள் கண்டு பிடிக்கப்படல் வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வடக்கு கிழக்கு இன்று பாரிய மனிதப் புதை குழிகளால் நிரப்பப்பட்ட நிலப்பகுதிகளைக் கொண்ட புதைகுழிப் பிரதேசமாகவே காணப்படுகின்றன. இதன் பொறுப்புதாரிகள் யார்? இவர்கள் கூறப்போகும் பதில் தான் என்ன? காணாமல் போனவர்களுக்கும் புதைக்கப்பட்டவர்களுக்கும் பதில் கூற வேண்டிய மூன்று பகுதியினர் உள்ளனர். இலங்கை ராணுவம், இந்திய ராணுவம், சகல தமிழ் ஆயுத இயக்கங்கள். இம் மூன்று பிரிவினரும் இன்று இல்லாது விடினும் என்றோ ஒரு நாள் தமிழ் மக்களுக்கு சரியான பதிலைக் கூறியே ஆக வேண்டும். ஏனெனில் எந்தவோரு புதைகுழியும் நீண்ட காலத்திற்கு மறைக்கப்பட முடியாத ஒன்றாகும்.

இப் புதைகுழி விவகாரம் ஒரு புறத்தில் ஏனோதானோ எனவிடப்படும் நேரத்தில் ராணுவ கடற்படை விஸ்தரிப்புக்கான முயற்சிகளும் திட்டங்களும் உள்ளூர முன்னெடுக்கப்படுகின்றன. பலாலி ராணுவத் தளத்தைச் சுற்றியுள்ள வலிவடக்கு பிரதேசத்தில் பன்னீராயிரம் ஏக்கர் நிலங்களை ராணுவத் தேவைக்காக சுவீகரிக்கும் முயற்சி இடம் பெறுகின்றது. பலாலியின் மேற்கே மாதகல் வரை, தெற்கே குப்பிளான் புன்னாலைக்கட்டுவன் வரை, தென் மேற்கே தெல்லிப்பளை மல்லாகம் அளவெட்டி வரையும் வடக்கில் மயிலிட்டி காங்கேசன்துறை கடற்கரைப் பகுதி உள்ளடங்கலாக இப்பரந்த நிலப்பரப்பு சுவீகரிக்கப்பட உள்ளது. இப் பிரதேசத்தில் மக்கள் 90ம் ஆண்டுக்குப் பின் மீளக் குடியமர அனுமதிக்கப்படவில்லை. காங்கேசன் துறை சீமேந்து தொழிற்சாலை – துறைமுகம் உட்பட மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் இவற்றுள் அடங்கும். நான்கு மத்திய மகா வித்தியாலயங்கள், ஐம்பதுக்கு மேற்பட்ட வித்தியாலயங்கள், ஐம்பதுக்கு மேற்பட்ட ஆரம்பப் பாடசாலைகள், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, வரலாற்றுப்புகழ் பெற்ற கீரிமலை உட்பட வணக்கத் தலங்கள் இவை அனைத்திற்கும் மேலால் மக்களது பாரம்பரிய வாழ்விடங்களும் விவசாய, கைத்தொழில், மீன்பிடி இடங்களும் இவற்றின் கீழ் வருகின்றன.

அதே பொன்று காரைநகர் கடற்படைத் தளத்தை அன்டியுள்ள நிலப்பகுதி குறிப்பாக முன்பு சீநோர் மீன்பிடி உபகரணத் தொழிற்சாலை இயங்கி வந்த பகுதியினை சுவீகரிக்கும் முயற்சிகள் இடம் பெறுகின்றன. இவ்விரு முயற்சிகளும் பாரிய ராணுவ – கடற்படைத்தள விஸ்தரிப்புடன் நேரடியாகச் சம்மந்தப்பட்டதாகும். உடனடியாகப் பார்க்கும் போது ஏதோ தற்காலிக ராணுவத் தேவைக் கானது போன்றே தென்படும். ஆனால் நாளடைவில் பலாலியில் இருந்து காரைநகர் வரையான நிலப்பகுதியும் கடற்பகுதியும் ராணுவ – கடற்படை – விமானப்படையின் பாரிய விஸ்தரிப்பாகவே மாற்றப்படும். இது இலங்கைப் பாதுகாப்புப் படைகளின் மூளைகளில் உதயமாகிய விடயமல்ல. இது அமெரிக்காவின் உலகளாவிய ஆதிக்கத்திற்கான ராணுவ மூல உபாயத்தின் ஒரு பகுதியாக எழுந்த ஆலோசனையாகும்.

இதே போன்றதே திருகோணமலைப் பிரதேசத்தின் ராணுவ கடற்படை விஸ்தரிப்புமாகும். திருகோணமலையில் ராணுவத் தேவைக்காக லிங்கநகர் மக்கள் வெளியேற்றப்பட ராணுவம் உத்தரவிட்டுள்ளது. புதிய சந்தைக் கட்டிடத்தை திறப்பதை ராணுவ உத்தரவு தடுத்துள்ளது. கோணேசர் ஆலைய வழிபாடு ராணுவ அனுமதி பெற்றே செய்ய வேண்டியுள்ளது. இவை யாவும் வடக்கு கிழக்கில் ராணுவ ஆதிக்கத்தை நிலை நிறுத்தி விஸ்தரிக்கும் நீண்டகால நோக்குடையவையாகும். இது வெறுமனே ராணுவ நோக்கம் மட்டுமன்று. நாட்டில் தலைவிரித்தாடி நிற்கும் தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாதத்துடன் இணைந்த ஒன்றுமாகும். அது மட்டுமின்றி அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலக ஆதிக்க நலன்களுடன் பிணைக்கப்பட்டதுமாகும்.

பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற பெயரில் யுத்தத்தை விரிவாக்கி ராணுவ விஸ்தரிப்பை வலுப்படுத்தி தமிழ் மக்களையும் அவர்களது பாரம்பரிய பிரதேசங்களையும் அபகரித்து அடக்கி ஒடுக்குவது மட்டுமின்றி அந்திய ஏகாதிபத்திய சக்திகளுக்கு அரவணைப்பும் வசதியும் வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டே வடக்கு கிழக்கில் ராணுவ விஸ்தரிப்பு இடம் பெற்று வருகிறது. வடக்கு, கிழக்கு தமிழ் முஸ்லீம் மக்கள் மட்டுமின்றி முழு நாட்டு மக்களுமே இவ் ராணுவ விஸ்தரிப்புக்கு எதிராக அணி திரளவேண்டிய தவிர்க்க முடியாத தேவையும் அவசியமும் ஏற்பட்டுள்ளது.

## வலி வடக்கு பிரச்சினைக்கு செயற்குழு

வலிவடக்கில் பலாலி இராணுவத்தள விஸ்தரிப்பை எதிர்த்து அப்பகுதியில் மீளக் குடியேறுவதற்கு மக்களை அனுமதிக்க கோரியும் ஒரு பொதுக் கூட்டமொன்று சென்ற மாதம் 24ம் திகதி கொழும்பில் இடம்பெற்றது. அக்கூட்டத்தில் ஆறுபேர் அடங்கிய செயற்குழு வொன்றும் தெரிவுசெய்யப் பட்டது. தலைவராக திரு. பொ.சிவசுப்பிரமணியமும் செயலாளராக திரு.ஞா.சிறீமனோகரனும், பொருளாளராக திரு. க.குணநாயகமும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் பின்வருமாறு :-

1. வலிவடக்கில் காணி கட்டிடங்களை அரசு சுவீகரிக்கும் முயற்சியை கைவிட வேண்டும். சுவீகரிப்புக்கான வர்த்தமான கட்டளையை இரத்துச் செய்ய வேண்டும்.
2. நட்ட ஈட்டைக் கொடுத்து காணிகளை சுவீகரிக்கும் அரசின் கபடத்தனத்தை புரிந்து கொண்டு நட்ட ஈட்டுக்காக எதுவித விண்ணப்பமும் செய்வதில்லை.
3. மக்களை மீள் குடியமர்வதற்கு அனுமதிப்பதுடன் சகல வலிவடக்கு மக்களுக்கும் அவர்களின் உயிர் இழப்பு, சொத்து இழப்பு, வேலை இழப்பு என்பனவற்றிற்கு நிவாரணம் வழங்கவேண்டும்.
4. வலிவடக்கு மக்களுக்கு வழங்க மறுத்த நிவாரணங்கள் தொடர்பாக வடக்கிற்கான மிள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபையுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்தல்.
5. தற்போது ஆரம்பிக்கப்பட்ட அமைப்பை முழுமையாகப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு அமைப்பாகக் நடவடிக்கை எடுத்தல்.

பிந்திக் கிடைத்த தகவலின்படி செயற்குழுவின் மூன்று உறுப்பிகளான திரு. பொ. சிவசுப்பிரமணியம், திரு. ஞா.சிறீமனோகரன், திரு. க.சிவபாதம் ஆகியோர் சென்ற 12ம் திகதி மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகாரசபையின் முக்கிய அதிகாரி யொருவரைச் சந்தித்து ஏற்கனவே அவருக்கு செயற் குழுவால் அனுப்பிய கடிதத்தைப் பற்றிக் கலந்துரையாடச் சென்றபோது அக்கடிதம் தொடர்பாக் சில விபரங்களை யாழ் அரசாங்க அதிபரிடமிருந்து கோரியுள்ளதாகவும் அங்கிருந்து பதில் கிடைத்ததும் செயற்குழுவினருடன் கலந்துரையாட ஒரு திகதியை அறிவிப்பாரெனவும் கூறப்பட்டது.



மார்ச் 24ம் திகதி வெள்ளவத்தை சந்தை வளாகத்தில் வலிவடக்கில் 12ஆயிரம் ஏக்கர் நிலம் ராணுவப் பறிப்புக்கு உள்ளாகுவதை எதிர்த்து புதிய இடதுசாரி முன்னணி நடாத்திய ஆர்ப்பாட்ட மறியல் போராட்டம்.

நன்றி - நூலகத்திட்டம்



# மகத்தான கம்யூனிட்ஸ் அறிக்கையும்

# 150 ஆண்டு காலப் பிரயோகமும்

"கம்யூனிஸ்டுக்கள் தமது கருத்துக் களையும் நோக்கங் களையும் மூடி மறைக்க மனம் ஒப்பாதவர்கள். இன்றுள்ள சமுதாயத்தின் நிலைமைகள் யாவற்றையும் பலவந்தமாக வீழ்த்த வேண்டும். அப்போது தான் தமது இலட்சியங்கள் நிறைவேறும் என்று கம்யூனிஸ்டுக்கள் ஒளிவு மறைவு இன்றி பறைசாற்றுகிறார்கள். கம்யூனிஸ்ட் புரட்சி வருகின்றது என்று ஆளும் வர்க்கங்கள் அஞ்சி நடுநடுங்கட்டும். பாட்டாளிகள் தமது அடிமை விலங்குகளைத் தவிர இழப்பதற்கு ஏதும் இல்லாதவர்கள். அவர்கள் வெல்வதற்கு உலகம் இருக்கிறது". "உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்"!

மேற்கூறிய அர்த்தம் பொதிந்த அறை கூவலுடன் தான் கம்யூனிஸ்ட் அறிக்கையின் இறுதி வாசகங்கள் காணப்படுகின்றன. 1948ம் ஆண்டு மார்க்ஸ் ஏங்கல்ஸ் ஆகிய பாட்டாளிவர்க்க ஆசான்களால் கம்யூனிஸ்ட் அறிக்கை வெளியிடப் பட்டது. 1847ல் சர்வதேச தொழிலாளி வர்க்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்பாக கம்யூனிஸ்ட் லீக் தோற்றுவிக்கப்பட்டது. இவ் அமைப்பே கம்யூனிஸ்ட் அறிக்கையை தயாரித்தளிக்கும் பொறுப்பினை மார்க்ஸ் ஏங்கல்ஸ்டம் ஒப்படைத்தது. மார்க்சும் ஏங்கல்சும் ஏற்கனவே ஜெர்மன் தத்துவம், ஆங்கிலேய அரசியல் பொருளாதாரம், பிரான்சின் சோஷலிசம் ஆகிய மூன்று அடிப்படைகளிலும் தமது ஆழ்ந்த கவனத்தை செலுத்தி அவற்றைக் கற்றறிந்தனர். வெறுமனே கற்றதுடன் நிற்காது அவற்றை நடைமுறை சமூக இயக்கப் போக்குடன் இனைத்தனர். அவர்களது இம் முயற்சி முற்றிலும் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதனால் ஒரு முழுமையான சமூக விஞ்ஞானத் தத்துவத்தை தெளிவுடன் முன்னுறுத்திக் கொள்ளும் நிலைக்கு தமது மேதமையைப் பயன்படுத்திக் கொண்டனர். அதன் அடிப்படை யிலேயே தமக்கு வழங்கப்பட்ட பணியினை 1848ம் ஆண்டின் கம்யூனிஸ்ட் அறிக்கை யாகத் தயாரித்து அளித்தனர்.

1848 முதல் 1898 வரை

1848ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் வரலாற்று முக்கியத்துவமுடைய கம்யூனிஸ்ட் அறிக்கை முதன் முதலாக ஜெர்மன் மொழியில் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆங்கிலம் முதற் கொண்டு ஐரோப்பிய மொழிகளிலும் பின் உலகில் பல்வேறு மொழிகளிலும் வெளிவந்தன. 1998ம் ஆண்டு கம்யூனிஸ்ட் அறிக்கை வெளியிடப் பட்டதன் 150வது வருடப் பூர்த்தி ஆண்டாகும். கம்யூனிஸ்ட் அறிக்கை என்பது வெறுமனே ஒரு ஆவணம் என்ற வகையில் முக்கியத்துவம் பெறும் ஒன்று அல்ல. கடந்த நூற்றி ஐம்பது ஆண்டுகளாக அவ் அறிக்கையின் நடைமுறைப் பிரயோகத்தின் மூலம் அதன் நடைமுறை உண்மைகளும் அதன் பங்களிப்பும் வரலாற்று முக்கியத் துவத்தை வழங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆதலால் கம்யூனிஸ்ட் அறிக்கையின் 150 வருடகால நறைமுறைப் பிரயோகத்தையும் அது உலகத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் மீதும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிகள் புரட்சிகள் மீதும் ஏற்படுத்திய தாக்கத்தினை ஒவ்வொரு ஐம்பது வருடகால வளர்ச்சிகளினூடே காண்பது பயன் உள்ளதாகும்.

## 1848 முதல் 1898 வரை

கம்யூனிஸ்ட் அறிக்கை வெளிவந்த காலச் சூழல் ஐரோப்பியத் தொழிலாளி வர்க்கம் தமது வர்க்க பலத்தை ஒரு முகப்படுத்தி அதனை முதலாளி வர்க்கத்திற்கு எடுத்துக்காட்டக் கூடிய எழுச்சிகளில் எழுந்து நின்ற காலமாகும். உதாரணமாக 1848யூன் மாதத்தில் பாரிஸ் நகரத் தொழிலாளி வர்க்கம் ஒரு புரட்சியில் இறங்கியது. அதே போன்று ஜெர்மன், இங்கிலாந்து நாடுகளின் தொழிலாளி வர்க்கங்களும் புரட்சிகரப் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தன.

1852ல் ஏற்கனவே தோற்றுவிக்கப்பட்ட கம்யூனிஸ்ட் லீக் கலைக்கப்படுகிறது. அதேவேளை மார்க்சும் ஏங்கல்சும் தமது தத்துவார்த்த நடைமுறை வேலை களை விரிவுபடுத்தி வந்ததுடன் ஐரோப்பிய அமெரிக்க கண்டங்களின் தொழிலாளி வர்க்க இயக்கங்களுடன் தமது, தொடர்புகளை வலுப்படுத் தினர். சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனத்தைத் தோற்றுவிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டனர். அதன் காரணமாக 1864ல் முதலாவது சர்வதேசியம் தோற்றுவிக்கப்பட்டதுடன் அதன் தலைமைப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டனர். இம் முதலாவது சர்வதேசியம் தமது அடிப்படையான வேலைத்திட்ட மாகவும் வழிகாட்டும் ஆவண மாகவும் கம்யூனிஸ்ட் அறிக்கையை ஏற்றுக் கொண்டது.

1871ல் மாபெரும் பாரிஸ் கம்யூன் எழுச்சியும் புரட்சியும் இடம் பெற்றது. பாரிஸ் நகரத் தொழிலாளி வர்க்கமே இதனை முன்னின்று நடாத்தியதுடன் எழுபத்தியிரண்டு நாட்கள் ஆட்சி அதிகாரத்தையும் பாரிஸ் கம்யூன் வைத்திருக்க முடிந்தது. தொழிலாளி வர்க்கம் தனது ஒன்றுபட்ட பலத்தின் மூலமும் புரட்சிகர பலாத்காரத்தின் மூலமும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும் என்னும் கம்யூனிஸ்ட் அறிக்கையின் அறைகூவலை நடைமுறையில் முதற்தடவை நிரூபித்த புரட்சி பாரிஸ் கம்யூனாகும். ஆனால் 72 நாட்களின் பின் அது முதலாளித்துவ பிற்போக்கு ராணுவத்தால் ரத்தவெள்ளத்தில் மூழ்கடிக்கப் பட்டது. அதிலிருந்து தொழிலாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினால் மட்டும் போதாது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உறுதியாக நடைமுறைப் படுத்துதல் வேண்டும் என்னும் அவசியத்தையும் பாரிஸ் கம்யூன் அனுபவரீதியாக எடுத்துக் காட்டியது.

இதனைத் தொடர்ந்து தொழிலாளி வர்க்க இயக்கம் ஐரோப்பியாவிலும் அமெரிக்காவிலும் வீறு பெற்று விரிவடைந்து சென்றது. குறிப்பாக அமெரிக்காவில் எட்டு மணி நேர வேலை கோரிய இயக்கம் புரட்சிகரப் போராட்டங்களாக வெடித்தெழுந்தன. அமெரிக்க முதலாளி வர்க்கம் அவற்றை மிகத் கொடூரமாக அடக்கி ஒடுக்க முனைந்த போதிலும் குருதி கொட்டிய உயித்தியாகம் மிகுந்த தொழிலாளி வர்க்கத்தின் உணர்வு மிக்கப் போராட்டங்கள் எட்டு மணி நேர வேலையை வென்றெடுப்பதில் பின் வாங்கவில்லை.

1889ல் சர்வதேச சோஷலிச தொழிலாளர் கட்சிகள் ஒன்றிணைந்து பாரிஸ் நகரில் இரண்டாவது சர்வ தேசியத்தை நிறுவிக் கொண்டனர். அவ்வேளை மார்க்ஸ் உயிருடன் இருக்கவில்லை. ஏங்கல்ஸ் இரண்டாவது சர்வதேசியத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்திற்கு வழிகாட்டலானார். அவ் வேளையிலேயே மே முதலாம் திகதியை உலகத் தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேசத் தினமாக இரண்டாவது சர்வதேசியம் பிரகடனம் செய்து கொண்டது. மார்க்ஸ் ஏங்கல்ஸ் இறப்பிற்குப் பின் அவர்கள் வகுத்து அளித்த கம்யூனிஸ்ட் அறிக்கை மேன்மேலும் உலகின் சகல கண்டங்களினதும் தொழிலாளி வர்க்க இயக்கங்கள் மத்தியில் பற்றிப் பரவி புரட்சிகர இயக்கங்களை முன்தள்ளும் உந்து சக்தியாகிக் கொண்டது.

## 1898 முதல் 1948 வரை

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத் துடன் ஏகபோக முதலாளித்துவம் மேலும் வளர்ச்சி பெற்று ஏகாதிபத்தியம் ஆகிக் கொண்டது. இதனையே தோழர் லெனின் 'முதலாளித்துவத்தின் உச்ச கட்டமே ஏகாதிபத்தியம்' என ஏகாதிபத்தி யத்தை வரைவிலக்கணம் செய்து கொண்டார். இவ் ஏகாதிபத்திய நாடுகள் தமக்குரிய சந்தைகளைப் பிடிப்பதற்கும் நாடுகளின் வளங்களைக் கொள்ளையிடவும் தமக்குள் யுத்தத்தில் இறங்கின. இவ்வாறு இடம் பெற்றதே முதலாவது உலகப் போராகும்.

முதலாளித்துவம் தனது வளர்ச்சிக்காகப் போரிலும் உற்பத்தியிலும் மும்முரம் காட்டி நின்ற அதேவேளை தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கை நிலை மிக மிக மோசமாகி வந்ததுடன் நாடுகளின் மக்களும் பல்வேறு இன்னல்களையும் அனுபவிக்க லாயினர். இதனால் தொழிலாளி வர்க்கம் போராட்டங்களில் ஈடுபட்டது. அத்தகைய தொழிலாளி வர்க்கத்தின் ஸ்கைகளில் கம்யூனிஸ்ட் அறிக்கை சிறந்த வழிகாட்டும் தத்துவார்ந்த நடைமுறைக் கருவியாகியது.

ரஷிய நாட்டில் தோழர் லெனின் தலைமையில் தொழிலாளி வர்க்கக் கட்சி தோற்றுவிக்கப்பட்டது. மார்க்சிசத்தின் தத்துவார்ந்த அடிப்படைகளையும் கம்யூனிஸ்ட் அறிக்கையின் சாராம்சத்தையும் உரியவாறு கையேற்று அதனை ரஷியாவில் நடைமுறைப் படுத்துவதில் தோழர் லெனின் தனது மேதமை மிக்க ஆற்றல் அனைத்தையும் பயன்படுத்திக் கொண்டார். ரஷியப் பாட்டாளி வர்க்கம் போல்ஷ்விக் கட்சியின் தலைமையின் கீழ் தோழர் லெனினது வழிகாட்டலில் மகத்தான ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சியை நடாத்தி வெற்றி பெற்றுக் கொண்டது. அத்துடன் மாக்சிசம் வழியுறுத்திய பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதில் தோழர் லெனினும் அவருக்குப் பின் தோழர் ஸ்டாலினும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கு தலைமை தாங்கினர். சோவியத் யூனியனில் கம்யூனிஸ்ட் அறிக்கை சுட்டிக்காட்டிய சோஷலிச அமைப்பின் கீழ் உலகின் ஆறில் ஒரு பங்கினர் வாழும் நிலை தோற்றுவிக்கப்பட்டது.

இத்தகைய சோஷலிச சோவியத் யூனியனை அழித்தெழிப்பதற்கு 1933–45 காலகட்டத்தின் இரண்டாவது உலகப் போர் முயன்றது. ஆனால் தோழர் ஸ்டாலினது உறுதியான தலைமைத்துவத்தின் கீழ் சோவியத் யூனியன் பாசிசத்தையும் ஹிட்லரையும் தோற்கடித்து சோஷலிசத்தை தற்காத்துக் கொண்டதுடன் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சோஷலிச அமைப்புகள் தோன்றவும் செய்தன. பால்கன் பிரதேசத்தின் சின்னம் சிறிய நாடான அல்பேனியாவில் தோழர் அன்வர் ஹோசா தலைமையில் புரட்சியின் மூலம் சோஷலிசத்தை அங்குள்ள தொழிலாளர் கட்சி வென்றெடுத்து நிலை நாட்டியது.

1898 முதல் 1948 வரை

கம்யூனிஸ்ட் அறிக்கையின் புரட்சிகர வீச்சானது ஐரோப்பிய–அமெரிக்க எல்லைகளுக்குள் மட்டும் நின்று விடவில்லை. தோழர் ஹோசிமின் தலைமையில் வியட்நாமில் புரட்சி முன்னெடுக்கப்பட்டதுடன் 1945ல் வடவியட்நாம் சோஷலிச அமைப்பிற்குள் வந்து கொண்டது. அதேவேளை சீனம், கொரியா, இந்தே–சீனம் மற்றும் ஆசிய நாடுகளில் புரட்சிகளும் போராட்ட எழுச்சிகளும் வேகமடைந்தன. 1949ல் சீனப்புரட்சியின் இறுதி வெற்றியோடும், கொரியாவின் வெற்றியோடும் உலக சோஷலிச முகாம் விரிவடைந்து கொண்டது.

## 1948 முதல் 1998 வரை

1949ல் தோழர் மாஓசேதுங் தலைமையிலான சீனப் புரட்சி வெற்றி பெற்று சீன மக்கள் குடியரசைத் தோற்றுவித்தது. அதன் மூலம் முழு உலக சனத் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் சோஷலிச அமைப்பின் கீழ் வந்தனர். உலகில் சோஷலிச முகாம் முதலாளித்துவ முகாம் என இரண்டு நேரெதிரான முகாம்கள் காணப்பட்டது. சோவியத் யூனியனில் தோழர் ஸ்டாலின் தலைமையில் இரண்டாம் உலக யுத்த அழிவுகளில் இருந்து நாட்டை கட்டியெழுப்பும் பணி வேகமடைந்தது. கைத்தொழில், விவசாய சமூக கல்வி கலாச்சார முனைகளில் மட்டுமன்றி விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிகளிலும் முதலாளித்து வத்துடன் போட்டியிட்டு ஒரு சோஷலிச சோவியத் யூனியனைக் காணமுடிந்தது. அவ்வாறே மக்கள் சீனக் குடியரசும் ஏகாதிபத்தி யத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் எதிராக சோஷலிச சீனமாக வளர்ச்சி கண்டது. வியட்னாம் போரில் அமெரிக்க ஏகாதிபத்தியம் மூக்குடைக்கப்பட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டது. கொரிய யுத்தத்தில் அமெரிக்கா பலத்த அடியைப் பெற்றது. கியூபப் புரட்சி வெற்றியடைந்தது அமெரிக்காவின் வாசல் படியில் சோஷலிச கியூபாவாக வீறுநடை போட்டு நின்றது. ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளில் புரட்சிகரக் கட்சிகளும் புரட்சிகர எழுச்சிகளும் என்றுமில்லாதவாறு வீறும் வேகமும் அடைந்தன.

1948 முதல் 1998 வரை

ஆனால் ஏகாதிபத்திய முதலாளித்துவ சக்திகள் சோஷலிசத்தையும் மார்க்சிசத்தையும் தோற்கடிப்பதற்கு சகல வழிமுறை களையும் சகல நிலைகளிலும் இடையிறாது பயன்படுத்தி வந்தனர். அவர்களது வலையில் சோஷலிசத்தை வழி நடத்திய நாடுகளின் தலைவர்கள் விரும்பியும் விரும்பாமலும் அறிந்தும் அறியாமலும் வீழ்ந்து கொண்டசந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. 'பனிப் போர்' என்னும் உத்தி முறையின் மூலம் புதிய புதிய வகை முதலாளித்துவ அணுகு முறைகளை மக்கள் சார்பு முகமூடிகளின் மூலமும் ஏகாதிபத்திய சக்திகள் முன்தள்ளி செயல்பட்டு வந்தன. இதனால் சோவியத் யூனியன் உடையுண்டது. அதற்கு முன்பாகவே கிழக்கு ஐரோப்பிய நாடுகள் செயலிழந்து போயின. சீனாவில் இடம் பெற்ற மாற்றங்கள் உட்பட சோஷலிச நாடுகள் என்பனவற்றில் பின்னடைவுகள் தளர்வுகள் ஏற்படலாயின. இவற்றின் ஒட்டுமொத்த விளைவாக சோஷலிசம் மார்க்சிசம் ஓர் இடைக்காலப் பின்னடை வுக்கும் தற்காலிக தளர்வுக்கும் முகம் கொடுக்க வேண்டியதாயிற்று.

சோஷலிசத்திற்கு இந்நிலை ஏற்படுவதை எதிர்பார்த்து காத்திருந்த ஏகாதிபத்திய சக்திகள் 'பூகோள மயமாதல்' என்னும் தமது சொந்த நிகழ்ச்சித் திட்டத்தை வேகப் படுத்திக் கொண்டன. தேசிய பொருளாதாரம் தேசிய சுதந்திரம் தேசிய அபிலாஷைகள் என்பனவற்றைத் தமது ஏகபோக மூலதனத்தின் மூலம் தூக்கி வீசிஎறிந்து விட்டு உலக வங்கி, சர்வதேச நாணயநிதியம், உலக வர்த்தக நிறுவனம் போன்ற பல்வேறு ஏகாதிபத்திய அமைப்புகள் மூலம் மூன்றாம் உலக நாடுகளை ஏகாதிபத்தியம் நவ காலனி நாடுகளாக்கி வருகின்றன. பல்தேசியக் கம்பனிகள் வேகமாக மூன்றாம் உலக நாடுகளுக்குள் புகுந்து தாராள பொருளாதாரக் கொள்கை–தனியார் மயம் என்னும் பொறிமுறைகளின் ஊடாக முதலாளித்துவப் பகல் கொள்ளையில் ஈடுபட்டு வருகின்றன.

ஆனால் இவை யாவற்றையும் உலகின் தொழிலாளி வர்க்கமும் அடக்கி ஒடுக்கப்படும் மக்களும் அவர்கள் மத்தியிலான மாக்சிச லெனினிச இயக்கங்களும் மிகவும் கூர்மையுடன் கவனித்து தம்மைத் தயார்படுத்தி வருகின்றன. அவை கடந்த நூற்றி ஐம்பது வருட கால மாக்சிச லெனினிச இயக்க வரலாற்றின் சாதக பாதக அம்சங்களை மறு மதிப்பீடு செய்து வருகின்றன. வெறும் மதிப்பீடு மட்டுமின்றி புதிய உலகச் சூழலில் மார்க்சிச லெனினிசக் கட்சிகளைக் கட்டியெழுப்புவதிலும் தீவிரமாக ஈடுபட்டும் வருகின்றன. பெரிய கட்சிகள் சிறிய கட்சிகள் அல்லது ஆளும் கட்சிகள் அதிகாரத்தில் இல்லாத கட்சிகள் என்ற நிலைகளுக்கு, அப்பால் வரலாற்றின் தேவையை நிறைவு செய்யக் கூடிய தொழில்ாளி வர்க்கப் புரட்சிக்காக தம்மைச் தயார் செய்தும் வருகின்றன. கம்யூனிஸ்ட் அறிக்கையும் மார்க்ஸ் ஏங்கல்ஸ், லெனின் ஸ்டாலின் மாஓ சேதுங் ஆகியோரதும் ஏனைய மார்க்சிசத் தலைவர்களினதும்

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

**வரலாற்று முக்கியத்துவம் பெற்ற கம்யூனிஸ்ட் அறிக்கை வெளி யிடப்பட்ட 150 வது ஆண்டு நிறைவை நினைவு கூர்ந்து 20.12.98ல் புதிய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா.செந்திவேல் ஆற்றிய உரையின் சுருக்கம் இதுவாகும். ஆர்**

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழரசுக் கட்சி வர்க்க நலன்களின் அடையாளங்களையே எப்போதும் வெளிப்படுத்தின.

இலங்கை இடது சாரி இயக்கத்துள் சந்தர்ப்பவாத பாராளுமன்ற அரசியல் ஒருவிதமான சீரழிவுக்கு வழி காட்டியது என்றால், அதற்கெதிரான சரியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தும், அதை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதிற் சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி என அறியப்பட்ட மாக்சிய லெனினியக் கட்சியின் தலைமை செய்த தவறுகள் அவர்களைப் பலவீனப் படுத்தின. அது மட்டுமல்லாது பல நல்ல சக்திகளை ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) என்ற புதிய அமைப்பை நோக்கித் தள்ளின.

பாட்டாளி வர்க்க எதிர்ப்பையும் சிங்களப் பேரினவாதத்தையும் வலியுறுத்திய அமைப்பான ஜே.வி.பியின் தலைமை பற்றிய சரியான அரசியல் மதிப்பீடு அன்று நா.சண்முகதாசனால் மட்டுமே முன்வைக்கப்பட்டது. ஆயினும் அவர் ஜே.வி.பியின் வலிமையைக் குறைவாகவே மதிப்பிட்டார். மறுபுறம், அரசாங்கம் ஜே.வி.பி. பற்றிய மதிப்பீட்டில் குழப்பமாக இருந்தாலும், அரச யந்திரம் ஜே.விபியை நசுக்குவது பற்றி எந்த வித தயக்கமும் காட்டவில்லை.

ஜே.வி.பி. பற்றி எந்த விதமான மதிப்பீடுகள் தமிழரசுக் கட்சியின் தலைமையிடம் இருந்தாலும், ஜே.வி.பி.யின் ஏப்ரல் '71 கிளர்ச்சி நசுக்கப்பட்ட பின்பு அக் கிளர்ச்சிக்கான பழியைச் சீனா மீது சுமத்துவதில் யூ.என்.பிப் பிரமுகர்கள் சிலரும் தமிழரசுக் கட்சித் தலைவரது செல்லப்பிள்ளையான திருச்செல்வமும் தயக்கங்காட்ட வில்லை. ஜே.வி.பி. கிளர்ச்சியைச் சீனா ஆதரிக்கவில்லை என்பதுடன் இலங்கை அரசாங்கத்தை ஆதரித்துச் சீன அரசாங்கம் அனுப்பிய கடிதம் திட்டமிட்டே விஷமத்தனமாகச் சிலரால் மூடிமறைக்கபட்டது. தமிழரசுக் கட்சியின் சீன எதிர்ப்பு, பெரும்பாலும், வடக்கில் 'சீனசார்பு' கம்யூனிஸ்ட்டுகள் தமக்கு எதிரான ஒரு வலிய அணியாக இருந்ததையொட்டி உருவான ஒன்று என்று நம்ப வேறு நியாயங்களும் உள்ளன.

தமிழரசுக் கட்சி சமசமாஜக் கட்சி மீதும் சோவியத் சார்புக் கம்யூனிஸ்ட்டுகள் மீதும் காட்டிய பகைமை காலப் போக்கிற் குறைந்தாலும் சீனா மீதும் மாக்சிய லெனினிய வாதிகள் மீதும் அதன் பகைமை குறையாமலே இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

தமிழரசுக்கட்சியின் பிரதம எதிரியான ஸ்ரீ.ல.சு.கட்சி தலைமையிலான ஐ.மு. ஆட்சியை கவிழ்க்க ஜே.வி.பி. முயன்ற போது தமிழரசுக்கட்சி எடுத்த நிலைப்பாடு அதன் வர்க்க நலன்களின் அடையாளமே அல்லாமல் வேறல்ல. யூ.என்.பியை அதிகாரத்திற்கு கொண்டு வராத எந்த அரசியல் மாற்றத்தையும் ஏற்க அவர்கள் ஆயத்தமாக இருக்கவில்லை என்பதையும் பின்னைய நிகழ்வுகள் உறுதி செய்தன.

ஏப்ரல் கிளர்ச்சியின் பின்பு, ஸ்ரீ.ல.சு. கட்சியும் அதன் பாராளுமன்ற இடதுசாரிக் கூட்டாளிகளும் வெகுஜன அதிருப்தியைத் தணிக்கும் முறையிலான சில நடவடிக்கைகளது தேவையை உணர்ந்தனர். அடிப்படையான ஒரு சமூக மாற்றத்தைக் கொண்டுவருவதைத் தவிர்த்துக், தேர்தல் அரசியலை மனதிற் கொண்டே சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இலங்கையின் புதிய அரசியல் யாப்பும் தோட்டங்களின் தேசிய மயமாக்கலும் சிங்களப் பேரினவாதத்தை வலியுறுத்தும் முனைப்புடன் மேற்கோள்ளப்பட்டன என்பதும் குறிப்பாகக் கவனிக்க வேண்டியன.

இலங்கை பிரித்தானிய முடியாட்சிக்குட்பட்ட சுதந்திர நாடு என்ற நிலையினின்று விடுபட்டுக் குடியரசாகக் பிரகடனம் செய்யப்படுவதன் வரலாற்றுத் தேவையை எந்த முற்போக்கு வாதியும் மறுக்க முடியாது. அவ்வாறே தோட்டங்களின் தேசிய மயமாக்கல் அடிப்படையில் மிகவும் சரியான ஒரு நடவடிக்கையாகும். எனினும் இவ் இரண்டு விடயங்களிலும் அரசாங்கம் சிங்களப் பேரினவாத உணர்வுகட்கு ஊக்கமளிக்கும் முறையிலேயே நடந்து கொண்டது.

அதே வேளை, இந்த இரண்டு விடயங்களிலும் தமிழரசுக்கட்சித் தலைமை தனது தவ்றான பழைய அணுகுமுறையையே திரும்பவும் பயன்படுத்தியது.

புதிய அரசியற் சட்டவரைவுக்கான குழுவின் கூட்டங்களில் பங்குபற்றாமல் தமிழரசுக்கட்சி விலகிக்கொண்டது. இதற்குத் தமிழரசுக்கட்சி காட்டிய நியாயங்களுள் முக்கியமான ஒன்று பழைய சட்ட வரைவின் 29ம்



தந்தையும் மைந்தரும் 14

அலகின் கீழ் சிறுபான்மைத் தேசிய இனங்கட்கு வழங்கப்பட்ட உத்தரவாதங்களைப் புதிய சட்ட வரைவு மறுக்கிறது என்பதாகும் ஆயினும் பழைய சட்ட வரைவின் உத்தரவாதங்கள் இருந்தும் மலையக மக்களின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டன. என்பதும் சிங்களமே அரச கரும மொழியாகியது என்பதும் பற்றித் தமிழரசுத் தலைமை ஏனோ சிந்திக் மறுத்தது.

ஸ்ரீ.ல.சு.கட்சி தலைமையிலான அரசுடன் ஒத்துழைக்கத் தமிழரசுக் கட்சியிடம் எந்த விதமான உதவியையும் எதிர்பாராமல் தான் நினைத்ததைச் செய்வதில் அரசாங்கத்தின் மும்முரமுமாகும். இத் தவறுகளால் லாபமடைந்தது யூ.என்.பியே என்பதை ஸ்ரீ.ல.சு.கட்சித் தலைமை மட்டுமின்றிப் பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகள் இரண்டுங் கூட உணரத் தவறிவிட்டன.

தங்களது மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்து எதையும் செய்யலாம் என்ற மனோபாவத்தின் விளைவான பல தவறுகளின், விலையை 1977ல் அவர்கள் கொடுத்தனர். இருபது வருடங்களின் பின்னும் அதிலிருந்து அவர்கள் அதிகம் கற்கவில்லை என்பதும் வருத்தத்துக்குரியது.

இலங்கை குடியரசாவது வரவேற்கத்தக்கது என்ற அடிப்படையான விடயத்தைக் கூட அலட்சியம் செய்த தமிழரசுக்கட்சி அரசியலமைப்புச் சட்டத்தை எதிர்த்துப் போராடுவதாகப் பிரகடனம் செய்தது. அது எடுத்த இரண்டு நடவடிக்கைகளும் அதன் அரசியல் வறுமையை மட்டுமே புலப்படுத்தின.

அரசியலமைப்புச் சட்டத்தின் பிரதியைத் தீமிட்டுக் கொளுத்தும் நடவடிக்கை சட்டவிரோதமானதல்ல என்று தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றத் தலைமையை அடைத்துக்கொண்டிருந்த சட்ட வல்லுனர்கள் அறியாதவர்கள் அல்ல. எனவே அந்த நடவடிக்கை மூலம் வடக்கில் உள்ள மக்களிடம் வீர வேஷம் போடவும் தெற்கில் இருந்த அரசாங்கத்தின் தண்டனைக்கு உட்படாமல் தப்பவும் அவர்கட்கு முடிந்தது.

மற்ற நடவடிக்கை, செல்வநாயகம் தனது பாராளுமன்றப் பதவியினின்று விலகியதாகும். இதைத் தமிழ் மக்கள் தரப்பில் அரசாங்கத்துக்கு எதிரான சவால் என்று அவர் காட்ட முற்பட்டார். உண்மையிலேயே தமிழரசுக்கட்சி அரசாங்கத்திற்குச் சவால் விட எண்ணியிருந்தால் அதன் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே பதவி விலகியிருக்க வேண்டும். அதற்கு அவர்கள் ஆயத்தமாயிருக்கவில்லை. ஏனெனில் உள்ளதும் போச்சடா நொள்ளைக் கண்ணா என்கிற கதிக்கு ஆளாக அதன் தலைவர்கள் சிலர் ஆயத்தமாக இருக்கவில்லை.

1976க்கு பின்பு வடக்கே தமிழரசுக் கட்சியின் வலிய தளமாகி விட்ட காங்கேசன்துறைத் தொகுதியில், கட்சித் தலைவரும் பரவலாகத் தமிழ் மக்களது நன்மதிப்புக்குரியவருமான செல்வநாயகத்தை நிறுத்துவது அவர்கட்கு ஆபத்தற்ற ஒரு விளையாட்டாக இருந்தது. அதை விடவும், தரப்படுத்தல் மூலம் வடக்கில் ஏற்பட்ட கோப உணர்வு தமிழரசுக் கட்சிக்குச் சாதகமாகவே செயற்பட்டது. இந்தச் சூழ்நிலையில் தமிழரசுக் கட்சியின் காய் நகர்த்தலுக்கு எதிராக அரசாங்கம் வேறு விதமான காய் நகர்த்தலில் இறங்கியது. காங்கேசன்துறை இடைத் தேர்தலுக்கு நாள் நியமிக்காமல் அரசாங்கம் இழுத்தடித்தது. இதைத் தமிழரசுத் தலைமை எதிர்ப்பார்க்கவில்லை.

ஒரு போராட்ட இயக்கமாகவோ தைரியம் உள்ள தலைமை கொண்ட கட்சியாகவோ இருந்திருந்தாற், பல வேறு மாற்று நடவடிக்கைகளை எடுத்திருக்க முடியும். தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாகப் பதவி விலகியிருந்தால் மக்கள் மனதில் அவர்கள் பற்றிய மரியாதை கொஞ்சம் உயர்ந்திருக்கும். பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்திருந்தால், அது அரசாங்கத்திற்கு இக்கட்டான ஒரு சூழலை உருவாக்கியிருக்கும். அத்தோடு அதன்மூலம் பழைய கூட்டாளியான யூ.என்.பியின் விசுவாசத்தையும் சிறிது உரைத்துப் பார்த்திருக்கலாம். இதற்கெல்லாம் அவர்கள் ஆயத்தமாக இருக்கவில்லை. ஏனெனில் எம்.பி.மாரின் அதிகாரங்களும் வசதிகளும் கணிசமான அளவுக்கு அதிகரித்து விட்டன.

காங்கேசன்துறைத் துணைத் தேர்தலை எவ்வளவு காலத்திற்குப் பிற்போட ஐக்கிய முன்னணி அரசாங்கம் திட்டம் இட்டதெனக் கூறுவது கடினம். தரப்படுத்தல் ஏற்படுத்திய சிரமமான நிலைமை சிறிது தேறும் வரை அரசாங்கம் காத்திருந்தது என்றால், அது நடப்பதற்கு முன்னமே மேலும் புதிய சிக்கல்கள் உருவாகி விட்டன. அரசாங்கம் எதிர்பார்த்த விதமாகவோ தமிழரசுக்கட்சி எதிர்பார்த்த விதமாகவோ இல்லாமல், வடக்கின் அரசியலில் மாற்றங்கட்கான வித்துக்கள் ஏற்கனவே விதைக்கப்பட்டுவிட்டன.

# இனம் வர்க்கம் கட்சிகள்

இலங்கையின் இன்றைய அரசியல் அரங்கிலே பெரும் பாலான அரசியல் கட்சிகளை இன அடையாளம் இட்டு அழைக்கப்படுவதை அவதானிக்கலாம். தமிழ்க் கட்சிகள், சிங்களக் கட்சிகள், முஸ்லீம் கட்சிகள், மலையகக் கட்சிகள் எனத் தம்மைக் கூறிக் கொள்வதில் அவை விருப்பமும் பெருமையும் கொள்கின்றன. அவ்வாறாயின் இக் கட்சிகள் அந்தந்த இனம் சார்ந்த மக்களின் ஒட்டுமொத்தமான நலன்கள் யாவற்றையும் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா? உண்மையில் அத்தகைய கட்சிகளால் குறிப்பிடப்படும் இன மக்களுக்கு விடுதலையும் விமோசனமும் கிடைத்து வருகிறதா? இவை மிக ஆழமான சிந்தனைகளையே கிளறிவிடுகின்றது.

இன நலன்கள் என்று கூறப்படுபவைகளுக்கும் அப்பால் சமூகத்தில் வர்க்க நலன்கள் என்பது மிகவும் கெட்டித் தன்மை வாய்ந்ததாகும், இனமா? வர்க்கமா? என்னும் இடம் வரும் போது இன உணர்வோ – நலமோ பின்னுக்குத் தள்ளப்பட்டு விடும். வர்க்கமே அதாவது சொத்துடமையும் பணமும் முன்னுக்கு வருவது மட்டுமின்றி ஆதிக்கமும் பெற்று விடுவதைக் காண்கின்றோம், ஆனால் வர்க்க நலன்களையும் தேவை களையும் எவரும் அப்பட்டமாக வெளிக் காட்டுவதில்லை. ஏனெனில் இலகுவாக மக்களைத் திசை திருப்பி வைத்திருப்பதற்கு உரிய முகமூடி இனநலன் காத்து நிற்பது என்பதாகவே இருந்து வருகிறது.

மேற்கூறியவற்றினை இலங்கையின் அரசியலில் மிகவும் துல்லியமாகக் காணமுடியும். சிங்களக் கட்சிகள் எனச் சுட்டப்படும் கட்சிகள் தாம் சிங்கள – பௌத்த நலன்களைப் பாதுகாக்கும் பிரதிநிதிகளாகவே பேசிக் கொள்வர். ஆனால் அவர்கள் கூறும் நலன் பேணல் சாதாரண சிங்களத் தொழிலாளி, விவசாயி, உழைப்பாளிகளின் வர்க்க நலன்களை ஒரு போதும் பேணுவதில்லை. ஆட்சி அதிகாரத்தில் மாறி மாறி ஆட்சி செய்த கட்சிகள் சிங்கள பௌத்த இனமத மக்களின் நலன்களைப் பாதுகாத்துப் பேணியுள்ளதாக யாராவது கூறுவார்களேயானால் இன்று சிங்கள மக்களிடையே வேலை இன்னமை, வீடின்மை, வறுமை, ஏனைய சமூகப் பிரச்சினைகள் எதுவுமின்றி அவ் இன மக்கள் மிக உயர்வான ஒரு சமூக வாழ்க்கைச் சூழலில் இருந்திருக்க வேண்டும். ஆனால் உண்மையான நிலை யாது?

அவ்வாறே தமிழ்க் கட்சிகள் தத்தமது வர்க்க நிலைமைகளைப் பேணாது அவற்றுக்கும் அப்பால் முற்றுமுழுதான தமிழின நலன்களுக்காக நின்று வந்திருக்கிறார்களா? இல்லவே இல்லை. அவ்வாறு அவர்கள் செயற்பட முடியாது போனமைக்கு காரணம் அவர்களது அடிப்படை வர்க்க நிலைப்பாடேயாகும். இங்கேயும் வர்க்கத்தை மீறிய இன நிலைபப்பாடு ஒருபோதும் ஏற்படவில்லை. அது சேர்பொன் இராமநாதன் முதல் இன்றைய சிவசிதம்பரம் வரை வெளிப்படையான விடயமாகும். அல்லது தொண்டமான் முதல் இன்றைய அவரது வாரிசான பேரன் ஆறுமுகம் தொண்டமான் வரை 'இந்திய வம்சாவழி' என்பது வர்க்க அரசியலைப் பாதுகாக்கும் இன முகமூடியேயாகும். முஸ்லீம் மக்களுக்கான கட்சிகள் எனப் புறப்பட்ட கட்சிகளின் நடைமுறைகளும் மேற்கூறிய வற்றுக்கு ஒப்பானதேயாகும்.

இவற்றுக்கும் மேலால் தீவிரவாத ஆயுதம் ஏந்திய தமிழர் அமைப்புகள் ஆரம்பத்தில் தமிழர்களைக் காக்க வந்த இரட்சகர்கள் போல் காட்சி காட்டினார்கள். அதிக காலம் செல்வதற்குள் தத்தமது வர்க்க முத்திரைகள் எவை எவை என்பதை இனம் காட்டிக் கொண்டார்கள். இன்று அவற்றின் நிலை உள் நாட்டினதும் அந்நிய நாடுகளினதும் ஆளும் வர்க்க கைப்பாவைகளாகி நிற்கின்றன. இவர்களுக்கும் தமிழர்களின் இன நலன்களுக்கும் எந்தவித உறவும் கிடையாது. புலி எதிர்ப்பு கவசங்களை நெஞ்சில் மாட்டிக் கொண்டு உயர் வர்க்க சக்திகளுடன் இணைந்து தங்களையும் தம்முடன் உள்ள வர்க்க வசதி படைத்தவர் களையும் பாதுகாத்து நிற்கிறார்கள்.

மூத்த தமிழ்க் கட்சியான தமிழரசு– தமிழர் கூட்டணியின் இன்றைய நிலை கவனத்திற்குரியது. எப்போதும் தமக்கு சமதையான சிங்கள ஆளும் வர்க்க கட்சியான யூ.என்.பியுடன் கை கோர்த்து வந்த அவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் அதனோடு இணைந்த பாராளுமன்ற இடதுசாரிகளையும் சதா எதிர்த்து வந்தார்கள், அதற்குக் காரணம் அவ்வப்போது சில முற்போக்கான கொள்கைகளை ஐக்கிய

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

நன்றி - நூலகத்திட்டம்



# மலையக மண்ணிலே வளர்க்கப்படும் இனவாதம்

இலங்கையில் இனவாதம் புதிய விடயம் இல்லை. அது இந்த நூற்றாண்டு முழுவதும் வளர்க்கப் பட்டு வந்த மோசமான நச்சு மரமாகும். அதன் தீய விளைவுகளை இன்று நாடு அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இத்தகைய நச்சுத் தனமான இனவாதத்தை மேன் மேலும் வளர்ப்பதில் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள பேரினவாதிகளும் தமிழர் முஸ்லீம் மக்களிடையே உள்ள சுயநலவாதிகளும் முன்னிற் கிறார்கள்.

மலையகப் பிரதேசங்களில் சிங்கள தமிழ் முஸ்லீம் மக்கள் பரந்தும் செறிந்தும் வாழ்கின்றனர். இவர்களி டையே இனவாதத்தை வளர்ப்பதில் பேரினவாதக் கட்சிகள் என்றுமே பின் நின்றதில்லை. ஆட்சிக்கு வந்த இரு பெரும் கட்சிகளும் இனவாத அடிப்படையில் மலையகத் தமிழ் மக்களை இரண்டாம் தரமான வர்களாகவே நடாத்தி வந்திருக் கிறார்கள். அவர்களது 'குடியுரிமை –வாக்குரிமை பறிக்கப்பட்டது முதல் காணி, வீடு, வாழும் உரிமை, அடிப்படைத் தேவைகள் அனைத்திலும் இன – வர்க்கப் பாகுபாட்டுடனேயே நடாத்தப்பட்டு வந்திருக்கிறார்கள். இன்றும் அவர்களது அன்றாட தேவைகள் அரசாங்க நிறுவனங்களில் கல்விக் கூடங்களில் மறுக்கப்படுகின்றன. ஒரு கிராம சேவையாளர் அல்லது இறப்பு பிறப்பு விவாகப் பதிவாளரிடம் தமிழ் மொழியில் எதையுமே பதிய முடியாது. அடையாள அட்டை பெறமுடியாத நிலையில் மலையக மக்களில் அறுபது வீதம் உள்ளனர். ஒரு சாதாரண தபால் நிலையத்தில் தமக்குரிய கருமத்தைத் தமிழில் செய்ய இயலாது. தேனீர்ச்சாலை – உணவகத்தில் கூட மலையக மக்கள் இரண்டாம் தரமாக அதாவது தரமற்ற – பழுதடைந்த உணவு வகைகளை அவர்களுக்கு மட்டுமே பறிமாறி ஏமாற்றி ஏளனம் செய்யும் நிலைதான் காணப்படு கின்றது. குறைந்த சம்பளம், கிடைக்க வேண்டிய உரிமைகள் இல்லாமை ஒரு புறம் இனவாத நடைமுறைகள் மறுபுறமுமாக மலையக மக்கள் ஒடுக்கப் படுகின்றனர்.

இவை தொடரும் அதே வேளை அண்மைக்காலங்களில் சிங்கள வீர விதான இயக்கம் என்னும் பேரினவாத அமைப்பு இனவாதத்தை மேலும் மலையக மண்ணிலே வளர்க்கும் வேலையில் வேகமாக இறங்கி நிற்கிறது. மலையக மண்ணின் மைந்தர்கள் சிங்களவர்களே என்றும் தமிழ் முஸ்லீம் மக்கள் வந்தேறு கள்ளத் தோனிகள் என்றும் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களது கருத்துக்கள் வெறும் தேர்தல்காலப் பிரசாரம் போன்று அன்றி தீவிர இனவாதத்தை வளர்க்கும் நோக்குடையதாகும்.

சிங்களவர்கள் தமது இனத்தூய்மை யைப் பாதுகாக்க வேண்டும் என்றும் கொடுக்கல் வாங்கல்களை வேற்று இனத்தவர்களுடன் வைக்கக் கூடாது என்றும் வேண்டுகோள் செய்கிறார்கள். தமிழ் முஸ்லீம் கடைகளில் சிங்களவர் பொருட்களை வாங்கக் கூடாது என்பதுடன் பெரும் சிங்கள வியாபாரிகள் சிங்கள விவசாயிகளிடம் மட்டுமே, நெல், உப உணவுப் பொருட்களை வாங்க வேண்டும் எனக் கூறுகிறார்கள். நுவரெலியா சீதையம்மன் கோவில் விவகாரத்திலும் தமிழ் கிராமசேவை யாளர் நியமன விடயத்திலும் இதே வீரவிதான இயக்கம் பேரின வாதத்தைக் கக்கி அரசாங்கத்தை பணிய வைத்திருக்கிறது.

மலையகத்தில் இடம் பெறும் ஒவ்வொரு பிரச்சினையிலும் இனவாதத்தைப் புகுத்தி சிங்கள – தமிழ் பிணக்காக்கி மோதலை ஏற்படுத்த முயற்சிகள் நடைபெறுகின்றன. இதற்கு சிங்கள இளைஞர்கள் சிலர் உண்மைகளை அறியாது பலியாகவும் செய்கிறார்கள். இவ்வாறான இனவாதத்தை இலகுவில் புகுத்துவதற்குத் தகுந்த இடமாக சிங்கள கொலனித் திட்டங்களைப் பயன்படுத்துகிறார்கள் பேரினவாதிகள்.

இத்தகைய பேரினவாதிகளுக்கு மறு முனையிலே உதவுவதற்கு தமிழ் இனவாதத்தை தூண்டும் சக்திகள் ஆங்காங்கே செயல்பட ஆரம்பித்துள்ளன. மலையகத்தில் நீண்டகால தொழிற்சங்க – பாராளுமன்ற அரசியலில் சுயலாபமும் சுகபோகமும் அனுபவித்த சக்திகள் இன்று மலையக மக்களால் நிராகரிக் கப்பட்டு வெறுத்து ஒதுக்கப்பட்டு வருகின்றன. இதனை ஈடுசெய்வதற் குரிய குறுக்கு வழியாகவே இந்த பரம்பரை வழிவந்த தொழிற்சங்க தலைமையானது இனவாதத்தைக் கிளப்பி தங்களை வீரர்களாகக் காட்ட முற்பட்டுள்ளனர். "சிங்களவர்களுக்கு உரிய பாடம் புகட்ட வேண்டும்". "அடிதான் ஒரே வழி" எனக் கூறிக் கொள்வதுடன் தம்மை 'மலையகத்துப் பிரபாகரனாகவும்' 'மலையகத்துப் புலிகளாகவும்' காட்டி கதாநாயகர்களாக முற்பட்டுள்ளனர்.

இத்தகைய தவறான போக்கு மிகவும் ஆபத்தானதாகும். பேரினவாத ஒடுக்குமுறையை அதற்கு எதிரான சரியானதும் உறுதியானதுமான தளத்தில் நின்று எதிர்த்துப் போராடுதல் வேண்டும். அதை விடுத்து பேரினவாதத்தை தமிழ் இனவாத அடிப்படையில் நின்று எதிர்க்க முடியாது. அப்படிச் செய்தால் வெறுமனே சிங்கள – தமிழ் மக்களுக்கிடையிலான மோதலைத்தான் தோற்றுவிக்க முடியும். இதனை இலங்கையின் கடந்தகால நிகழ்கால அரசியல்–யுத்த நிகழ்வுகளில் இருந்து கண்டு கொள்ளலாம். உதாரணமாக கொழும்பில் பேரினவாத அரசியல் தலைவர்களுடன் எவ்வித தயக்கமும் இன்றி கூடிக்குலாவி கும்மாளமிட்டுக் கொள்ளும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களிடம் வந்து சிங்களவனை அடி என்று உசுப்பி விடுவதன் உள்நோக்கம் என்ன? இரத்தினபுரி வேவல்வத்தையில் நானூறு லயன்கள் எரிக்கப்பட காரணமாக பின்னணியில் இருந்த ஒரு பிரதி அமைச்சருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஏன் நீங்கள் கேட்கவில்லை என ஒரு இ.தொ.கா. பாராளுமன்ற உறுப்பினரிடம் கேட்டபோது "நானும் இந்த அமைச்சரும் இப்போது தான் ஒன்றாக இருந்து சாப்பிட்டுவிட்டு வருகிறோம். எப்படி நான் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி கேட்க முடியும்" என்று கூறியதை இலகுவில் மறந்துவிட முடியாது. இது தான் உண்மையான வர்க்க உறவும் வர்க்க பாசமும்.

இவற்றைப் புரிந்து கொண்டுதான் மலையக மக்களும் இளைஞர்களும் பேரினவாதத்தை மலையகத்தில் முறியடிக்க எவ்வாறு போராடுதல் வேண்டும் என்பதை வரையறை செய்தல் வேண்டும். மலையகத்தில் இனவாதத்தை வளர்ப்பதில் பேரினவாதிகள் மும்முரமாக நிற்கிறார்கள். அதே வேளை அதற்குப் பதில் தமிழ் இனவாதம் என்பதாக இருக்க முடியாது. அது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் சுயநல அரசியல் தொழிற்சங்கத் தேவைகளுக்குரியதே அன்றி மலையக மக்களுக்குரியதல்ல.

அன்று வடக்கு கிழக்கில் தமிழ்ப் பாராளுமன்றவாதிகள் செய்ததும் இதையே தான். ஆனால் அவர்கள் ஊட்டி வளர்த்த தமிழ் இனவாதமே அவர்களுக்கு இறுதியில் எமனாகியது என்பதையும் மறந்துவிட முடியாது. சிங்களவர்கள் மத்தியில் வளர்க்கப்பட்ட பேரின வாதமும் தமிழர்களிடையே தூண்டிவிடப்பட்ட இனவாதமும் இலங்கையில் சாதித்தவைதான் என்ன? யுத்தத்தையும் அழிவுகளை யும் இரத்தப் பெருக்குகளையும் உயிரிழப்புக் களையும் தான்.

எனவே மலையகத்தில் பேரினவாதத்தை எதிர்த்து நிற்கும் ஒரு நியாயமான மனிதனால் தமிழர் தரப்பில் இருந்து தூண்டிவிடப்படும் குறுகிய இனவாதத்தையோ – தேசியவாதத்தையோ எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளமுடியாது. இவற்றை எதிர்த்து நிற்கக் கூடிய சரியான அரசியல் தளம் ஒன்று ஏற்கனவே மலையகத்தில் தோற்றம் பெற்று விட்டது. அது வர்க்கப் போராட்டத்தளமாகும். அதனை வலுப்படுத்தி முன்னெடுப்பதே மலையகத்தில் முன்னெடுக்க வேண்டிய பணியாகும்.

# சரவணப் பொய்கை

பொய்யொன்றே போது மென்ற போது உண்மையே பேசாத உத்தமர்கள் இருக்கிறார்கள். புராணத்தில் சூரனுடைய தலை விழுந்தால் இன்னொரு தலை, பிறகு மரம், சேவல், மயில் என்றெல்லாம் வருவது பற்றி சொல்வார்கள். ஒரு புனைபேரில் புளுகு அகப்பட்டால் இன்னொரு புனை பேரில் மறுபிறவி எடுக்கிற பேனாச் சூரர்களும் இருக்கிறார்கள். கொயபெல்சு முட்டாள் புளுகுணி. இங்கே கொயபெல்சுடைய பாட்டனுக்கும் கற்றுத்தரத் தெரிந்த புளுகுணிகள் இருக்கிறார்கள்.

மார்ச் மாதம் வந்து ஒரு சரிநிகரில் அப்துல்லா ஒச்சலான் பற்றி இரண்டு பக்க நீளக் கட்டுரை வந்திருந்தது. அடேங்கப்பா, ஒரு மார்க்சிய லெனினிச விடுதலை இயக்கத்துக்கு இப்படி ஒரு அங்கீகாரமா என்று அதிசயமாக இருந்தது. உள்ளே பூந்து பார்த்த பிறகுதான் விளையாட்டே வேறு என்று புரிந்தது. குர்திஸ் தொழிலாளர் கட்சி (பி.கே.கே.) மாக்சிசக் கட்சி என்பதால் இன விடுதலைக்காகப் போராட வில்லை, மாக்சியக் கட்சியாக இருந்தும் அது குர்திஸ் தேசியஇன விடுதலைக்காகப் போராடுகிறது என்ற பொய்மையை நைசாக வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுகிற மாதிரி உள்ளே புகுத்துவது தான் எழுதினவருடைய நோக்கம் என்பதை அவராலேயே மறைக்க முடியவில்லை. ஈரானிலும் ஈராக்கிலும் உள்ள குர்திஸ் தேசிய விடுதலை இயக்கங்களுக்கும் பி.கே.கேக்கும் அடிப்படையில் என்ன வித்தியாசம் என்பதைப் பற்றி ஆராய விரும்பாத அவர் விடுதலைப் புலிகளுடன் ஒரு மேலோட்டமான ஒற்றுமையை அடையாளங் காட்ட மட்டும் தவறவில்லை.

அது ஒருபக்கம் இருக்க, கம்யூனிஸ்ட் கட்சிகள் எல்லாம் பி.கே.கே யின் குர்திஸ் விடுதலைப் போராட்டத்தை விரும்பவில்லை என்றும் அவர் ஒரு சிறு பட்டாசு வெடிக்கிறார். துருக்கியில் உள்ள சட்ட விரோதமான கம்யூனிஸ்ட் கட்சிக்கும் பி.கே.கேக்கும் உள்ள உறவு அவருக்குத் தெரியாதா? உலகின் எந்த மாக்சிச லெனினிச கம்யூனிஸ்ட் கட்சி பி.கே.கேயின் போராட்டத்தை எதிர்க்கிறது என்று அவர் சொல்லி இருக்கலாமே, அவர் சொல்லமாட்டார். சொன்னால் பட்டாசு புஸ்சென்று போய்விடும்.

இந்தியாவிலும் இலங்கையிலும் முதலாளியத்திடம் சோரம்போன திரிபு வாதிகள் போல, நாட்டுக்கு ஒரு கூட்டம் உலகம் முழுவதும் தான் இருக்கிறது. அவர்களைக் காட்டி மாக்சிசத்தை இழிவுபடுத்துகிற கும்பல்களைப் பற்றி நாம் பல காலமாக அறிவோம். சரிநகர் ஆசாமி கொஞ்சம் ஒறிஜினலாக ஏதாவது செய்து பார்த்திருக்கலாம்.

எனவே அவருக்கு புதிய ஜனநாயகக் கட்சி, மாக்சிசம் லெனினிசம் என்றால் தாங்க முடியாது. கொஞ்சக் காலமாக சரிநிகரில் தலித்தியக் குறிப்புகள் ஒரு தொடர் வந்தது. அதிலே வடக்கில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமும் மாக்சிச லெனினிச வாதிகளும் நடத்திய போராட்டங்களை ஓரங்கட்டக் கடுமையாக முயற்சி பண்ணினார். யாரும் அதை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

அவருக்கு மலையகத்தில் ஒரு மூன்றாவது அணி வேணுமாம். அது யாராயிருந்தாலும் பரவாயில்லை. புதிய ஜனநாயகக் கட்சியாக மட்டும் இருக்கக் கூடாது என்று ஒரு சின்னச் சின்ன ஆசை, சிறகுடைந்த ஆசை, அவர் சொல்ல விரும்புகிற விஷயம் ஜே.வி.பி. அங்கே மூன்றாவது அணியாக வளரவேண்டும் என்பது. சரிநிகரில் ஜே.வி.பி. மட்டும் 1968தொடக்கம் பாடி வருகிற இந்திய விஸ்தரிப்பு வாதம் என்கிற பாட்டை இன்னமும் பாடி வருகிறது. ஜே.வி.பி. தன்னுடைய சிங்கள பேரினவாதப் பாதையை எப்போ கைவிடும் என்று தெரியவில்லை. அது வரைக்கும் ஐயா பாடும் கொஞ்சம் கஷ்டம் தான்.

சரிநிகரிலே மார்ச் 19ம் திகதி வெள்ளவத்தையில் புதிய இடதுசாரி முன்னணி நடத்திய கூட்டம் பற்றியும் ஒரு குறிப்பு வந்திருந்தது. அதிலே குமார் பொன்னம்பலம் அந்தக் கூட்டத்தில் பங்குபற்ற விரும்பியதாகவும் புதிய ஜனநாயகக் கட்சியினர் அதில் பேச இருந்ததால் அவர் ஒதுங்கிவிட்டதாகவும் தெரிவித்ததாகத் தெரிகிறதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

குமார் பொன்னம்பலத்துக்கு பு.இ.மு. சார்பாகப் பு.ஜ.க. வேட்பாளர்கள் தேர்தலில் நிற்பது தெரியாது என்று சரிநிகர் நினைக்கிறதா? இல்லை, பு.ஜ.க. வெளியேறினால் அவரும் ஜே.வி.பியும் பு.இ.மு.வுடன் சேர்ந்து தமிழிழத்தை மீட்டுத் தருவதற்குப் போராடுவார்கள் என்று அங்கே யாராவது நினைக்கிறார்களா? இல்லை, விக்கிரமபாகு கருணாரத்தினவுக்கும் புதிய ஜனநாயகக் கட்சிக்கும் சிண்டு முடிய முயன்ற மாதிரி குமார் பொன்னம்பலத்துக்கும் புதிய ஜனநாயகக் கட்சிக்கும் சிண்டு முடிகிற முயற்சியா இது? குமாரின் பாதை ஒன்று, பு.ஜ.க. பாதை இன்னொன்று. அவர் இவர்களுடன் மோதாத வரையில் இவர்கள் அவருடன் மோத அவசியமில்லை.

மாக்சிசத்தை தாக்குகிறதற்காக எதையெதையோ எல்லாம் 'உளறிக் கொட்டுகிறவர்களுக்கு ஒரு ஆலோசனை:

*துள்ள நரி கொம்பை கோத்துப்போடு சாமி*
*புள்ள குட்டிக்காச்சும் நல்ல புத்தி வரும்.*

**உ.சி. கணேசன்**

# அன்று திராவிடப் பொன்னாடு இன்று திராவிடப் பன்னாடை!

திராவிட இயக்கங்களின் தேசியவாத அரசியல் முழுப் பன்னாடை அரசியலாகி விட்டது. மத்தியில் யார் ஆட்சியில் இருக்கிறார்கள் என்பது பற்றி இவர்களது அக்கறைக்கு ஒரே ஒரு காரணம் தான் உண்டு. தமிழ் நாட்டில் தங்கள் குட்டிச் சாம்ராஜ்யங் களைக் காப்பாற்றிக் கொள்ளத் தடையாக யாரும் இல்லாத வரை ராமன் ஆண்டால் என்ன ராவணன் ஆண்டாலென்ன என்பது தான் திரா விடச் சுயமரியாதைச் சிங்கங்களது அரசியல் நெறியாகிவிட்டது.

கடற்படைத்தளபதி [illegible] பதவி விலக்கலைக் காரணங்காட்டி ஜெயலலிதா இப்போது பா.ஜ.க. ஆட்சிக்கு ஆதரவை விலக்கி யுள்ளார். காரணம் ஒன்றே ஒன்று தான். தி.மு.க. ஆட்சியைக் கவிழ்க்கவோ தன் மீதான வழக்குக் களை முற்றாக நீக்கவோ வாஜ்பாய் தலைமையால் இயலாது, என்பதை விட அவரது பிரச்சினை வேறு இல்லை. இது தான் அ.தி.மு.க.வின் இன்றைய அரசியல்.

ஜெயலலிதாவின் ஆதரவுடன் டெல்லிக்கு போன ம.தி.மு.கவினரின் தலைவர் வை.கோபாலசாமி அப்படியே பா.ஜ.க. பக்தராகி விட்டார். எந்த ஆரிய விரோத, பார்ப்பனிய விரோத அண்ணாவின் தம்பியை எல்லாரும் ஒரு உண்மையான தன்மானத் தமிழர் என்று நம்பியி ருந்தார்களோ அந்த எல்லா ரையும் கைவிட்டுவிட்டு அவரும் பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் டாக்டர் ராமதாசும் முன்னாள் தி.மு.க. இந்நாள் ராஜுவ் காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமுர்த்தியும் பா.ஜ.கவே கதி என்றாகி விட்டார்கள்.

பார்ப்பனிய விரோத தி.மு.க.வைப். பொறுத்தவரை, அ.தி.மு.க. ஆதரிக்கிற ஆட்சியை ஆதரிக்க மாட்டோம் என்ற உன்னதமான கொள்கை மட்டுமே அதனிடம் இப் போது உள்ளது. எனவே பார்ப்பனிய பா.ஜ.கவை ஆதரிக்க அவர்களுக்கு இனி ஒரு தடையும் இல்லை.

வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது, ஆரிய மாயை, என்று நிறைய வசனம் பேசி வளர்ந்த தி.மு.கவும் அதிலிருந்து கிடைத்த கட்சிகளும் இன்று தமிழ்நாட்டில் இந்து வெறியர்கட்குக் களமமைத்து பா.ஜ.க. வேரூன்றவும் உதவி செய்துள்ளார்கள். அவர்களைப் பொறுத்த வரையும் டெல்லியில் யாராண்டாலும் பரவாயில்லை. முழு உலகையும் பன்னாட்டு நிறுவனங்கள் கொள்ளையடித்தாலும் பரவாயில்லை. தங்கள் குடும்ப அரசியல், ஊழல் ஆட்சி, கொள்ளைஅடிப்பு, கட்சிக் குண்டர் அட்டகாசம் எல்லாம் தமிழ் நாட்டில் கொடிகட்டிப் பறக்கும் வரை தமிழ் நாடே அழிந்தாலும் பரவாயில்லை.

இந்த நோய்பிடித்த அரசியலிலிருந்து தமிழ் நாட்டை மீட்பதானால் தமிழகத்தில் ஒரு நல்ல கம்யூனிஸ்ட் கட்சி வளர வேண்டும். இன்றைய சி.பி.எம்., சி.பி.ஐ. இரண்டையும் பார்க்கும் போது அந்த நம்பிக்கை வரட்சியாகவே காணப்படுகிறது.

*ப. மூத்து*

நன்றி - நூலகத்திட்டம்



# அக்கம் பக்கம் ஐ.ஐ.ஓ

## மண்வெட்டிப் பிடிகளும் மனிதவலுவும்

சில காலங்களின் முன், மண்வெட்டிப் பிடிகள் பற்றி ஒரு செய்தி வந்தது. கமத்தொழிலாளர்களுக்கு என்று கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக விநியோகஞ் செய்யப்பட்ட மண்வெட்டிகளுக்குப் பிடிகள் தேடுவது பற்றிய செய்தி அது. உள்ளூரிலே தக்க பிடிகள் கிடைக்கவில்லை என்று வெளி நாட்டிலிருந்து பிடிகள் இறக்குமதி செய்யப்பட்டனவாம். ஆனால், அவை பயன்பாட்டுக்கு உதவாதவை, தரமற்றவை என்று, இறக்குமதியின் பின்பு கண்டுபிடிக்கப்பட்டதாம். இதனால், ஏற்கனவே தருவித்து விநியோகிக்கப்பட்ட மண்வெட்டிகள். வேளாண்மைக்குப் பயன்படாமல் வேலையற்றுக் கிடக்கின்றனவாம். அவற்றுக்கு வேலையில்லாத் திண்டாட்டமாம்.

இத்தனைக்கும், இலங்கையர்களை அல்லது யாழ்ப்பாண மக்களைப் பொறுத்தவரை, மண்வெட்டிப் பிடிகள் கிடைத்தற்கரிய அரும்பெரும் திரவியங்கள் அல்ல. அவை பொன்னாலோ, மணியாலோ, பிளாற்றினத்தாலோ செய்யப்படும் பண்டங்கள் அல்ல. சாதாரண பூவரசந் தடிகளே போதும் – மண்வெட்டிப் பிடிகள் செய்வதற்கு பூவரச மரங்கள் இல்லாவிட்டால், வேறு பொருத்தமான மரத்தடிகளைத் தெரிந்தெடுப்பது, அப்படி ஒன்றும் இயலாத காரியம் அல்ல.

இவற்றைச் சீவிச் செப்பஞ் செய்து பிடிகளாக்குவதும் பெருந்தொழில் நுட்பமுறைகளை வேண்டி நிற்கும் அற்புத வித்தை அல்ல. மண்வெட்டிக்குப் பிடிபோடும் வேலையை இலங்கையிலுள்ள மனிதப்பிறவிகளும் இன்று நேற்றல்ல எத்தனையோ பல்லாண்டுகளுக்கு முன்பிருந்தே செய்து வந்தவர்கள் தான்.

இனி, எங்கள் நாடு மனித வலு வளம் குன்றிய நாடு என்றும் சொல்ல முடியாது, 'காலங்கடந்த காலத்திலிருந்து', உடலுழைப்பையும் மூளையுழைப்பையும் மூலதனமாகக் கொண்டு தான் நாம் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அப்படியானால், மண்வெட்டிப் பிடிகளுக்குக் கூட இறக்குமதிகளை எதிர்பார்த்துக் கை நீட்டிச் காத்திருக்கும் நிலைக்கு நாம் ஏன் வந்தோம்? எப்படி வந்தோம்?

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்" என்ற பள்ளுப் பாட்டு வெறும் 'பள்ளிப்' பாட்டாய் நின்று விட்டதற்குக் காரணம் என்ன. அந்தப் பாடலும் கூத்தும் அபிநயமும் ஆட்டமும் ஆகிய எல்லாமே, பரிசளிப்பு விழா மேடைகளுடன் நின்று விடுவது ஏன்?

இந்தியாவிலும் இலங்கையிலும் விடுதலை இயக்கங்கள் முன்னெடுக்கப்பட்ட காலகட்டத்திலே, சுதேசி எண்ணங்கள், தற்சார்புக் கருத்துக்கள் மேலோங்கி நின்றமையை நாம் அறிவோம். எதற்கும் வேற்று நாட்டாரின் மீதும் தங்கியிருந்து அவர்களிடம் கையேந்தி அவர்களின் தயவிலே பிழைப்பது என்ற நிலைப்பாடு இகழப்பட்டதையும் எதிர்க்கப்பட்டதையும் நாம் அறிவோம். அப்பொழுதெல்லாம் உள்ளூர்த் தொழில்களும் உள்ளூர் முயற்சிகளும் ஊக்குவிக்கப்படல் வேண்டும் என்ற இலட்சியம் உயர்ந்தோங்கி நின்றதும் நாம் அறிந்ததே.

இந்த நாடுகள், கிழக்காசிய நாடுகள், சுதந்திரம் பெற்ற பின்னர், தாம் தமது சொந்தக் கால்களில் நிற்க வேண்டும் என்ற வேட்கை படைந்திருந்த என்று சொல்லப்பட்டதையும் நாம் அறிவோம். வெறும் அரசியல் சுதந்திரம் நமக்குப் போதாது. பொருண்மியச் சுதந்திரம் தான் பெருமை மிக்கது, பெறுமானம் கூடியது என்று, அரசுகட்டிலில் அமர்ந்தவர்கள் இடையிடையே பேசி வந்ததும் மெய்தான். உள்ளூர் உற்பத்தியும் தொழில் முயற்சிகளும் தான் சுபிட்சத்துக்கு ஏற்ற நல்வழிகள் என்று அவற்றை மேம்படுத்துவதற்கென்று திட்டங்கள் தீட்டப்பட்டதும் உண்டு தான்.

ஒரு காலத்திலே, இளைய தலைமுறையினரின் சிந்தனைகளிலே, உழைப்பின் மேன்மையைச் செறிவாக்குவதற்கு அறிவறிந்த முயற்சிகள் செய்யப்பட்டமையும் நாம் அறிந்ததே. பள்ளிப் பாட விதானங்களிலும் கலைத் திட்டங்களிலும், 'செயல் மூலம் உணர்தல்', 'தொழில் முன்னிலைப் பாடம்', 'சுற்றாடற் கல்வி', என்னும் கூறுகள் மிகுந்த ஆர்வத்துடன் முன் வைக்கப்பட்டன. இவைகள் எல்லாம் என்ன ஆயின? இப்பொழுது நாம் பழுதுபட்ட மண்வெட்டிப் பிடிகளை இறக்குமதி செய்து அவற்றைத் தூக்கி வீச வேண்டிய நிலைக்கு வந்திருக்கிறோமே, இது ஏன்?

இப்பொழுதும் கூட, நாம் 'வாழ்க்கைத் திறன் பாடம்', 'உடற்கல்விப் பாடங்கள்' என்று சில முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோமே! இந்தத் திட்டங்களிலுள்ள நல்லெண்ணங்களும், இலக்குகளும் வெறும் சொல்லளவில் மட்டும் தான் நிற்கின்றனவா?

வினாக்கள் பல. விடைகள் மட்டுந்தான் குறைவு. உண்மை என்னவென்றால், உடலுழைப்பின் மகத்துவம் இன்று மதிப்பிறக்கம் செய்யப்பட்டுள்ளது. பொருண்மிய நிகழ்முறையிலே முக்கிய கூறுகள் இரண்டு உள்ளன. அவை உற்பத்தியும் பகிர்வுமாகும். அதற்கு அப்பால், உற்பத்தி என்னும் செய்கையிலும் இரு கூறுகள் உண்டு. அவை மூலதனமும் உழைப்புமாகும். மூலதனமும் உழைப்பின் மறுவடிவம் தான். ஆனால். உழைப்பாளியிடமிருந்து பறித்தெடுக்கப்பட்ட, திரட்டிய உழைப்பே மூலதனம். உழைப்பாளியினால் நேரடியாக வழங்கப்படும் உழைப்பு உண்மையில் மிகவும் மதிப்பு மிக்கது, அடியாதாரமானது. ஆனால், அதன் பெறுமானம் இன்று குறைக்கப்பட்டுள்ளது. உடலுழைப்பு இன்று மதிக்கப்படுவதில்லை. உழைப்பாளி (அதுவும் அப்பட்டமான உடலுழைப்பாளி) இன்று இழிவாக எண்ணப்படுகிறாள்/ன்.

அது மட்டுமல்ல, உற்பத்தி, பகிர்வு என்ற இரு கூறுகளிலுங்கூட, 'பகிர்வு' என்ற கூறுதான் மிகவும் கவர்ச்சிகரமாக்கப்பட்டுள்ளது. இன்று, பகிர்வு என்பது விற்பனை, அது வணிகம், அது போட்டி, அது விளம்பரம், அது புளுகு, அது மாயை, அது சந்தை, சந்தைப் பொருளாதாரம் இன்று சிலாகித்துப் பேசப் படுகிறது, அது போற்றப்படுகிறது, பூசிக்கப்படுகிறது, தெய்வமாக்கப்படுகிறது.

தெய்வீகத் துறைகள் கூட, இன்று பகட்டையும் படாடோபத்தையும் தம்மீது பூசிக்கொண்டு தான் பளபளப்புக் காட்டுகின்றன.

இந்த நிலையிலே, பூவரசந்தடிகளைச் சீவுவதற்கு ஆட்களில்லை, அவற்றை அளவாக அரிந்து வெட்டி அழுத்தமாக்கித் தருவதற்கு ஆட்களில்லை, அந்த வகையான திறமை பெற்றிருந்த தொழிலாளர் பட்டாளத்தை நாம் இழந்து விட்டோம். இரும்பைக் காய்ச்சுவதற்கும், உருக்குவதற்கும், இயந்திரங்கள் வகுப்பதற்கும், கரும்பைச் சாறு பிழிவதற்கும், கடலில் மூழ்கி நல் முத்து எடுப்பதற்கும் வல்லமை உடையோராய் இருந்த பட்டாளி மக்களை நாம் பழித்தோம், பகிடி பண்ணினோம், சாதியத் தடிப்பினாலே தள்ளி வைத்தோம், ஒதுக்கினோம். பலன்?

அந்தத் திறன்வாய்ந்த தொழிலாளர் பட்டாளம் இன்று நம்முடன் இல்லை. அந்தப் பட்டாளத்தின் வழித்தோன்றல்கள், கண்காணாத தொலைதூரங்களுக்கு ஓடிச் சென்று விட்டார்கள். இரவு பகலாக மாய்ந்து தம்மை வாட்டி உழைத்துழைத்து எஞ்சிய சில காசு பணங்களை இங்கு எமக்கு அனுப்பி வைக்கிறார்கள். அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு மாத்திரம் வசதிவாய்ப்புகளை வாரி வழங்கும் உலகளாவிய சந்தைப் பொருளாதாரத்தின் புண்ணியத்தினால், அந்த உழைப்பாளிகளின் உறவினர்களாகிய நாம் பெரும்பேறு பெற்றவர்களாக நம்மைக் கருதிக்கொண்டு உல்லாசமாகக் காலந்தள்ள நினைக்கிறோம். இக்கரைக்கு வந்து சேரும் அந்த இலவச இரவல் உல்லாசத்துக்காக, அக்கரைச் 'சீமைகளில்' அதோ சில அருமையான அப்பாவிச் சீவன்கள் தம்மைக் கசக்கிப் பிழிந்து கரைந்து போவதை நாம் கவனத்திற் கொள்வதில்லை.

பலவும் சொல்லி என்ன? உலகளாவிய சந்தைப் பொருளாதார மாய வித்தையினாலே, உண்மையான நேரடி உழைப்புகள் பெறுமதி குறைந்தவையாகக் காட்டப் படுகின்றன, மாற்றப் படுகின்றன.

உள்ளூர், உள்நாட்டு உற்பத்திகளைவிட, இறக்குமதிகளை நம்பியிருப்பது நல்லது என்ற கருத்து நமக்கெல்லாம் இடித்து ஊட்டப்படுகிறது.

பழுதான மண்வெட்டிப் பிடிகளை இறக்குமதி செய்து அவற்றைத் தலையைச் சுழற்றி வீச வேண்டிய கதி இவ்வாறுதான் நமக்கு ஏற்பட்டது.

# வெகுஜன மார்க்கம்

## தோழர் மா ஓ கூறுகிறார்

மக்கள், மக்கள் மட்டுமே, உலக வரலாற்றைச் சிருஷ்டிக்கும் உந்து சக்தி ஆவர்.

**"கூட்டரசாங்கம் பற்றி"**
**24 ஏப்ரல். 1945.**

பொதுமக்கள் தான் உண்மையான வீரர்கள், ஆனால் நாம் அடிக்கடி சிறுபிள்ளைத்தனமுடையவர்களாகவும், நகைக்கத்தக்கவர்களாகவும் இருக்கின்றோம், இதை விளங்கிக் கொள்ளாவிட்டால், மிக ஆரம்ப அறிவை கூடப் பெறுவது சாத்தியமாகாது.

**"கிராமிய பரிசீலனையின் முன்னுரையும் பின்னுரையும்"**
**மார்ச-ஏப்ரல், 1941.**

பொதுமக்கள் எல்லையற்ற சிருஷ்டி ஆற்றல் உடையவர்கள். அவர்கள் தம்மை ஸ்தாபனரீதியில் அணிதிரட்டி, தமது ஆற்றலைப் பூரணமாக வெளிப்படுத்தக் கூடிய இடங்களுக்கும், துறைகளுக்கும், படையெடுத்துச் செல்ல முடியும். அவர்கள் உற்பத்தியில் ஆழமாகவும் அகலமாகவும் சென்று, மென்மேலும் அதிகமான சேமநல முயற்சிகளைத் தமக்குத் தாமே உருவாக்க முடியும்.

**"உபரி உழைப்பு சக்திக்கு ஒரு வழி பிறந்து விட்டது"**
**1955.**

நமது கட்சி 20 ஆண்டுகளுக்கு மேலாகத் தினம் தினம் வெகுஜன வேலையில் ஈடுபட்டு வந்திருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக அது தினம் தினம் வெகுஜன மார்க்கம் பற்றி பேசி வந்திருக்கிறது. புரட்சி என்பது பொதுமக்களைச் சார்ந்திருக்க வேண்டும். அதில் ஒவ்வொருவரும் பங்கு பற்ற வேண்டும். உத்தரவுகள் பிறப்பிக்கும் ஒரு சிலரை மட்டும் சார்ந்திருப்பதை எதிர்க்க வேண்டும் என்று நாம் எப்பொழுதும் கூறி வந்திருக்கிறோம். இருந்தும் சில தோழர்களின் வேலையில் வெகுஜன மார்க்கம் இன்னும் பூரணமாக அமுல் நடத்தப்படவில்லை. அவர்கள் தனிமையில் வேலை செய்யும் ஒரு சில நபர்களை மட்டும் இன்னும் சார்ந்திருக்கின்றனர். இதற்கான ஒரு காரணம் என்ன வென்றால், தாம் ஒரு விஷயத்தை செய்யும் போது, அதை தாம் தலைமை தாங்கும் மக்களுக்கு விளக்கிக் கூற அவர்கள் ஒரு போதும் விரும்பவில்லை. தாம் தலைமை தாங்கும் மக்களின் முன்முயற்சியையும், சிருஷ்டி ஆற்றலையும் எப்படி வெளிப்படுத்த வேண்டும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. மானசீகமாகப் பார்த்தால் வேலையில் எல்லாரும் கலந்து கொள்வதை அவர்களும் விரும்புகின்றனர். ஆனால் எதைச் செய்வது, எப்படிச் செய்வது என்று பிறர் அறிவதை அவர்கள் அனுமதிக்கிறார்களில்லை. விஷயம் இப்படி இருக்கும் போது எல்லாரும் இயங்குவர் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? விஷங்களை எப்படி நன்றாகச் செய்ய முடியும்? இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால், உண்மையான அடிப்படையில் வெகுஜன மார்க்கத்தில் சிந்தாந்த போதனையை நடத்த வேண்டும். அதே வேளையில் இந்தத் தோழர்களுக்கு உருப்படியான பல வேலை முறைகளையும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

**"ஷன்ஸி சுய்யுவன் தினசரி ஆசிரியர் குழுவுக்கு ஆற்றிய உரை"**
**2. ஏப்ரல், 1948.**

24 ஆண்டுகால அனுபவமும் நமக்குப் பின்வறுமாறு கூறுகின்றது:– சரியான கடமை, சரியான கொள்கை, சரியான வேலை நடை ஆகியவை ஒரு குறிப்பிட்ட சமயத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்து பொதுமக்களின் கோரிக்கைகளுடன் எப்பொழுதும் பொருந்தாமல் இருப்பதோடு, அவர்களிடமிருந்து நம்மைத் தனிமைப்படுத்தியும் விடும். வரட்டுவாதம், அனுபவவாதம், கட்டளைவாதம், வால் வாதம், ஒரு முனைவாதம், அதிகாரவாதம், வேலையில் செருக்கு மனோபாவம் ஆகியவை எப்பொழுதும் தீமையானவை, சகிக்க முடியாதவை, இந்த நோய்களால் பாதிக்கப்பட்ட எவரும் அவற்றைத் திருத்திக் கொள்ள வேண்டும், காரணம் அவை பொதுமக்களிடமிருந்து நம்மை தனிமைப்படுத்துகின்றன.

**"கூட்டரசாங்கம் பற்றி"**
**24. ஏப்ரல், 1945**

பொதுமக்க்ளுடன் இணைய வேண்டுமானால், பொதுமக்களின் தேவைகள் விருப்பங்களின் பிரகாரம் செயல்பட வேண்டும், பொதுமக்களுக்காகச் செய்யும் வேலைகள் எல்லாம் அவர்கள் தேவையிலிருந்து தொடங்க வேண்டும். ஆனால் எவ்வளவு நல்லெண்ணம் உடைய எந்த ஒரு தனிநபரின் ஆசையிலிருந்தும் தொடங்கக்கூடாது. பல சந்தர்ப்பங்களில், புறநிலையில் பொதுமக்களுக்கு ஒரு குறிப்பட்ட மாற்றம் தேவைப்படுகின்றது. ஆனால் அகநிலையில் அவர்கள் அத்தேவையை இன்றும் உணராத, அம்மாற்றத்தை இன்னும் செய்ய விரும்பாத அல்லது தீர்மானிக்காத நிலை இன்னும் இருக்கின்றது. இத்தகைய நிலைமைகளில், நாம் பொறுமையாகக் காத்திருக்க வேண்டும். நமது வேலை மூலம் பொதுமக்களில் பெரும் பாலனவர்கள் இந்த மாற்றத்தின் தேவையை உணர்ந்து, அதை செய்ய விரும்பி, ஒரு தீர்மானத்துக்கு வரும் வரையில், நாம் அந்த மாற்றத்தைச் செய்யக் கூடாது. அல்லாவிட்டால் நாம் பொது மக்களிடமிருந்து தனிமைப்படுத்தபட்டு விடுவோம். பொதுமக்கள் பங்கு பற்ற வேண்டிய எந்த ஒரு வேலையையும் அவர்கள் தாமாக உணாந்து, செய்ய விரும்பாவிட்டால், அது வெறும் சம்பிரதாயமாக மாறி, தோல்வியடைந்து விடும். இங்கு இரண்டு கோட்பாடுகள் உண்டு:– ஒன்று, பொதுமக்களின் உண்மையான தேவைகள் அன்றி, அவர்களுக்கு தேவை என்று நாம் நமது மூளையில் கற்பனை செய்வது அல்ல. இரண்டு, பொதுமக்களின் சுய–விருப்பம். நாம் பொதுமக்களுக்காக அவர்களுடைய மனதைத் தயார் செய்வதற்குப் பதில் அவர்கள் தமது மனதைத் தாமே திடப்படுத்த வேண்டும்.

**"கலாசார வேலையில் ஐக்கிய முன்னணி"**
**30, அக்டோபர், 1944.**

நன்றி - நூலகத்திட்டம்



# கோசோவோ: ஒரு புறம் சேர்பிய பேரினவாதம் மறுபுறம் அமெரிக்க ஏகாதிபத்தியம்

அமெரிக்கா ஈராக்கின் மீது போர் தொடுத்தபோது அதற்கு ஐ.நா.சபை என்ற முகமூடி தேவைப்பட்டது. குவெய்த்திலிருந்து ஈராக்கியப் படைகள் பின்வாங்கிய பின்பும் அமெரிக்காவின் போர் நடவடிக்கை முடியவில்லை. பேரழிவுப் போர்க்கலங்களை அழிப்பது என்ற சாட்டில் இன்னமும் அமெரிக்காவின் நியாயமற்ற தாக்குதல் தொடர்கிறது. அமெரிக்காவின் தொடர்ச்சியான தலையீட்டை நியாயப்படுத்தவும் ஐநா அனுமதியில்லாமலே ஈராக்கின் வடக்கிலும் தெற்கிலும் ஈராக்கிய விமானங்கள் பறக்கத் தடை விதிக்கவும் அமெரிக்கா காட்டிய நியாயங்களில் ஒன்று, சதாம் ஹுசேனிடமிருந்து வடக்கின் குர்திய மக்களைக் காப்பதும் தெற்கின் ஷியா முஸ்லிம்களைக் காப்பதும் ஆகும்.

அமெரிக்காவின் போர் இன்னும் முடியவில்லை. குர்திய இனமக்கள் மீது சதாம் ஹுசேன் ஆட்சியின் ஒடுக்குமுறை ஒயவில்லை. ஷியா முஸ்லிம்கள் மீதான அரச வன்முறையும் ஒயவில்லை. சதாம் ஹுஸேன் ஆட்சியே இன்னும் தொடர்கிறது. அமெரிக்க அதிகாரத்தின் நோக்கம் துஷ்டர்களை அழித்து நலிந்தோரைக் காப்பதல்ல என்ற உண்மை வரலாற்றில் மீண்டும் ஒருமுறை நிருபணமானது.

வரலாற்றிலிருந்து கற்க மறுபோருக்காக அமெரிக்கா மீண்டும் ஒரு பாடத்தை நடத்தியது. இம்முறை அது யூகோஸ்லாவியாவின் சோர்பிய மண்ணில் நடக்கிறத. இந்த நூற்றாண்டில் யூகோஸ்லாவியா ஒரு பெரிய நாடாக இனைந்த காலம் முதலாக அல்பானியப் பெரும்பான்மையைக் கொண்ட கொசோவோ மாகாணம் எப்போதுமே சேர்பியாவின் பகுதியாக இருந்து வந்தது. யூகோஸ்லாவியாவிலிருந்து குஹோவாசியா, மசிடோனியா, ஸ்லொவேனியா, பொஸ்னியா – ஹெர்ற்ஸ்கொவினா ஆகிய நான்கு மாநிலங்களும் பிரிந்த போது ஏற்பட்ட போர்களின் புண்கள் இன்னும் ஆறவில்லை. இப்பிரிவினைக்கு சேர்பிய பெருந்தேசிய வாதம் ஒரு முக்கிய துாண்டுகோல் என்பதையோ இதன் விளைவான போர்களில் சேர்பிய தேசியவாதிகளது கொடுமைகள் பெரியன என்பதையோ யாரும் மறுக்க முடியாது. குறிப்பாக பொஸ்னியாவில் நடந்த மனித உரிமை மீறல்களும் 'இனச் சுத்திகரிப்பும்' இன ஒழிப்புப் படு கொலைகளும் உலக வரலாற்றில் ஆழப் பதிந்த வடுக்களாகவே இருக்கும். யூகோஸ்லாவியாவின் பிளவின் பின்பு அது சேர்பியாவையும் மொண்டிநேக்ரொவையும் கொண்ட ஒரு சிறு நாடாகச் சுருங்கியிருந்தமைக்கு சேர்பிய பேரினவாதத்தின் பங்களிப்பே முக்கியமானது.

அதே வேளை, அமெரிக்க மேற்கு ஐரோப்பியக் குறுக்கீடுகள் இந்த நிலவரத்தை மோசமாக்குவதில் ஆற்றிய பங்கும் மறக்கக் கூடாதது.

சேர்பிய தேசியவாதம் யூகோஸ்லாவியாவின் பிரிவிற்குப் பின்பு மிகவும் பாதிக்கப்பட்ட மனநிலையில் உள்ளது. மேலும் பிரதேசங்களை இழக்க அது ஆயத்தமாக இல்லை. சகல சிறுபான்மை இன எழுச்சிகளையும் அது மிகுந்த சந்தேகத்துடனேயே நோக்குகிறது. எந்த ஒரு குறுகிய தேசியவாதத்திடமும் நாம் எதிர்பார்க்கக் கூடியவிதமாகவே சேர்பிய பேரினவாதம் நடந்து கொள்கிறது.

கொசோவோ மாகாணத்தில் சேர்பிய அடக்குமுறைக்கு எதிரான மக்களை கிளர்ச்சிக்குக் கிட்டத்தட்ட இருபது வருட வரலாறு உண்டு. யூகோஸ்லாவியத் தலைவர் டிற்றோவின் சாவின் பின்பு, சேர்பிய அடக்குமுறை அங்கு படிப்படியாக வலுத்தது. சுயாட்சிக்கான கோரிக்கை, சில ஆண்டுகள் முன்னம் பிரிவினைக்கான ஆயுதமேந்திய போராட்டமாக வளர்ந்தது. இதை ஊக்குவிக்கச் சில முக்கியமான வெளிச் காரணிகளும் பங்களித்தன. பொஸ்னியாவிலும் குநொவாசியா விலும் அமெரிக்க ராணுவ ஆதரவு சேர்பியாவிற்கு எதிரான தரப்பினருக்கே கிடைத்தது. அதை விட, கிழக்கு ஐரோப்பாவில் அமெரிக்காவின் செல்வாக்கின் அதிகரிப்புக் காரணமாகவும் அமெரிக்கா மீதான நம்பிக்கை கொசோவோ அல்பானியர்களிடையே சிறிது வளர்ந்திருந்தது.

இந்தப் பின்னணியில் நடந்த மோதல் உள்நாட்டுப் போராக வலுத்தது. கடந்து ஆண்டில் சேர்பிய ராணுவம் கொசோவோவில் மிக மோசமான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டது. இதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அமெரிக்கா சேர்பியாவில் நேற்றோ மூலம் ராணுவத்தை நிலைநிறுத்த விரும்பியது. இந்த நோக்கை மையமாகக் கொண்டே சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடந்தன. பேச்சு வார்த்தைகளின் சிக்கலுக்கு முக்கியமான காரணமாக யூகோஸ்லாவிய அரசு தரப்பில் இருந்த பிரச்சினை தனது மண்ணில் நேற்றோ படைகள் நிலை கொள்வதற்கு மறுப்பு எனலாம். கொசோவோ விடுதலைப்படை (கே.எல்.ஏ.) தரப்பில் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிடுவது பிரச்சனையாக இருந்தது. சேர்பிய தேசியவாதத்தின் உணர்வுகள் புண்பட்ட நிலையில் நேற்றோ படைகள் பற்றி யூகோஸ்லாவிய அரசு சம்மதியாது என்பதை அறிந்த கொசோவோ விடுதலைப்படை தந்திரமாக நேற்றோ நிபந்தனைக்கு உடன்பட்டது. அதனால் அமெரிக்கா அத வரை வெறும் மிரட்டலாக இருந்த விமானத்தாக்குதல்களை நடைமுறைப்படுத்தும் ஒரு நிலைமைக்குத் தள்ளப்பட்டது.

அமெரிக்காவின் காட்டுத்தனமான தாக்குதலில் விளைவுகள் அமெரிக்கா எதிர்பார்த்ததை விட வித்தியாசமாக அமைந்தன. அதிலும் முக்கியமாக கொசோவோ பிரிவினைவாதிகளான கே.எல்.ஏ. எண்ணியிராத விதமாக அல்பானியர்களைத் தம் நாட்டை விட்டே விரட்டும் காரியத்தில் சேர்பியப் படைகளும் இனவெறியர்களும் மும்மரமாகினர். குண்டுவீச்சின் பின்னர் இரண்டே கிழமைகளில் அயல் நாடுகளில் தஞ்சமடைந்தோர் தொகை இரண்டு லட்சமளவிலாகும். இதுவும் பல நாடுகளில் கடுமையான அமெரிக்க விரோத உணர்வை உருவாக்கியுள்ளது.

அமெரிக்காவின் இச்கொடிய செயல் ஐ.நா. அங்கீகாரத்தின் ஆதரவைப் பெறவில்லை. யூகோஸ்லாவியா தொடர்பாக ஏற்கனவே மேற்கு ஐரோப்பிய நாடுகளிடையே உள்ள பகைமை உணர்வைப் பயன்படுத்தியே நேற்றோவின் போரில் அமெரிக்கா தனது யுத்தத்தை நடத்துகிறது. சேர்பியாவைக் குண்டு வீசிப்பணியச் செய்வதோ ஸ்லொபொதான் மிலொஸொவிச்சை அதிகாரத்திலிருந்து விழுத்துவதோ இப்போதைக்கு நடக்கப் போவதில்லை. எனவே இதுவரை அமெரிக்காவின் போர் சாதித்தது என்ன?

சேர்பியாவில் பெரும் பொருட் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

கொசோவோவிலிருந்து பெருந் தொகையான அல்பானியரை அகதிகளாக்கி நாட்டை விட்டு விரட்டியுள்ளது.

ரஷ்யா அமெரிக்காவுடன் காணமுயன்ற ராணுவ இணக்கத்திற்கு ஒரு முட்டுக் கட்டையிட்டு சேர்பியாவில் ரஷ்யாவின் ராணுவக் குறுக்கீட்டை இயலுமாக்கியது.

ஒரு உள்நாட்டுப் பிரச்சினையை அதன் எல்லைகட்கு வெளியே ஒரு சர்வதேசப் பிரச்சினையாக்கித் தென்கிழக்கு ஐரோப்பாவில் ஒரு போர்ச் சூழலை உருவாக்கியது. மீண்டும் சதாம் ஹுசேன் விஷயத்துக்குப் போவோமானால் சில உண்மைகள் விளங்கும் ஈராக்கில் அமெரிக்காவால் சாதிக்க முடிந்தது என்ன? அப்பாவி மக்களைத் துன்பத்திற்கு ஆளாக்கி ஒரு சர்வாதிகாரியை மேலும் பலப்படுத்தி ஏகாதிபத்திய எதிர்ப்பின் ஒரு சின்னமாக அடையாளம் காணும் அளவுக்கு உயர்த்திவிட்டதை விட முக்கியமாக அங்கு என்ன நடந்தது? சேர்பியாவில் நடப்பதும் அதிகம் வித்தியாசமானதில்லை.

அமெரிக்க ஆக்கிரமிப்புப் போரால் சேர்பியப் பெருந்தேசிய வாதம் சேர்பியாவின் வட பகுதியில் உள்ள பிற சிறுபான்மைத் தேசிய இனங்கள் மீதான தாக்குதல்கட்கும் வழி ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஒரு முக்கியமான நிகழ்வு கவனத்துக்குரியது. நீண்ட் காலமாக கொசோவோவின் சுயாட்சிக்காகப் போராடி வந்த மிதவாதக் கட்சியின் தலைவர் இப்றஹிம் றுகோவா மிலோசோவிச்சுடன் இனைந்து நேற்றோ விமான தாக்குதல்கள் உடனடியான நிறுத்தப்படவேண்டும் என்று உறுதியான ஒரு கோரிக்கையை விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் நடத்தை பற்றி முன்னாள் அமெரிக்க ராஜதந்திரி ஹென்றி கிசிங்கருடைய கூற்றும் நம் கவனத்துக்குரியது. கொசோவோவைவிடப் பெரிய அளவில் மக்கள் அரசபடைகளின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ள துருக்கிய குர்திஸ்தான் ஆப்கானிஸ்தான், கிழக்கு ஆபிரிக்கா, காஷ்மிர், இலங்கை போன்ற நாடுகளில் குறுக்கிடாத அமெரிக்கா கொசோவோவில் குறுக்கிட்டதன் தர்க்க ரீதியான ஆட்சியை அவர் கேள்விக்கு உட்படுத்தியுள்ளார். இதை ஆராய்ந்தால் கிசிங்கர் தேடாத சில பதில்களும் நமக்குக் கிடைக்கும்.

அமெரிக்க குறுக்கீட்டால் ஒடுக்கப்பட்ட எந்தத் தேசிய இனமே சிறுபான்மையினரோ விடுதலை பெறமுடியும் என்று கனவு காணுகிற சில தேசியவாதிகளது மூடத்தனத்துக்கு கொசோவோ ஒரு பாடம். அது மிகவும் விலை கொண்ட பாடம். இன்று அதன் விலையை கொடுப்போர் அல்பானிய தேசிய இனத்தவர்கள். ஆயினும் ஊன்றிக் கவனித்தால் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது கொடுமை கட்கான விலையை வட்டியும் முதலுமாகக் கொடுக்கும் நாள் வேகமாக நெருங்கி வருகிறது என்ற உண்மையையும் நாம் காண முடியும்.

## ஒரு போராளிக்கு சிகப்பு பிரியாவிடை

சுலைமான் குர்திய இனத்தவர். தடை செய்யப்பட்ட துருக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர். சென்ற டிசம்பர் மாதம் பொலிசாரால் வதைக்கப் பட்டார். அது பற்றிய குற்றச்சாட்டுக் களை முன்வைத்து விசாரணை கேட்டிருந்தார். இந்த மார்ச் மாதம் அவர் மீண்டும் பொலிசாரால் பிடித்துக் செல்லப்பட்டு குருரமாக வதைக்கப்பட்டு இறந்தார். அவர் இறந்த காரணம் மாரடைப்பு என்று பொலிசார் கூறினார்கள். ஆயினும் மருத்துவர்கள் அதை உறுதிப் படுத்தவில்லை.

சுலைமானின் தாயார். மகனுடைய சடலத்தைக் காண அனுமதிக்கப்பட வில்லை. அவரது மனைவி கடுமை யாகப் போராடியே சுலைமானின் உடலைப் பொறுப் பேற்றார். சுலைமானின் இறுதிச் சடங்குகள் அமைதியாக நடத்தப்பட வேண்டும் என்பது பொலிசாரின் ஆணை. பொலிஸ் கண்காணிப்பின் ந்டுவிலேயே சுலைமான் அடக்கம் செய்யப்பட்டார்.

நாத்திகரான சுலைமானின் அடக்கத் திற்கு வந்த ஒரு மதகுருவைப் போய்விடும் படி சுலைமானின் மனைவி கேட்டுக் கொண்டார். தடை செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சிக் கொடியால் முடியவாறே சுலைமானின் உடல் புதைக்கப்பட்டது. பொலிசாரின் பிரசன்னத்தை மீறி கம்யூனிஸ்ட்டுகள் விடுதலை முழக்கங்களால் சுலைமானுக்கு அஞ்சலி செலுத்தினர்.


மனித உரிமையின் காவலனாக பாசாங்கு செய்யும் அமெரிக்காவினதும், இஸ்ரேலிய கொலைபாதக ஆட்சியினதும் நண்பனாக துருக்கி ஆட்சி இருப்பதில் புதினம் என்ன? இந்த அடக்குமுறைக்குளிரில் உறைந்த துருக்கிய மண்ணில் விடுதலையின் விதைகள் தொடர்ந்தும் முளைக்கின்றன. சுலைமானைப் புதைத்த இடத்தில் இன்னும் பல உன்னதமான போராளிகள் முளைப்பார்கள்.

# குர்திய மக்களது போராட்டத்தை எவராலும் ஒடுக்க முடியாது.

அப்துல்லா ஒச்சலான் பெப்ரவரி மாதம் பிற்பகுதியில் துருக்கிய அரசின் பாதுகாப்புப்படையினரால் கைப்பற்றப்பட்ட செய்தி 'பயங்கரவாதத்திற்கு' எதிரான ஒரு பெரிய வெற்றியாக துருக்கியின் அடக்குமுறை ஆட்சியால் கூறப்பட்டது. மேல்நாட்டுத் தகவல் ஊடகங்களில் துருக்கிய ஆட்சி பற்றிய சில விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் ஒச்சலான் கைதானது பற்றி உள்ளூற மகிழ்வு இருந்ததை அவற்றால் மறைக்க முடியவில்லை.

முதலாம் உலகப் போரின் பின்பு, துருக்கியின் வசம் இருந்த மத்திய கிழக்குப் பகுதி பிரித்தானிய ஆதிக்க வாதிகளால் தங்களுக்கு வசதியான விதமாகச் கூறு போடப்பட்டது. தங்கள் அடிவருடிகளான சில வசதி படைத்த அரபுத் குடும்பங்களிடம் முழு அராபியப் பகுதியும் பங்கிடப்பட்டது. பிரித்தானியர் தயவிலே சுண்டங்காய் அளவு ஷேக் இராச்சியங்கள் பல உருவாயின. இது ஒரு புறமிருக்க துருக்கிய எல்லையில் வாழ்ந்து வந்த துருக்கிய தேசிய இனத்தின் பெரிய பாரம்பரியப் பிரதேசம் பிரித்தானியக் குறுக்கீட்டால் துருக்கி, ஈராக், ஈரான் ஆகிய நாடுகளிடையே பிரிக்கப்பட்டுப் போனது. இந்தை விட பழைய சோவியத் பிரதேசத்திலும் ஸிரியாவிலும் குறிப்பிடத்தக்க அளவில் குர்திய இன மக்கள் வாழ்ந்து வந்தனர். பிரித்தானிய ஏகாதிபத்தியத்தைப் பொறுத்தவரை அங்கு ஒரு வலிய அரபு வல்லரசோ துருக்கிய வல்லரசோ ஏழாது என்ற தேவை நிறைவு செய்யப்பட்டது. குர்திய இனமக்களது நலன்களைப் பற்றி அவர்கட்கோ துருக்கிய மேலாதிக்கத்திற்கோ அரபு முடியாட்சிகட்கோ என்றுமே இருந்ததில்லை.

ஈரானும் ஈராக்கும் துருக்கியும் குர்திய தேசிய இனத்தினரைப் பல வேறு வகைகளில் ஒடுக்கினர். இதன் விளைவாக எதிர்ப்பு இயக்கங்கள் உருவாகி வலுப்பெற்றன. ஒவ்வொரு நாட்டிலும் இருந்த இயக்கங்களினும் பிளவுகளும் முரண்பாடுகளும் இருந்தன. இவற்றை ஒடுக்குமுறை



யாளர்கள் பயன்படுத்தினர். குறிப்பாக ஈராக்கில் சதாம் ஹுஸேன் இந்த முரண்பாட்டை நன்கு பயன்படுத்தியுள்ளார். அதே வேளை முன்று ஒடுக்குமுறையாளர் களிடையிலும் இருந்த முரண்பாடுகளை குர்திய விடுதலை இயக்கங்களும் பயன்படுத்தின. இவற்றிடையே துருக்கியில் இருந்த குர்திய மக்களிடையே ஒரு வலிய மாக்ஸிய லெனினியச் பார்வையைக் கொண்ட விடுதலை இயக்கம் உருவானது.

தமது மொழியைப் பேசுவதைக் கூடச் சட்ட விரோதமாக்கிய துருக்கிய ஆட்சியாளர்கட் கெதிரான விடுதலை உணர்வை ஒரு முழுமையான சமுதாய விடுதலை உணர்வாக வளர்த்தெடுத்த குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி (பி.கே.கே.) 1970 உருவானது. ஒரு மகத்தான மக்கள் சக்தியாக அது வளர்ந்தது. அதன் காரணமாகவே அது ஏகாதிபத்தியவாதிகளாலும் மிகவும் வெறுக்கப்பட்டது. துருக்கிய ராணுவ ஒடுக்குமுறை ஆட்சி பி.கே.கே. மீது கட்டவிழ்த்து விட்ட வன்முறைக் பதிலடியாகவே பி.கே.கே. 1980 முதல்

தொடர்ச்சி 11ம் பக்கம்

நன்றி - நூலகத்திட்டம்



## இலங்கையில் நேட்........

1ம் பக்க தொடர்ச்சி...

வார்சோ அமைப்பின் கலைப்பிற்கும் பிறகு யூகோஸ்லாவியாவில் ஏற்பட்ட அழுத்தங்களினாலும் உள்நாட்டுப் பிரச்சினைகளினாலும் அந்நிய தலையீட்டாலும் யூகோஸ்லாவியா சமஷ்டியிலிருந்து முஸ்லிம்களை கொண்ட பொஸ்னியா மாநிலம் பிரிந்தது. பின்னர் றோமன் கத்தோலிக்கர்களை கொண்ட குறோசியாவும் பிரிந்தது. தற்போது அல்போனியா வழியான முஸ்லிம்களை கொண்ட கொசோவோ மாநிலத்தை பிரிப்பதற்கான நடவடிக்கைகளில் ஒன்றாகவே அமெரிக்கா தலைமையிலான நேட்டோவின் யுத்தம் நடைபெறுகிறது. யூகோஸ்லாவியவில் பெரும்பான்மையாக இருக்கும் சேர்பியர்கள் கிரேக்க பாரம்பரியமுடைய கிறீஸ்தவர்களாவர்.

யூகோஸ்லாவியா மீது குண்டு பொழிந்து போர்புரிய நேட்டோவிற்கு எந்த தார்மீக பொறுப்பும் இருக்க முடியாது. அதேவேளை கொசோவோ மக்களின் சுயநிர்ணய உரிமை உறுதிசெய்யப்படுவதை மிலோவிச் தடுக்கவும் முடியாது.

அதேபோன்று இலங்கையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிசெய்வதற்கு யாரும் தடையாக இருக்க முடியாது. அதற்காக இலங்கை மீது போர் புரிய நேட்டோவுக்கோ, அமெரிக்காவுக்கோ, வேறெந்த நாட்டிற்கோ எந்த உரிமையும் கிடையாது.

ஜனநாயகத்திலும், சிறுபான்மை தேசிய இனங்களின் மீதும் இருக்கும் "அன்பினாலே"யே யூகோஸ்லாவியா மீது குண்டுகளை போடுவதாக அமெரிக்கா நியாயம் கற்பிக்க முனைகிறது. ஆனால் அமெரிக்க ஏகாதிபத்திய நலனிலிருந்தே மேற்படி 'அன்பிற்குரிய' தேர்வுகள் அமையும் என்பதே உண்மை. துருக்கி அரசினால் அப்பிராந்தியத்தில் அமெரிக்க ஏகாதிபத்திய நலன் பாதுகாக்கப்படும் என்பதால் குர்திஷ் மக்களின் தலைவர் அப்துல்லா ஒகாலனை கைது செய்ய அமெரிக்கா முன்நின்று செயற்பட்டது. கொசோவோவில் கொசோவோ மக்களின் சார்பாக தலைமிடுவதாக 'நியாயம்' கற்பிக்கிறது.

அந்தவகையில் இலங்கையின் இனப்பிரச்சினையில் அமெரிக்கா தலையிட்டு விட்டது என்பதை அறியத் தவறுவது மடமை. தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தம் புரிய இலங்கை அரசிற்கு ஆலோசனைகளை மட்டுமின்றி, ஆயுதங்களையும், பயிற்சிகளையும் வழங்கிவருவது தெரிந்ததே. இலங்கையின் இனப்பிரச்சினையில் இலங்கை அரசின் பக்கம் இருப்பதே இப்போதைக்கு அமெரிக்க நலனுக்கு உகந்ததாக அமெரிக்கா தீர்மானித்துள்ளது. தமிழீழ வடுதலை புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமென்று பட்டியலிட்டு அமெரிக்கா தடைவிதித்துள்ளமை தெரிந்ததே. இலங்கையில் அப்பட்டமான அத்துமீறல் செய்யப்படவேண்டுமென்று தீர்மானித்தால் எந்தப் பக்கம் எடுக்க வேண்டும் என்பதும், எப்போது எவ்வாறு செய்யவேண்டும் என்பதும் அமெரிக்க ஏகாதிபத்திய நலனை அடிப்படையாகக் கொண்ட முடிவாக இருக்கும். உண்மையில் இலங்கை அரசிற்கு சார்பானதாகவோ, தமிழ் மக்களுக்கு சார்பானதாகவோ இருக்க முடியாது என்பதை விளங்கிக் கொள்வதற்கு இன்னும் பல புதிய அனுபவங்கள் தேவைப்படாது.

## புதிய ஜனநாயக கட்சியின் வடபிரதேசக் குழுவின் மேதின அறிக்கை

உலகெங்கும் உழைக்கும் மக்கள் தம்மீது திணிக்கப்படும் ஒடுக்குமுறைகளுக்கும் துயர்களுக்கும் எதிராக ஒன்றுபட்டுக் கிளர்ந்து எழும் தினம் மேதினம், பொருளாதார ஏற்றத்தாழ்வையும், சுரண்டலையும் அடிப்படையாகக் கொண்ட அனைத்து தேசிய சர்வதேசிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் இந்நாளில், பேரினவாத யுத்தம் தொடர்ந்து நீளும் எமது நாட்டின் தொழிலாள வர்க்கமும் உழைக்கும் மக்களும் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் குரலையும் தமது குரலாக உயர்த்திக் கொள்கின்றனர்.

முடிவற்றுத் தொடரும் யுத்தச் சூழலால் வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தொடர்ச்சியான இன்னல்களுக்கும், இழப்புக்களுக்கும் உட்பட்டு வருகின்றனர். சந்தை வாய்ப்பற்ற விவசாயிகள், தொழில் செய்யும் சுதந்திரம் மட்டுப்படுத்தப்படும் கடற்தொழிலாளர்கள், வேலை வாய்ப்பின்மையால் நிவாரணத்தையே நம்பி வாழும் மக்கள், படித்தும் வேலையற்று அலையும் பட்டதாரிகள் விலைவாசி ஏற்றம் இவைகளால் மக்கள் அல்லலுறுகின்றனர். இத்தனைக்கும் மேலாக வன்னிப் பகுதியில் வாழும் மக்கள் உணவு, உடை, மருத்துவ, இருப்பிட வசதிகள் அற்றவர்களாக ஆக்கப்படும் அவலநிலை மேலும் தொடர்கிறது.

சமாதானத்துக்கான உரத்த குரலுடன் பதவிக்கு வந்த இந்த அரசு நான்கு ஆண்டுகளுக்கும் மேலான தனது ஆட்சிக் காலத்தில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக மேலும் கூர்மைப்படுத்தி வருகிறது. தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை அங்கீகரிக்க வேண்டிய அரசு – வடக்கிலும் கிழக்கிலும் குடியேற்றங்களை அமைக்க முயல்கிறது. வலி வடக்கில் வாழ்ந்த மக்கள் மீள் குடியமர்வுக்குப் பின்னும் அகதிகளாகவே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். புதைகுழிகளைக் காட்டி பதவிக்கு வந்த அரசு புதைகுழிகளையே இன்னும் தோண்டிக் கொண்டிருக்கிறது. யுத்தம் தொடரும் வரை இதுபோன்ற நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படப்போவதில்லை.

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தல்கள் யுத்தத்துக்கெதிரான மக்களின் தீர்ப்பையே வெளிப்படுத்தியுள்ளன. எனவே உலகத் தொழிலாளர் தினமான இம் மேதினத்தில் யுத்தத்திற்கு எதிரான மக்களின் தீர்ப்பிற்கு மதிப்பளித்து யுத்தத்தை நிறுத்தி பேச்சு வார்த்தையின் மூலம் இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வை முன்னெடுக்க வேண்டும் என எமது கட்சி வடபிரதேசக் குழு வேண்டுகோள் விடுகிறது.

## குர்திய மக்க....

10ம் பக்க தோடர்ச்சி........

கெரில்லாத் தாக்குதல்களிலும் பிற வன்முறைப் போராட்டங்களிலும் ஈடுபட்டது. பி.கே.கே. வன்முறையைப் பயங்கரவாதம் என்று வர்ணித்து வரும் மேலை நாட்டுச் செய்தி நிறுவனங்கள் துருக்கிய அரச வன்முறையைப் பற்றி அடக்கியே வாசித்து வந்துள்ளன.

அண்மைய காலத்தில் ஈராக் மீதான தனது தாக்குதல்கட்கு துருக்கியின் பிரதேசமும் ஆதரவும் தேவை என்பதால் துருக்கிய ஆட்சியின் பயங்கரமான ஒடுக்குமுறையைப் பற்றிக் கண்டும் காணாமலே இருந்து வரும் அமெரிக்க ஏகாதிபத்தியம் நேரடியாகவே துருக்கிக்கு உதவ முன்வந்தது.

1980க்குப் பின்பு துருக்கியிலிருந்து வெளியேறி ஸிரியாவைத் தளமாகக் கொண்டு செயற்பட்ட பி.கே.கே. ஸ்தாபகர்களுள் ஒருவரும் முக்கியமான ஒரு போராட்டத் தலைவருமான ஒச்சலான் சென்ற ஆண்டு ஸிரியாவிலிருந்து வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார். ஒச்சலானுக்கு ஸிரியா நிழல் கொடுத்தால் தாக்குவதாக துருக்கி மிரட்டியதே இதன் காரணம். ரஷ்யாவுக்குத் தப்பிச் சென்ற ஒச்சலானுக்கு ரஷ்யா புகலிடம் தர மறுத்தது. இதற்குக் காரணம் ரஷ்யாவின் ஆயுதங்கள் துருக்கிக்குப் பெருமளவில் விற்பனையாகி வருவதே என்று கூறப்படுகிறது. பின்பு இத்தாலிக்குச் சென்ற ஒச்சலான் கைது செய்யப்பட்டார். அவரைத் துருக்கிக்கு அனுப்புமாறு துருக்கி கோரியதை இத்தாலிய நீதி மன்றம் ஏற்க மறுத்தது. ஆயினும் துருக்கியின் மிரட்டலால் இத்தாலி அவருக்கு புகலிடம் அளிக் இயலாது என்று விட்டது. இதற்கு அமெரிக்காவின் வற்புறுத்தலின் பங்கும் பெரிது. மீண்டும் ரஷ்யா செல்ல முயன்ற ஒச்சலான் வழியில் கிரேக்கநாட்டில் இறங்கிப் புகலிடம் கேட்டார். துருக்கியின் பகை நாடான கிரேக்கம் அமெரிக்க வற்புறுத்தலாலும் துருக்கி தனக்கு மேலும் தொல்லை தராது தவிர்க்கவும் ஒச்சலானை ஏற்க மறுத்தது. ரஷ்யாவில் இறங்கிப் பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் தஞ்சம் கோரித் தோல்வி கண்ட ஒச்சலான் இறுதியில் கிரேக்கம் வழியாக கென்யா சென்று அங்கு கிரேக்கத் தூதரகத்தில் தஞ்சமடைந்த சூழ்நிலை பற்றிய தெளிவீனங்கள் இன்னமும் உள்ளன. இது ஒச்சலானைப் பிடிப்பதற்கான பொறி ஒன்று என்பது மட்டும் உண்மை. கென்ய அரசு கூட அறியாமல் கிரேக்கத் தூதரகத்துக்குள் புகுந்து ஒச்சலானைக் கைது செய்வதில் அமெரிக்க சி.ஐ.ஏயும் இஸ்ரெலிய மொஸாட்டும் வகித்த பங்கு இன்று வெளியாகிவிட்டது. ஆயினும் இச்சதியில் கிரேக்க அதிகாரிகள் எவருக்கும் பங்கு உண்டா என்பதும் கென்ய அதிகாரிகளது பங்கும் என்ன என்பதும் நாளடைவில் வெளிவரலாம்.

இன்றுள்ள பிரச்சினையாக ஒச்சலானுக்கு துருக்கிய நீதிமன்றம் எதிலும் நியாயமான முறையில் நீதி வழங்கப்படுமா என்பது மட்டுமே மேற்கிலே அதிகம் பேசப்படுகிறது. அது கிட்டாது என்பது பெரும்பாலான அரசியல் அவதானிகளது எண்ணம். செய்தியாளர்கள் பலரும் இந்த விடயம் பற்றியே அதிகம் பேசுகின்றனர். ஒச்சலான் கைது பி.கே.கே.க்கு ஒரு பெரிய அடி அதிலிருந்து பி.கே.கே. மீளாது என்பதும் சிலரது எதிர்பார்ப்பு, இந்த ஆருடம் விரைவிலேயே பொய்ப்பிக்கப்படுவது உறுதி.

ஒச்சலான் இத்தாலியில் கைதான போது அங்கிருந்த குர்திய அகதிகள் கடுமையான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். கென்யாவில் ஒச்சலான் கிரேக்கத் தூதரகத்திலிருந்து கைப்பற்றப்பட்ட பின்பு பல நாடுகளிலும் கிரேக்கத் துாதரகங்கள் முன்னால் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்தன. சில இடங்களில் தூதரகங்கள் ஆர்ப்பாட்டக்காரர்களால் கைப்பற்றப் பட்டன. இந்த எதிர்ப்பின் விளையாக கிரேக்க அமைச்சர்கள் இருவர் பதவி விலகினர். உலகத்தின் கவனம் மீண்டும் குர்திஷ் பிரச்சினை மீது திரும்பியது.

இவை போக. துருக்கிய அடக்குமுறை ஆட்சியின் வேஷம் கலையப்படுகிறது. ஒச்சலானுக்குத் தண்டனை விதித்தாலும் விதிக்காவிட்டாலும் துருக்கிய ஆட்சியாளர்கள் உள்நெருக்குவாரங்கட்குள்ளாகாமல் தப்ப முடியாது. இதை விட முக்கியமாக, ஒச்சலான் அமெரிக்க இஸ்ரெலிய சதியாளர்களது உதவியுடன் கைப்பற்றப்பட்டமை உலகெங்கிலும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் மத்திய கிழக்கில் அதன் பிரதான ஏவற் பிசாசான இஸ்ரேலினதும் நிசவடிவை மறுபடியும் நிளைவூட்டியுள்ளது.

அனைத்தினும் மேலாக இங்கு நாம் நினைவிலிருத்தத் தக்கது ஏதெனின் ஒரு போராளி எவ்வளவு முக்கியமானவராயிருந்தாலும் ஒரு போராட்டத்தின் வெற்றி தோல்வியை நிர்ணயிப்போர் மக்களே என்பது தான். ஒச்சலான் வஞ்சனையால் எதிரியின் வலையில் விழுந்தாலும் அவரது போராட்டப் பாதையில் பயணம் செய்வது வெறுமனே தேசிய இன விடுதலைக்கானது மட்டுமல்ல, சமூக நீதிக்கும் மனித சமத்துவத்துக்குமானது.

ஒச்சலானைப் பிடித்தால் குர்தியப் பிரச்சினையும் போராட்டமும் முடிந்துவிட்டன என்று எண்ணுவது சீப்பை ஒளித்து வைத்தால் கலியாணம் நின்றுவிடும் என்பது மாதிரித்தான், ஒச்சலானுக்கு விரித்த வலையில் இன்று இஸ்ரேல் – அமெரிக்கக் கூட்டுச் சதிகாரர்களது கால்களும் வசமாக மாட்டிவிட்டன. மத்திய கிழக்கில் ஏற்கனவே சிக்கலில் மாட்டிள்ள அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பாடு மேலும் திண்டாட்டமாகப் போவதை அடுத்த சில ஆண்டுகளில் நாம் காண்போம்.

## மகத்தான கம்யூனிஸ்ட...

6ம் பக்க தொடர்ச்சி......

வழிகாட்டல் அனுபவங்களைப் புதிய தலைமுறையினர் புதிய உலகச் சூழலில் கற்றும் நடைமுறைப் படுத்தியும் வருகின்றனர்.

கம்யூனிஸ்ட் அறிக்கையின் முதன் மூன்று ஐம்பது ஆண்டுகால நடைமுறைப் பிரயோகத்தின் செழுமையான அனுபவங்களின் அடிப்படையில் தம்மை மீளமைத்து வரும் மார்க்சிச லெனினிச சக்திகள் அதன் நான்காவது ஐம்பது ஆண்டு காலப் பகுதியில் பிரவேசிக்கும் இன்றைய சூழலில் மிகுந்த நம்பிக்கையோடும் புரட்சிகர வைராக்கியத்தோடும் உலகம் பூராவும் தொழிலாளி வர்க்க இயக்கத்தை முன்னெடுக்க சபதம் பூண்டு நிற்கின்றன. ஏகாதிபத்தியமும் நவகாலனித்துவமும் முதலாளித்துவ நிலவுடமை சக்திகளும் விரைவில் பூகம்பம் என வெடித்துக் கிளம்பப் போகும் தொழிலாளி வர்க்கப் பேரெழுச்சிகளையும் புரட்சிகளையும் சந்திக்கத்தான் போகின்றன. அடுத்த நூற்றாண்டு அதற்குரிய நூற்றாண்டாகவே திகழப் போகின்றது. ஏகாதிபத்தியம் இன்று எக்காளமிட்டு நிற்பதனைப் பார்த்து சிலர் பேதலித்துப் போகலாம். அதனை வெல்ல முடியாது வீழ்த்த முடியாது என அதற்கு சரணடைந்து போகலாம். ஆனால் மாக்சிசம் லெனினிசம் மாஓ சேதுங் சிந்தனையால் ஆயுதபாணியாக்கப் பட்ட எந்தவொரு புரட்சிவாதியும் நேர்மையான கம்யூனிஸ்டும் மனம் சோர்வது என்ற பேச்சுக்கே இடம் வைக்கமாட்டார்கள். அவர்கள் மாபொரும் கம்யூனிஸ்ட் அறிக்கையின் புரட்சிகரப் போர்ப் பிரகடனத்தை உயர்த்திப் பிடித்து முன்னேறவே செய்வார்கள்.

நாமும் நமது நாட்டின் வரலாறு நமக்கு வழக்கு இருக்கும் புரட்சிகர வரலாற்றுக் கடமையினை கடுமையான சோதனைகள் வேதனைகள் ஊடாக முன்னெடுத்து சகல கஷ்டங்களையும் தாண்டி தொழிலாளி வர்க்க இயக்கத்தை சொல்லால் மட்டுமன்றி செயலால் கட்டியெழுப்பி நிற்போம். கம்யூனிஸ் அறிக்கையின் 150 வருட நினைவைப் பயன்உள்ள வகையில் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்வோம்.

## இனம் வர்........

7ம் பக்க தொடர்ச்சி

முன்னணி • ஆட்சிக் காலத்தில் கொண்டிருந்தமையாகும். ஆனால் இன்று அதே கட்சிகள் பொதுசன ஐக்கிய முன்னணி என்னும் பெயரில் ஆட்சி அமைத்த போது தமிழர் கூட்டணி சிறிது தயக்கம் காட்டியது. ஆனால் நாங்கள் பழைய ஆட்சிகள் இல்லை. யூ.என்.பி.யின் வேலைத்திட்டத்தை அவர்களது பெருமுதலாளித்துவ நிலைப்பாட்டில் தான் முன்னெடுத்துச் செல்கிறோம் என்பதை உறுதிப்படுத்தியதும் தமிழர் கூட்டணி இன்றைய ஆட்சியை கட்டியணைத்து ஆரத்தழுவி ஆதரவு கொடுத்து நிற்கிறது. இந்த நான்கரை ஆண்டுகளில் தமிழர் கூட்டணி தமிழர் நலன்களுக்காக அல்லது இன உணர்வின் அடிப்படையில் ஒரு சிறு கல்லைத் தானும் ஏன் வீச முடியாது போய் விட்டது. அடிப்படைக் காரணம் இன உணர்வு இன நலன்கள் என்பதெல்லாம் வெறும் வாய் உபசாரங்களேயாகும்.

இவர்களை எல்லாம் தமிழர் துரோகி என வர்ணத்து அசல் தமிழன் எனக் கூறி அறிக்கை விட்டு அமளிப்படுத்தும் குமார் பொன்னம்பலமும் அவரது தமிழ்க் காங்கிரசும் சொத்து – சுகம் – பணம் விதிக்கும் எல்லைக் கோடுகளை இன நலன்களுக்காகத் தாண்டும் தைரியம் உடையவர்களா?

எனவே எவ்வளவிற்கு கட்சிகள் தமக்கு இன மத முத்திரைகளைப் பதிக்க முறப்பட்டாலும் அது மக்களை ஏமாற்றி தமது அடிப்படையான வர்க்க ரீதியான இருப்பை விருத்தி செய்து கொள்வதற்கேயாகும். முழுமையான இன விடுதலைக்கு போராடும் ஒரு கட்சி உயர்வர்க்க நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியாக இருக்க முடியாது. ஒரு பாட்டாளி வர்க்க கட்சியினால் தான் இன ஒடுக்கு முறை உட்பட அனைத்து ஒடுக்குமுறைகளையும் எதிர்த்துப் போராடக் கூடியதாக இருக்கும் என்பதே உண்மையானதாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது
PUTHIYA POOMI புதிய பூமி
சுற்று 06 ஏப்ரல்/மே 1999 பக்கம் 12 விலை ரூபா 10/= சுழற்சி 28

## நன்றி கூறுகின்றோம்!

நடந்து முடிந்த ஐந்த மாகாணசபைத் தேர்தல்களில் புதிய இட்துசாரி முன்னணிக்கு கணிசமான வாக்குகள் கிடைத்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். அத்துடன் மேல் மாகாணசபையில் ஒரு அங்கத்துவமும் கிடைத்துள்ளது. யுத்தத்திற்கு எதிராகவும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வற்புறுத்தியும் தனியார் மயத்தை எதிர்த்துமே புதிய இடதுசாரி முன்னணி மேற்படி தேர்தலில் போட்டியிட்டது. புதிய இடதுசாரி முன்னணியில் அங்கம் பெறும் புதிய ஜனநாயக கட்சி தனது ஆழ்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறது.

# வடக்கு கிழக்கில் தேர்தலா? நிர்வாகமா?

தென் மாகாணசபைத் தேர்தல் முடியுற்றதும் எஞ்சியிருக்கும் தேர்தலுக்கான மாகாணம் வடக்கு-கிழக்கு இணைந்த மாகாணமேயாகும். அதற்கு தேர்தல் நடத்துவதா அல்லது இடைக்கால நிர்வாக சபையைத் தெரிவு செய்து தமிழ்க் கட்சிகளின் கைகளில் கொடுப்பதா என்பதே அரசாங்கத்திற்கு முன்னால் உள்ள கேள்வியாகும். மேற்படி விடயம் சம்மந்தமாக ஏற்கனவே ஈ.பி.டி.பியினர் இடைக்கால நிர்வாகத்தை இடையிடையே வற்புறுத்தி வந்துள்ளனர். அதேபோன்று ஈ.பி.ஆர்.எல்.எவ். தேர்தலை நடத்துமாறு கேட்டு வருகிறார்கள். தமிழர் கூட்டணி இரண்டும் கெட்டான் நிலையில் இருந்து வருகிறது. ஏனைய தமிழ்க் கட்சிகளும் ஒரு முகமான முடிவுக்கு வர முடியாது உள்ளனர்.

வடக்கு கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்த முடியுமாயின் ஏன் மாகாணசபைத் தேர்தல் நடாத்த முடியாது என்பது ஒரு வாதம். மாகாணசபை முறைமை கொண்டு வரப்படக் காரணமாக இருந்த வடக்கு கிழக்கில் இன்று வெறும் நிர்வாகிகளாலேயே நிர்வகிக்கப் படுகிறது மட்டுமின்றி அந்நிர்வாகிகள் ஊழல் மோசடி அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றில் ஈடுபட்டுவருகிறார்கள் என்பதும் மற்றொரு வாதமும் குற்றச் சாட்டுமாகும். எவ்வாறாயினும் வடக்கு கிழக்கு மாகாணசபையின் நிர்வாகத்தை தாங்கள் தாங்கள் மட்டுமே கைப்பற்றிக் கொண்டு தமிழின் பெயரால் ஆட்சி நடாத்துவதே உள்ளார்ந்த விருப்பமாகும்.

அந்த வகையில் தான் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் இந்திய அரசாங்கத்தின் அனுசரனையுடன் அரசியல் அஞ்ஞாதவாசம் இருந்து விட்டு தற்போது வரதராஜப்பெருமாள் கொழும்பு திரும்பி இருக்கிறார். அவரது செயற்பாடும் பல்வேறு ஊகங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தயாவில் அதி உயர்பாதுகாப்புடன் இருந்து வந்த வரதராஜப்பெருமாள் திடீரென அதிமுக்கிய பிரமுகர் கடவுச் சீட்டின் மூலம் இலங்கைக்குள் வந்துள்ளமை அரசாங்க உயர் மட்டத்தினது பச்சை விளக்கே காரணமாகும். அத்துடன் இந்திய அரசின் பின்னணியும் அவரது வருகையில் மண்டிக் கிடக்கிறது. இவற்றை எல்லாம் அவதானிக்கும் போது தமிழர் பிரச்சினையில் மீண்டும் ஒரு சூதாட்டம் திரைமறைவில் இடம் பெற ஆரம்பித்திருக்கிறது என்பது தெளிவாகிறது.

கொழும்பை மையமாக வைத்து அதி உயர்பாதுகாப்புடன் இயங்கி வரும் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் பெயருக்குதான் தமிழ்க் கட்சிகளே அன்றி செயலில் தத்தம் நலன்களை பாதுகாத்து விருத்தி செய்யும் கட்சிகளாகவே காணப்படுகின்றன. யாவும் அரசாங்கத்தின் முன் மண்டியிட்டு நின்று சேவை புரிகின்றன. யுத்தத்தை நிறுத்தி பேச்சவார்த்தையை நடாத்தி நியாயமான அரசியல் தீர்வைக் காணுதல் வேண்டும். என்ற ஒரே அம்சத்தில் ஒன்றுபட்டு நிற்க வேண்டிய இன்றைய தருணத்தில் தமிழ்க் கட்சிகள் ஒன்றை ஒன்று பழி கூறி நிற்கின்றன. போதாக்குறைக்கு முழு உலகமுமே சிரிக்கும் அளவுக்கு தங்களுக்குள் மோதுண்டு இரத்தத்தில் மிதக்கின்றனர். இவர்கள் அரசியல் செய்கிறார்களா அல்லது பாதாள உலக கோஷ்டிகள் போல் நடந்து கொள்கிறார்களா? என்றே மக்கள் கேட்கிறார்கள். இவர்கள் தமிழ் மக்களின் விடுதலைக்கும் விமோசனத்திற்கும் வழி காட்டுவார்கள் என்று எந்தத் தமிழ் மகனாவது நம்ப முடியுமா? என்ற கேள்வியே எங்கும் எழுந்துள்ளது. அண்மையில் ஒரு தமிழ் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்திற்கு கை உயர்த்தும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் துரோகிகள் எனப் பிரகடனம் செய்தார். அந்த ஒரே செயலால் மட்டும் தமிழ்த் துரோகிகளை வரையறுக்க முடியாது. இன்று தமிழ்க் கட்சிகள் யாவுமே ஒவ்வொரு நிலையிலும் தமிழர் அபிலாஷைகளுக்கு எதிராகத் துரோகம் இழைத்து வருவதுதான் இன்றைய யாதார்த்தமாக உள்ளது. அரசியல் ரீதியாகவும் ராணுவ ரீதியாகவும் சகல தமிழ்க் கட்சிகள் என்பன அரசாங்கம் கீறிய கோட்டைத் தாண்டமுடியாத கையறு நிலையில்தான் காணப்படுகின்றன. அத்துடன் சில கட்சிகள் இந்திய ஆளும் வர்க்க நலன்களுக்கான ஆலோசனையின் பேரில் செயல்படவும் செய்கின்றன.

இத்தகைய சூழலைப் பயன்படுத்திக் கொண்டு அரசாங்கம் பேரினவாத யுத்தத்தில் வெற்றி பெற்று விடலாம் என நம்புகிறது. அதேவேளை வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு தேர்தலை நடத்துவதா? அல்லது இதே தமிழ்க் கட்சிகளை வைத்து இடைக்கால நிர்வாகசபை ஒன்றை ஏற்படுத்துவதா? என அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. இந்நிலையில் முன்னாள் முதல் அமைச்சர் வரதராஜப்பெருமாளை ஜனாதிபதி சந்தித்து பேசி உள்ளார். அவருக்கு பாதுகாப்பும் வழங்க சம்மதித்துள்ளார். இது அரசியல் வட்டாரங்களில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. அதேவேளை வரதராஜப்பெருமாள் வடக்கு கிழக்கின் சில பிரதேசங்களுக்குச் சென்று தமது பழைய தொடர்புகளை மீளமைத்து ஒதுங்கியிருந்த பலருக்கு உசார் வழங்கி வருவதாகவும் அறிய முடிகிறது.

அரசாங்கம் வடக்கு கிழக்கில் தேர்தல் நடாத்துவதன் மூலம் தமிழ்க் கட்சிகளுக்கூடாக ஒரு வாக்கு வங்கியைத் திறந்து அதில் தமிழர் வாக்குகளை வைப்பில் இட்டு வைத்தால் ஜனாதிபதித் தேர்தலுக்கு அதனை உபயோகப்படுத்தலாம் என்பது ஒரு நம்பிக்கை. காரணம் நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தல்களை அவதானித்தால் ஜனாதிபதித் தேர்தலில் ஐம்பது வீதத்திற்கு குறைவான வாக்குகளைப் பெறக் கூடிய சந்தர்ப்பமே தோன்றியுள்ளது. எனவே ஐம்பது வீதத்திற்கு மேலான வாக்குகளை ஜனாதிபதித் தேர்தலில் பெற வேண்டுமாயின் நிச்சயம் வடக்கு கிழக்கு மக்களின் கணிசமான வாக்குகளைப் பெற்றே யாக வேண்டும். அதற்குரிய வழிவகைகளைத் தேடுவதே அரசாங்கத்தின் குறியாக உள்ளதால் தமிழ்க் கட்சிகளைத் தொடர்ந்தும் தம்முடன் வைத்திருக்க அரசாங்கம் விரும்புகிறது. அதேவேளை வடக்கு கிழக்கு தேர்தல் இடம் பெற்ற மாகாணசபை இயங்கினால் புலிகள் இயக்கத்தை ஓரம் கட்டியதாக உலகிற்கு காட்டி அரசியல் இயல்பு வாழ்கை திரும்பி விட்டதாகக் கூறிக் கொள்ளவும் முடியும். இவை அரசாங்கத்தின் உயர் பீடத்தில் பரிசீலிக்கப்படும் விடயங்களாகும். ஆனால் வடக்கு கிழக்கு மாகாணசபை இயங்கினால் அது இணைந்த மாகாணசபை நிர்வாகமாகி இனைப்பு நிரந்தரமாகி விடுமோ என்ற அச்சம் அரசாங்கத்தின் பேரினவாதிகளுக்கு உள்ளது. எனவே வடக்கு கிழக்கு மாகாணசபை விடயமாக அரசாங்கம் உறுதியான முடிவை எடுக்க முடியாது தழும்புகின்றது.

இவை எல்லாவற்றையும் விட புலிகள் இயக்கம் வகிக்கும் பாத்திரத்தைப் பற்றி அரசாங்கம் கணக்கில் கொள்ள மறுக்கிறது. வடக்கு கிழக்கில் மாகாணசபைத் தேர்தல் நடத்துவது பெரிய விடயமல்ல. ஆனால் தொடர்ந்து நிர்வாகம் நடாத்துவதும் அதன் மூலம் இயல்பு வாழ்க்கை சமாதான சூழல் ஏற்படுத்துவதும் தான் முக்கிய பிரச்சினையாகும். இப்படித்தான் உள்ளூராட்சித் தேர்தலை நடாத்திய பின் அதன் விளைவாகப் படு கொலைகள் தொடர்வதைத்தான் காணமுடிகிறது.

எனவே அரசாங்கம் தொடர்ந்தும் இனப்பிரச்சினை விடயத்தில் பேரினவாத அரசியல் சூதாட்டத்தை நடாத்தவும் அதில் தமிழ்க் கட்சிகளைக் காய்களாக நகர்த்தவும் முயல்வது மேலும் யுத்தத்தை நீடிக்கவே செய்யும். அதை விடுத்து வடக்கு கிழக்கு மாகாணசபைத் தேர்தலோ இடைக்கால நிர்வாகமோ என்பதற்குப் பதிலாக யுத்தத்தை நிறுத்தி புலிகள் இயக்கம் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடாத்தி நியாயமான அரசியல் தீர்வுக்கு வரும் வழிகளில் செயல்படுவதையே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். அரசாங்கம் தமிழ் மக்களின் உண்மையான அபிலாஷைகளுக்கு செவிமடுத்து செயல்படும் என எளிதில் எவரும் எதிர்பார்க்க முடியாத சூழலே நிலவுகிறது. ஆனால் தமிழ் சிங்கள முஸ்லீம் மக்கள் ஒன்றிணைந்து வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பது தான் ஒரே வழியாகும்.

## கொழும்பில் கிளிங்டன் கொடும்பாவி எரிப்பு!

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் முன்னால் யூகோஸலேவியர் மீதான நேட்டோ குண்டு வீச்சை எதிர்த்தும், கோசோவோ அல்பானிய இன மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கும்படி வற்புறுத்தியும் ஆர்ப்பாட்ட மறியல் இயக்கம் நடாத்தப்பட்டது. புதிய இடதுசாரி முன்னணி தலைமை தாங்கிய இவ் ஆர்ப்பாட்டத்தில் பலநூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டு அமெரிக்க-பிரித்தானிய-நேட்டோ எதிர்ப்பு கோஷங்களை முழக்கமிட்டனர். அங்கு கிளிங்டனின் கொடும்பாவி கிழிக்கப்பட்ட அமெரிக்க தேசியக் கொடியுடன் வைக்கப்பட்டிருந்தது. ஆர்ப்பாட்ட முடிவில் கொடுப்பாவியும் கொடியும் பலத்த எதிர்ப்புக் கோஷங்கள் மத்தியில் தீ வைத்து கொழுத்தி எரிக்கப்பட்டது. அதன் பின் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர்களான விக்கிரமபாகு கருணாரத்தின, சி.கா. செந்திவேல், பற்றிக் பெர்ணாண்டோ, சிறிதுங்க ஜயசூரியா ஆகியோர் உரை யாற்றி ஆர்ப்பாட்ட மறியல் இயக்கத்தை முடித்து வைத்தனர். ●




யுத்தத்திற்கும் தனியார் மயத்திற்கும் எதிராக புதிய இடதுசாரி முன்னணி நடாத்திய மேதினக் கூட்டம் ஆர்ப்பாட்ட ஊர்வலம். கூட்டத்தில் தோழர் சி.கா. செந்திவேல் உரையாற்றுவதையும் மேடையில் புதிய இடதுசாரி முன்னணித் தலைவர்கள் இருப்பதையும், ஊர்வலத்தில் புதிய ஜனநாயக கட்சித் தோழர்கள் அணிவகுத்து வருவதையும் படத்தில் காண்க.

U.K. Printers 25/1, Sri Sivanantha Veethi
வெளியிடுபவர் : இளையதம்பி தம்பையா இல:47, 3ம் மாடி கொழும்பு சென்ரல் சுப்பமார்க்கட் கொழும்பு-11